# தமிழரசு

1-11-1991 ரூ.1





# இந்த இதழில்...


| | |
|---|---|
| ஸ்ரீபெரும்புதூரில் பிரதமர், முதல்வர் அஞ்சலி ... | 2 |
| நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டம் தொடக்க விழா ... | 7 |
| மதுவிலக்கு: மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்துள்ள நடவடிக்கைகள் ... | 15 |
| பிற்படுத்தப்பட்டோர் வாழ்க்கைத்தரம் உயர்ந்திட ... | 17 |
| கைவினைஞர்கள் வாழ்க்கைத்தரம் மேம்பட கதர் கிராமத் தொழில் வாரியப் பணிகள் ... | 21 |
| குடல் புண் ... | 24 |
| சிறப்புமிக்க சிறுசேமிப்பு ... | 28 |
| ஆடு வளர்ப்போம்! ... | 30 |
| தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் தொடக்க விழா ... | 33 |
| இடைப்படு காடுகள் திட்டம் ... | 39 |
| நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டம் — ஒரு கண்ணோட்டம் ... | 41 |
| பெரியார் மாவட்ட வளர்ச்சிப் பணிகள் ... | 44 |
| நாகப்பட்டினம் — ஒரு வரலாற்றுப் பின்னணி ... | 46 |



தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2022

ஐப்பசித் திங்கள் - 15

மலர்: 22 இதழ்: 9

1-11-1991


## தமிழக அரசு ஊழியர்களுக்கு அகவிலைப்படி உயர்வு

தமிழக அரசு ஊழியர்களின் அகவிலைப்படியை உயர்த்த, தமிழக முதல்வர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்கள் உத்தர விட்டுள்ளார்.

மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையான இந்த அகவிலைப்படி உயர்வு 1991 ஜூலை முதல் தேதியிலிருந்து அமல்படுத்தப்படும். இதன்படி, மாதம் ரூ.3,500 வரை ஊதியம் பெறுபவர்களுக்கு 60 சதவிகிதம் அகவிலைப்படி வழங்கப் படும். இதனால் குறைந்தபட்ச அகவிலைப்படி உயர்வு ரூ.67 ஆகவும், அதிகபட்ச அகவிலைப்படி உயர்வு ரூ.315 ஆகவும் இருக்கும்.

ஜூலை முதல் தேதியிலிருந்து அக்டோபர் மாதம் வரையிலான அகவிலைப்படியின் நிலுவைத் தொகை உடனடியாக ரொக்கமாக வழங்கப்படும். அரசின் நெருக்கடி யான நிதிநிலையைக் கருத்தில் கொண்டு மேற்படி நிலுவைத் தொகையினை அரசு ஊழியர்கள் தாமாக முன்வந்து சிறுசேமிப்புத் திட்டங்களில் சேமிக்க வேண்டும் என்று தமிழக முதல்வர் வேண்டு கோள் விடுத்துள்ளார்.

இந்த அகவிலைப்படி உயர்வினால் அரசு ஊழியர்கள், உள்ளாட்சி அமைப்புகளில் பணியாற்றுவோர், அரசு மானியம் பெறும் கல்வி நிலை யங்களில் பணிபுரியும் ஆசிரியர்கள் உட்பட சுமார் 10 இலட்சம் அரசு ஊழியர்கள் பயனடைவார்கள். இந்த அகவிலைப்படி உயர்வு காரண மாக அரசுக்கு ஆண்டொன்றுக்கு கூடுதலாக ரூ.128.16 கோடியும், நடப்பு நிதியாண்டில் (1991-92) ரூ.85.44 கோடியும் செலவாகும்.



# ஸ்ரீபெரும்புதூரில் பிரதமர், முதல்வர் அஞ்சலி

முன்னாள் இந்தியப் பிரதமர் அமரர் ராஜீவ் காந்தி அவர்கள் உயிர்நீத்த இடத்தில் அஞ்சலி செலுத்துவதற்காக, மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. பி.வி.நரசிம்ம ராவ் அவர்கள் ஒரு நாள் பயணமாக 25.10.91 அன்று சென்னை வந்தார். அன்று பிற்பகல் சென்னை மீனம்பாக்கம் விமான நிலையம் வந்தடைந்த மாண்புமிகு பிரதமர் அவர்களை, மேதகு தமிழக ஆளுநர் திரு. பீஷ்ம நாராயண் சிங், மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி ஜெ.ஜெயலலிதா, சட்டப் பேரவைத் தலைவர் திரு சேடப்பட்டி முத்தையா, சட்டப்பேரவைத் துணைத் தலைவர் பேராசிரியர் க.பொன்னுசாமி மற்றும் அமைச்சர் பெருமக்கள் ஆகியோர் மாலை அணிவித்து வரவேற்றனர்.

பின்னர் பிரதமர் திரு நரசிம்ம ராவ் அவர்களும், முதல்வர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்களும் ஹெலிகாப்டர் மூலம் ஸ்ரீபெரும்புதூர் புறப்பட்டுச் சென்றனர்.

ஸ்ரீபெரும்புதூர் சென்றடைந்ததும் உத்திரப்பிரதேசம் மாநிலம் அமேதியிலிருந்து பாதயாத்திரைக் குழுவினர் கொண்டு வந்த புனித மண்ணை, பிரதமர் அவர்கள் பெற்று, அமரர் ராஜீவ் காந்தி நினைவிடத்தில் தூவி, பாரதத்தின் பல புண்ணியத் தலங்களிலிருந்து கொண்டு வந்த புனித நீரை அதன் மீது தெளித்தார். பின்னர் பிரதமர் திரு. நரசிம்ம ராவ் அவர்களும், முதல்வர் ஜெ.ஜெயலலிதா அவர்களும் ராஜீவ் காந்தி நினைவிடத்தில் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார்கள். பிறகு, இருவரும் ராஜீவ் காந்தி நினைவிடம் அருகே தனித்தனியாக மரக்கன்றுகள் நட்டனர்.

பின்னர், ஸ்ரீபெரும்புதூர் அரசினர் மேல் நிலைப்பள்ளி மைதானத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு பிரதமர் அவர்களும், முதல்வர் அவர்களும் பேசினார்கள்.

**மாண்புமிகு முதல்வர் உரை**

முதலில் திரு பி.வி.நரசிம்ம ராவ் அவர்களுக்கு முதல்வர்

ஜெ.ஜெயலலிதா அவர்கள் பொன்னாடை அணிவித்தார். பின்னர் முதல்வர் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டார்:

**நம்** அனைவர் நெஞ்சங்களிலும், நீங்காத்துயரச் சுமையைத் தாங்கி நிற்கும் நிலையை உண்டாக்கிவிட்ட அமரர் ராஜீவ் காந்தியின் படு கொலை நிகழ்ந்த மண்ணில், கூடியுள்ள உங்கள் அனைவர் சார்பிலும் எனது கண்ணீர் அஞ்சலியை முதற் கண் தெரிவித்துக்கொள்கிறேன்.

மனிதப் புனிதர்கள் வரிசையில் ஒருவராய் அமரத்துவம் பெற்றுவிட்ட அவரது ஆன்ம சாந்திக்கென, பாரத தேசத்தின் புண்ணிய ஸ்தலங்கள் பலவற்றில் இருந்து கொண்டு வரப் பட்டுள்ள புனித நீரைப் பெற்று, அவரது நினைவைப் போற்றி ஆராதிக்கும் நிகழ்ச்சி என்பதால், நம் விழி நீரைத் துடைத்துக் கொண்டு, இச்சிறப்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டுள்ளோம்.

மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு பி.வி. நரசிம்மராவ் அவர்கள் பிரதமராகப் பதவியேற்றபின், முதல் முறையாகத் தமிழகத்திற்கு வருகை தந்துள்ளார்கள். அவரை என் சார்பிலும், தமிழக மக்களின் சார்பிலும் அன்புடன் வரவேற்கின்றேன்.

அதோடு, இந்தியத் திருநாட்டின் பெருமையையும், புகழையும் காக்க, அவரது கரத்தை வலுப்படுத்த, தமிழகம் என்றென்றும் துணை நிற்கும் என்பதையும், இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். எனது இந்த உறுதிமொழிக்குப் பின்னால் ஒரு சரித்திரமே இருக்கிறது என்பதை நாம் அனைவரும் அறிவோம்.

அன்னை இந்திராகாந்தி அவர்களும், இதயதெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களும், அன்று ஏற்படுத்திக் கொண்ட உடன்பாடும், இன்று நாம் ஒன்றுபட்டு செயல்படுகின்ற அரசியல் பண்பாடும், தொடர்ந்து என்னாலும், அமரர் ராஜீவ் காந்தி அவர்களாலும் வலுப்படுத்தப்பட்டு, இன்று அது எல்லாவகையிலும் வலுவடைந்து, மக்களின் வாழ்த்துதலுக்குப் பாத்திரமாய் இருந்து வருகிறது என்பதை, இந்நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

தமிழகத்தின் முன்னேற்றத்திற்காக, தமிழக மக்களின் நலனுக்காக ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட இந்த உடன்பாடு, நமது இரு கட்சிகளிடையே ஏற்படும் சிறுசிறு கருத்து வேறுபாடுகளால் அறுந்துபோகாது, ஒரு சிலரின் தனிப்பட்ட கோப தாபச் செயல்களினாலும், எவ்விதத்திலும் பாதிக்கப்படாது என்பதை, இங்கே தெளிவாகக் குறிப்பிட விரும்புகிறேன்! இந்த உடன்பாடு மேலும் தொடரும்; வளரும்; வலுப் பெறும் என்ற எனது நம்பிக்கை வளர, மூத்த அரசியல் பாரம்பரியமும், சீரிய தலைமையும் கொண்டுள்ள தோழமைக் கட்சியும், நல்ல ஒத்துழைப்பு நல்குமென்று நம்புகிறேன்!

நமது பாரதப் பிரதமர் அவர்கள் மேற்கொள்ளும் நல்ல திட்டங்களுக்கும், சிறந்த முடிவுகளுக்கும், நாங்களும் என்றென்றும் உறுதுணையாக இருப்போம் என்று உறுதி கூறுகின்றேன்!

இந்த உறுதியினை நாட்டு மக்களுக்குத் தெரிவிக்க, நாம் கலந்து கொண்டிருக்கிற இன்றைய நிகழ்ச்சி, நமக்கு மிகுந்த மன வேதனையையும், எண்ணிப் பார்ப்பதற்கே இதயம் நடுங்குகிற பின்னணியையும் கொண்ட சோக நிகழ்ச்சியாகும். தமிழகத்தையும், தமிழக மக்களையும் தன் உயிரினும் மேலாக மதித்து, அன்பு செலுத்தி வந்த அமரர் ராஜீவ் காந்தி அவர்கள், தமது இன்னுயிரை இந்த மண்ணிலே ஈந்தார் என்று எண்ணும் பொழுது, என் இமைகள் நனைகின்றன; இதயம் கனக்கின்றது!

இந்தியத் திருநாட்டை இருபத்தி ஓராம் நூற்றாண்டிற்கு அழைத்துச் செல்ல முற்பட்ட இணையற்ற தலைவர்; உலகத்திலுள்ள அனைத்து



மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு பி.வி. நரசிம்ம ராவ் அவர்கள், ராஜீவ் காந்தி நினைவிடத்தில் மரக்கன்று நடும் காட்சி.



மாண்புமிகு முதல்வர் அவர்கள், ராஜீவ் காந்தி நினைவிடத்தில் மரக்கன்று நடும் காட்சி

இளைய தலைமுறையினருக்கும் வழி காட்டியாய் இருந்த பேராளர்; நட்பிற்கும், அமைதிக்கும், ஒழுக்கத்திற்கும் உறைவிடமாய்த் திகழ்ந்த பண்பாளர், இந்தத் தமிழ் மண்ணில் உயிரிழந்தார் என்று நினைத்துப் பார்க்கவே நெஞ்சமெல்லாம் குமுறுகிறது!

தமிழகம் என்பது தாயின்மடி என்று நினைத்து, அன்னையின் அரவணைப்புக்கு ஏங்கி, ஆசையுடன் வருகிற குழந்தையைப் போல, எப்போதும் தமிழகம் நோக்கி வருபவர் ராஜீவ் காந்தி அவர்கள்.

மக்களோடு மக்களாய் கலந்து பழகும் மகிழ்ச்சியான அனுபவத்தை, இங்குதான் பெறமுடியும் என்று நம்பியவர் அவர். ஏனென்றால், அப்படியொரு காலம் தமிழகத்தில் இருந்தது. அந்த நினைப்பில் எங்கு அச்சமில்லை என்று நினைத்து, எங்கு அமைதி குடியிருக்குமென்று நம்பி வந்தாரோ, அந்த மண்ணில் துரோகம் அவ்வரைக் கொன்றிடக் காத்திருந்தது என்பதையும், எங்கு வஞ்சகமும் வன்முறையும் இல்லை என்று நினைத்து வந்தாரோ, அங்கு அவரது உயிரை உறிஞ்சிக் குடிக்கும் பயங்கரம் அவரைப் பலிகொள்ள ஒளிந்திருந்தது என்பதையும், இன்றும் நம்மால் சகித்துக்கொள்ள முடியவில்லை.

ராஜீவ் என்றால் 'தாமரை' என்பது பொருள். யாராவது பூவுக்கு வெடி வைப்பார்களா? மலருக்கு வெடி வைக்கும் அந்த மாபாதகம் தமிழ் மண்ணிலா நடக்க வேண்டும்? ஒரு அழகிய தாமரைப்பூ வெடி வைத்துத் தகர்க்கப்பட்ட இடமாகத் தமிழகத்தை மாற்றியவர்களே- உங்கள் நெஞ்சைத் தொட்டுச் சொல்லுங்கள். நீங்கள் செய்வது நியாயந்தானா?

இராமானுசர் அன்பு நெறியைப் பரப்ப அவதரித்த இந்த இடத்திலேயா, தமிழகத்தின் சரித்திரத்தை மாசுபடுத்துகிற பச்சைப் படுகொலை நடத்தப்படவேண்டும்!

தமிழகத்திற்கு வரும்போதெல்லாம், தன் தாய் வீட்டிற்கு வரும் பாச உணர்வோடு வந்து செல்லும் அந்த ஒப்பற்ற தலைவனின் உதிரம், இந்தத் தமிழக மண்ணிலே சிதறி, அவர் உயிர் நீங்கும் நிலை ஏற்பட்டதென்றால், அது நம் தமிழகத்தைப் பாவபூமி ஆக்கிவிட்டதே! ஆறு கோடி தமிழ் மக்களின் உள்ளமும் உடலும் கூனிக் குறுகச் செய்யும் நிகழ்ச்சியாக நிகழ்ந்து விட்டதே! உலகச் சரித்திரத்தில் படிந்துவிட்ட இப்பாவக் கறையை நாம் எப்படித் துடைக்கப் போகின்றோம்?

எது செய்தாலும் ராஜீவ் காந்தியின் இழப்பை ஈடுசெய்ய முடியாதுதான். ஆனால், ஒன்றை மட்டும் நாம் நிச்சயமாகச் செய்யலாம்.

இக்களங்கத்திற்குக் காரணமானவர்களை அடையாளம் கண்டுகொண்டு, அவர்களை அடியோடு அரசியலிலிருந்தும், பொது வாழ்க்கையிலிருந்தும் புறக்கணித்து, ஒதுக்க வேண்டும். அதில் ஒருபகுதியைத்தான் தமிழக மக்கள், நடந்து முடிந்த பொதுத் தேர்தலில் செய்தார்கள் இனியும் தொடர்ந்து செய்யத் தயாராக இருக்கிறார்கள். குறிப்பாக, கயவர்களைத் தமிழகம் கண்டுகொண்டு விட்டது. எனவே, இது போன்ற கொடியவர்களின் செயலுக்கு உறுதுணையாக உடன் செல்பவர்களுக்கு, இனி தமிழக மக்கள் எந்தவகையிலும் உதவ மாட்டார்கள்.

அமரர் ராஜீவ் விரும்பிய நல்லாட்சி, தமிழகத்தில் மலர்ந்துள்ளதைக் காணவும், அவர் வெளியேற்ற விரும்பிய தீயசக்திகள் வெளியேற்றப்பட்டுள்ளனர் என்பதைப் பார்த்து மகிழவும், அவர் நம்மிடையே இல்லை என்ற ஏக்கம் நெஞ்சை நெருடுகிறது!

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுக்கு உடல்நலக் குறைவு ஏற்பட்டு, அமெரிக்காவில் சிகிச்சை பெற்றபொழுது, அவருக்கு உதவிய அன்னை இந்திரா காந்தி அம்மையார் படுகொலை செய்யப்பட்டார். அதனைத் தொடர்ந்து ராஜீவ் காந்தி அவர்கள் பிரதமரான அந்த மாறுபட்ட சூழ்நிலையிலும், புரட்சித் தலைவருக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் அவர் செய்தார்.

ஒரு மாநிலத்தின் முதலமைச்சருக்கும், நாட்டின் பிரதமருக்கும் இடைய இருந்த நட்பாக, அவர்களது நட்பைக் கருதமுடியாது. அவர்களிருவரின் அன்பும் நட்பும், தாங்கள் வகிக்கும் பதவியின் அடிப்படையில் அமைந்ததாகவும் இருக்கவில்லை. அரசியல் வேறு, ஆத்ம நட்பும், பாசமும் வேறு என்பதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாக, நம் கண்முன் வாழ்ந்த தலைவர்கள் இவர்கள் என்று குறிப்பிட்டால், அது மிகையாகாது. இவர்களைத் தமிழக மக்கள் என்றென்றும் மறக்க முடியாது. இவர்கள் ஏற்படுத்திய இணைப்பை எவராலும் உடைக்க முடியாது.

இந்திய அளவில் மட்டுமல்ல, உலக அரங்கில் நம் நாட்டின் பிரதமராக, ராஜீவ் கலந்து கொண்ட பல்வேறு மாநாட்டு மற்றும் கூட்ட நிகழ்ச்சிகளை, நாம் தொலைக் காட்சியில் கண்டிருக்கிறோம். அவர் கலந்துகொண்ட எந்த நிகழ்ச்சியிலும், அதில் சிலவற்றில் அவர் தலைமைப் பொறுப்பை ஏற்காவிட்டாலும் கூட, உலகின் கண்களுக்கு அக்கூட்டத்தின் ஒரே தலைவராகத் தோன்றியவர் அமரர் ராஜீவ் காந்தி அவர்களே. பன்னாட்டுத் தலைவர்கள் கூடும் அப்படிப்பட்ட கூட்டங்களில், வழக்கமாக அவர்கள் அனைவரும் ஏகமனதாக ஏற்றுக் கொண்ட ஒரே மாபெரும் தலைவர், ராஜீவ் என்ற உன்னதமான உயரிய நிலையை அவர் தமது செயல் திறனால், சொல்லாற்றலினால், சிறந்த அணுகுமுறையினால் அடைந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

எதிர்கால இந்தியாவைத் தலைநிமிர்ந்த நாடாக உயரச் செய்திட, இளைய தலைமுறையினருக்கு வழிகாட்டி, அழைத்துச் சென்ற ஒரு மாபெரும் தலைவரை நாம் இன்று இழந்து நிற்கின்றோம். அண்டைய நாட்டின் விஷமிகள், தமிழகத்திலுள்ள சில தீய சக்திகளுடன் சேர்ந்து, தீட்டிய சதித் திட்டத்தின் காவுப்பொருளாய், ராஜீவ் கொல்லப் பட்டுவிட்டார். இந்தியத் திருநாட்டை எக்காலத்திலும், எந்தச் சூழ்நிலையிலும் துண்டாட விடமாட்டேன் என்று சூளுரைத்தவர், அமைதிப் பூங்காவிலேயே அமரர் ஆகிவிட்டார்.

கொடுமையான அந்தக் குண்டு வெடிப்பு - இதோ இந்த மண்ணில் தான், இங்குதானே நிகழ்ந்தது!



உத்திரப்பிரதேச மாநிலத்தில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் பாதிக்கப் பட்ட மக்களுக்கு நிவாரணம் அளிக்க ரூ. 12 இலட்சத்திற்கான காசோலையை அ.இ.அ.தி.மு.க.-வின் சார்பில் மாண்புமிகு முதல்வர் அவர்கள், மாண்புமிகு பிரதமர் அவர்களிடம் வழங்கினார்.

கொடூரமான அந்தக் கொலைத் திட்டம் சதிகாரர்களால் இங்கு தானே நிறைவேற்றப்பட்டது!! அந்தக் குண்டு வெளிநாட்டு வெடிமருந்துகளைக் கொண்டிருந்தாலும், உள்நாட்டவரின் உதவியுடன் உருவாக்கப்பட்டது என்று அறியும்பொழுது, நாம் வெட்கித் தலைகுனிய வேண்டியுள்ளது!!!

அந்த வெடிகுண்டின் சக்தியைக் கணக்கிட்டவர்கள், அதன் பயங்கரத் தன்மையையும் அழிப்புச் சக்தியையும் வெளியிட்டுள்ளனர். இவ்வளவு சக்திவாய்ந்த நவீன வெடிகுண்டு, தன் பாதங்களைத் தொட்டு வணங்கிய ஒரு பெண்ணால் வெடித்து, அது தன் நெஞ்சைப் பிளந்து நெற்றியைச் சிதறடித்த நேரத்திலும், என் இந்தியத் திருநாட்டைத் துண்டாட விடமாட்டேன் எனச் சூளுரைப்பதுபோல், தன் இரு கரங்களிலும் தன் தாய் நாட்டைப் பற்றி அரவணைத்த வண்ணமே, உயிர் துறந்தார் என்பதிலிருந்து, தன் தாயகத்தை எந்த அளவு தன் உயிரினும் மேலாக நேசித்தார் என்பதை நாம் உணர முடியும்.

இன்றைய தினம், இங்கு கூடியுள்ள நாம் மட்டு அல்ல, இந்தியத் திருநாட்டின் ஒவ்வொரு குடிமகனும் ஒரு சபதத்தை ஏற்க வேண்டும்; 'எக்காரணத்தைக் கொண்டும் நம் தாய் நாட்டை எவரும் துண்டாட அனுமதிக்கமாட்டோம்; அதுபோன்ற தீய எண்ணமுள்ளவர்கள் எவராயினும், அவர்களுக்குக் கூலிப்படையாக உள்ளவர்கள் எவராயினும், அவர்களை இந்தியத் திருநாட்டில் உலவ விட இடமளிக்க மாட்டோம்! என்ற உறுதியான சபதம் எடுக்கவேண்டும்.

அதோடு அந்த நல்லவரின் நினைவைப்போற்ற, எதிர்காலச் சந்ததியினருக்கு அவரது வாழ்க்கையை, வரலாற்றை நினைவுபடுத்த, நாம் தேவையான அனைத்தையும் செய்தாக வேண்டும்.

அமரர் ராஜீவ் காந்தியின் நினைவாக, அவர் உயிர் பிரிந்த இடத்தில் ஓர் நினைவாலயம் அமைக்க தமிழக அரசு முடிவெடுத்து, இப்பகுதியில் 12.19 ஏக்கர் நிலத்தை ரூ.8,41,110 செலவில் வாங்கியுள்ளது. மைய அரசின் கோரிக்கைக்கிணங்க, தமிழக அரசு வாங்கியுள்ள 12.19 ஏக்கர் நிலத்தையும், ராஜீவ் காந்தி நின்னவாலயக் குழுவிடம் விரைவில் ஒப்படைக்க உள்ளோம். இக் குழுவில் என்னையும் ஒரு முக்கிய உறுப்பினராகப் பணியாற்றச் செய்துள்ளார் பாரதப் பிரதமர் அவர்கள்.

அக்குழுவின் சார்பாக, இந்த நினைவாலயத்தை நிர்மாணிக்கும் பணியைத் தமிழக அரசே மேற்கொண்டு, செம்மையாகவும், சிறப்பாகவும், விரைந்தும் முடித்துக் கொடுக்கும் என்ற உறுதியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மரணத்தின்போதும், பாரத மாதாவைத் தொழுதுகொண்டே உயிர் துறந்த அமரர் ராஜீவ் காந்தியின் நினைவாலயத்தை, இனி வழி வழி வரும் கோடிக்கணக்கான இந்தி

யர்களுக்கு, நாட்டுப்பற்றை நல்குகிற வழிபாட்டைத் தலமாக ஆக்கிவைப் போம். சத்தியத்தால் ஏற்றப்பட்டு, துணிவால் உயர்த்தப்பட்ட இந்த இலட்சிய விளக்கு, அணையா தீப மாக ஸ்ரீபெரும்புதூரில் என்றும் எரியும்; இனி எட்டுத் திசைகளுக்கும் தனது வெளிச்சத்தை வழங்கும்!

ஆறுகோடித் தமிழக மக்களின் சார்பாகவும், என் சார்பாகவும், அனைத்திந்திய அண்ணா தி.மு.க. தொண்டர்களின் சார்பாகவும், அமரர் ராஜீவ் அவர்களுக்கு என் கண்ணீர் அஞ்சலியை மீண்டும் காணிக்கையாக்கி, நாம் கண்ணீர் அஞ்சலி செலுத்தும் இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்ட, மாண்புமிகு பிரதமர் அவர்களுக்கு என் நன்றியைத் தெரி வித்துக் கொள்கிறேன்.

உத்திரப்பிரதேச மாநிலத்தில் பூமி அதிர்ச்சியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் அளிக்க, பிரதமர் அவர்களின் நிவாரண நிதிக்கு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், ரூ.12 இலட்சத்திற்கான காசோலையை இப்போது வழங்க உள்ளேன். அதைப் பெற்றுக் கொள் ளுமாறு பிரதமர் அவர்களைக் கேட்டுக் கொண்டு அண்ணா நாமம் வாழ்க! புரட்சித் தலைவர் நாமம் வாழ்க! எனக் கூறி விடைபெறு கிறேன் நன்றி! வணக்கம்!

பிறகு, அமரர் ராஜீவ் காந்தி அவர்கள் உயிர்நீத்த இடத்திலிருந்து எடுக்கப்பட்ட மண் அடங்கிய கல சத்தை முதல்வர் அவர்கள் பிரதமர் அவர்களிடம் வழங்க, பிரதமர் அதைப் பெற்று அமேதியிலிருந்து வந்த பாத யாத்திரிகக் குழுவின் தலைவர் திரு ஜெகதீஸ் பியூஸ் அவர் களிடம் கொடுத்தார்.

**மாண்புமிகு பிரதமர் உரை:**

பின்னர் பிரதமர் அவர்கள் உரையாற்றினார். பிரதமர் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டார்:

"நாம் அனைவரும் ஒன்று. இந்தியாவை யாராலும் பிரிக்க இயலாது. எம்மதத்தவராக இருந் தாலும், எந்த மாநிலத்தைச் சேர்ந்த வராயினும், எந்த மொழியைப் பேசு பவராயினும் அனைவரும் சமம். அனைவரும் இந்தியர் என்ற கருத்தை வலியுறுத்தி வந்தவர்களில்

★ நம்மிடையே தீண்டாமையும், சாதியும் உள்ளவரை, சமதர்மமோ, ஜனநாயகமோ தழைக்க முடியாது. நாடு முன்னேற, இந்தக் கொடுமைகள் ஒழிக்கப்பட வேண்டும்.

—பண்டித நேரு

முதன்மையானவர் ராஜீவ் காந்தி அவர்கள். அவர் விட்டுச் சென்ற தாரக மந்திரத்தை நம் வாழ்நாள் முழுவதும் நாம் கடைப்பிடிக்க வேண்டும். அவர் வழியில் நடந்து நாட்டின் ஒருமைப்பாட்டை நாம் பாதுகாக்க வேண்டும். அவர் விட்டுச் சென்ற நாட்டுப் பணிகளைச் செய்து முடிப்பது நமது முதல் கடமை. அதுதான் நாம் அவருக்குச் செய்யும் தொண்டு.

"ராஜீவ் ஒரு மாமனிதர். அவர் இந்திய நாடு 21-ஆம் நூற்றாண்டை நோக்கி நடைபோட வேண்டும் என்று கருதினார். இந்த மண்ணில் வாழ்பவர்கள் சகோதர உணர் வோடு வாழவேண்டுமென விரும்பி னார். அவர் நாட்டின் எந்தப் பகு திக்குச் சென்றாலும் அன்போடு மக்களுடன் பழகி வந்தார். இந்திய மக்கள் அனைவரும் அவரை அன் புடன் நேசித்தனர். நமது நாட்டுக் காக மட்டும் அவர் வாழ்ந்தவர் அல்ல. ஒடுக்கப்பட்ட மக்கள் உலகில் எங்கிருந்தாலும், அவர்களுக் காகக் குரல் கொடுத்தார். உலகத் தலைவர்கள் அனைவரிடமும் ராஜீவ் தொடர்பு கொண்டிருந்தார். மாண்டுபோன அவரை நாம் மீண்டும் கொண்டுவர முடியாது. அவர் விட்டுச் சென்ற செய்தியைக் கடைப் பிடிப்பதுதான் நாம் அவருக்குச் செய்யும் சிறந்த தொண்டாகும்.

"ராஜீவ் வகுத்துக் கொடுத்த தேர்தல் அறிக்கையையும், வாக்குறுதி களையும் மத்திய அரசும், காங்கிரஸ் ஆட்சி நடத்தும் மாநிலங்களும் நிறை வேற்ற உறுதியாகப் பாடுபடும். தமிழ்நாட்டில் காங்கிரஸ்-அஇஅதிமுக அரசியல் கூட்டணியை உருவாக்கிய சிற்பி ராஜீவ் காந்தி அவர்கள். அவர் ஏற்படுத்திய இந்தக் கூட்டணி என்றும் நீடிக்கும். இந்த உறவு பலப்படுத்தப்படும். மேலும் உறுதிப் படுத்தப்படும். தமிழக மக்களுக்கு ராஜீவ் காந்தி என்னென்ன வாக் குறுதிகளை அளித்தாரோ அவை அனைத்தும் நிறைவேற்றப்படும் என்ற உறுதியையும் அளிக்கிறேன். ராஜீவ் மறைந்த இடத்தில் நினைவு மண்டபம் எழுப்ப தமிழக அரசு அதற்குரிய இடத்தை அன்போடு வழங்கி உள்ளது. இந்த இடத்தில் ராஜீவ் காந்தி பெயரில் தேசிய நினைவுச் சின்னத்தை எழுப்ப இருக்கிறோம். தமிழக அரசின் உதவியோடு மத்திய அரசு இங்கு நினைவு மண்டபம் அமைக்க உள்ளது.

"அடுத்து வருகிற 25 ஆண்டு களுக்கு இந்தியாவிற்கு நிலையான தலைமைதர ராஜீவ் விரும்பினார். ஆனால், நெஞ்சில் ஈரமற்ற கொடூரப் பாவிகள் அவரைப் பயங்கரமாகக் கொலை செய்து விட்டனர். அவரைக் கொலை செய்த தீய சக்திகள் கடுமையாகத் தண்டிக்கப்படுவார்கள். நமது சக்தி, திறமை ஆகியவற்றை முழுமையாகப் பயன்படுத்தி இந்தத் தீய சக்திகள் ஒடுக்கப்படும்.

"உத்திரப்பிரதேச மாநிலத்தில் பூகம்பத்தால் பாதிக்கப்பட்ட மக் களுக்கு உதவுவதற்காக, தமிழக முதல்வர் அவர்கள் ஒரு பெரும் தொகையை அன்போடு வழங்கியுள் ளார்கள். அதற்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள் கிறேன். நாம் அளிக்கும் பணம் எவ்வளவாக இருந்தாலும், அது நாம் கொண்டுள்ள பற்றையும், பொறுப்புணர்வையும் உலகுக்கு உணர்த்துகிறது".

முன்னதாக, ஸ்ரீபெரும்புதூர் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி மரகதம் சந்திரசேகர் அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேச, தமிழகச் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் திரு. எஸ்.ஆர். பால சுப்பிரமணியம் அவர்கள் நன்றி கூறினார்.

மத்திய அமைச்சர்கள் திரு. ப.சிதம்பரம், திரு எம்.அருணாசலம், திரு. ரங்கராஜன் குமாரமங்கலம், தமிழக அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப் பினர்களும் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சித் தொகுப்பு:
—ஜெ.சந்திரன்

# மதுவிலக்கு

# மாண்புமிகு முதல்வர் அறிவித்துள்ள நடவடிக்கைகள்



**மா**ண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்கள் தலைமையில், 22.10.91 அன்று தலைமைச் செயலகத்தில், மாநில மதுவிலக்குப் பிரச்சாரக் குழுக் கூட்டம் நடைபெற்றது. அப்போது, அனைத்து உறுப்பினர் களின் கருத்துக்களைக் கேட்டறிந்த பின்பு, மாண்புமிகு முதல்வர் அவர்கள், அரசின் சார்பில் மேற்கொள்ளவிருக்கும் நடவடிக்கைகளை அறி வித்தார்.

**கள்ளச்சாராயம் ஒழிந்திட....**

கடந்த 4 மாதங்களில் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு காவல்துறையினரின் ஒத்துழைப்போடு மிகக் கடுமையான நடவடிக்கைகள் எடுத்ததன் காரண மாக, ஏறக்குறைய 90 சதவிகித கள்ளச் சாராயம் ஒழிக்கப்பட்டுவிட்டது. முழுமையான அளவில் கள்ளச் சாராயம் ஒழிக்கப்படுவதற்கான நடவடிக் கைகள் தொடர்ந்து எடுக்கப்படும்.

**ஒரு இலட்சம் இளைஞர்களுக்கு வேலை**

சமுதாயத்திற்கு நன்மை பயக்கும் வகையில் ஒரு இலட்சம் படித்த வேலையற்ற இளைஞர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, தமிழகம் முழுவதும் மது வின் தீமைகளைப் பொதுமக்களுக்கு விளக்கும் பிரச்சாரப் பணியில் ஈடுபடுத்தப்படுவார்கள்.

**பாடப் புத்தகங்களில்...**

பள்ளிகள், கல்லூரிகள் ஆகியவற்றின் பாடப் புத்தகங்களில் மதுவின் தீமைகளைப் பற்றிய கருத்துக்கள் பாடத் திட்டங்களாக இணைக்கப் படும்.

**மதுவிலக்குப் பிரச்சாரம்**

நாடு முழுவதும் கிராம வாரியாகவும், நகர வாரியாகவும் குழுக்களை ஏற்படுத்தி, அவை மூலமாக மதுவிலக்குப் பிரச்சாரம் செய்து மது ஒழிப்பு நடவடிக்கைகளில் மக்கள் ஈடுபடுத்தப் படுவார்கள்.

**ஊர்க்கட்டுப்பாடு**

கிராமங்களில் ஊர்க்கட்டுப்பாட்டைக் கொண்டு வருவதன் மூலம் குடிப் பழக்கத்தைக் களைய முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

**முழு நீளத் திரைப்படம்**

தொலைக்காட்சி, வானொலி, வீடியோ, திரைப்படம், செய்தித்துறை ஆகியவற்றின் மூல மாக மதுவிலக்குப் பிரச்சாரம் முடுக்கி விடப்படும். மேலும், மதுவின் தீமைகளை மக்களுக்கு உணர்த்த அரசாங்கமே முழு நீளத்திரைப்படத்தைத் தயாரித்து வெளியிடும்.

**நாடு முழுவதும் நாடகங்கள்**

நாடு முழுவதும் நாடகங்கள் நடத்துவதன் மூலமாகவும், செய்தித்தாள்களில் கதைகள், கட்டுரைகள் ஆகியவற்றைப் பிரசுரிப்பதன் மூலமும் மதுவிலக்குப் பிரச்சாரம் தீவிரப்படுத்தப்படும்.

**பத்திரிகைகளில்...**

நாளிதழ்களில் மதுவின் தீமைகளைப் பற்றி அவ்வப்பொழுது மக்களின் கவனத்தை ஈர்க்கின்ற வகையில் விளம்பரங்கள் வெளியிடப்படும்.

**இலவச மருத்துவப் பரிசோதனை முகாம்கள்**

தமிழகம் முழுவதும் நடத்தப்படவுள்ள இலவச மருத்துவப் பரிசோதனை முகாம்களில் மதுவின் தீமைகளைப் பொதுமக்களுக்குப் புரிய வைக்கின்ற வகையில் பிரச்சாரமும், மதுவினால் பாதிக்கப் பட்டவர்களுக்கு சிகிச்சையும் மேற்கொள்ளப்படும்.

**ஓட்டுநர்களின் உரிமம் ரத்து**

மது அருந்திவிட்டு வாகனங்களை ஓட்டுகின்ற ஓட்டுநர்களின் உரிமம் ரத்து செய்யவும் நடவடிக் கைகள் மேற்கொள்ளப்படும்.

**மாணவர்களுக்கான போட்டிகள்**

கல்லூரி மாணவ மாணவியர்களுக்கு மது விலக்குப் பிரச்சாரம் குறித்த நாடகங்கள், சிறு கதைகள், கட்டுரைகள், கவிதைகள் ஆகியவற்றில் போட்டி நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்படும்.

**மீட்பு மையங்கள்**

ஒவ்வொரு மாவட்டத்திலும் தனியார் மற்றும் சேவை நிறுவனங்களின் உதவியோடு (De-Addiction Centres) குடிப்பழக்கத்திலிருந்து மீட்பு மையங்கள் நிறுவப்படும். ●

**• தஞ்சைத் தரணியே விழாக்கோலம் பூண்டிருந்த காட்சியின் மாட்சி!**

**• தெருவெல்லாம் வாழ்த்து முழக்கங்கள்!**

**• எண்ணம் கவரும் வண்ண வரவேற்பு வளைவுகள்!**

**• பிரம்மாண்டமான பந்தலில் அலைகடலென மக்கள் வெள்ளம்!**

**• ரூ.88 கோடிக்கு நல்வாழ்வுத் திட்டங்கள்**

# நாகப்பட்டினம்



அக்டோபர்த் திங்கள் பதினெட்டாம் நாள், தமிழக வரலாற்றில் ஓர் பொன்னாள் ஆகும். ஆம். அன்றுதான் நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம் உதயமாகியது!

தொடக்க விழாவினையொட்டி, தஞ்சை மாநகரமே நெஞ்சை அள்ளும் காட்சித் தொகுப்பாக விளங்கியது.

தெருவெல்லாம் தோரணங்கள் அசைந்தாடின. மாண்புமிகு முதல்வர் அவர்களை வரவேற்கும் பதாகைகளும், எண்ணம் கவரும் வண்ண மிகு வரவேற்பு வளைவுகளும் ஆங்காங்கே காட்சியளித்தன. தஞ்சைத் தரணியே திருவிழாக் கோலம் பூண்டிருந்த காட்சியின் மாட்சியைக் காண முடிந்தது.

ஆடவர் மகளிர் குழந்தைகள் என மாண்புமிகு முதல்வர் அவர்களை வரவேற்க வழிமேல் விழி வைத்து ஆயிரக்கணக்கில், இலட்சக் கணக்கில் திரண்டிருந்தனர்.

விழா நடந்த நாகப்பட்டினம் வலிவலம் தேசிகர் பாலிடெக்னிக் விளையாட்டுத் திடலில் அமைக்கப் பட்டிருந்த பிரமாண்டமான பந்தலில், அலைகடலென மக்கள் கூட்டம், மலரும் புதிய மாவட்டத் தொடக்க விழாவினைக் காணவும்,

மாண்புமிகு முதல்வர் அவர்களின் உரையினைக் கேட்கவும் கூடியிருந்தது.

விழா மேடை, வண்ணமலர் களாலும், மின் விளக்குகளாலும் கண்ணைக் கவரும் வண்ணம் அமைக்கப்பட்டிருந்தது. மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்கள் விழா மேடைக்கு வருகை தந்தபோது, விண்ணதிர வாழ்த்து முழக்கங்கள் ஒலித்தன.

வண்ணமிகு விழா தொடங்கியது!
புதிய மாவட்டம் மலர்ந்தது!
குழுமியிருந்த மக்கள் முகங்களும் மலர்ந்தன!

### மாவட்டத்தின் சிறப்பு

சோழ வளநாடென்னும் தஞ்சைத் தரணி மகிழ்ச்சி பொங்க, ஆனந்த வெள்ளத்தில் குதூகலிக்கும் இந் நன்னாளில், அலை கடலெனத் திரண்டுள்ள உங்கள் அனைவரை யும் காணுவதில் பெரிதும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

கரிகால் சோழனும், ராஜ ராஜ சோழனும் பிறந்த மண், காவிரி அன்னை காலங்காலமாக ஓடி வளப் படுத்திய கழனிகளின் சொர்க்கம்; கவிச் சக்ரவர்த்தி கம்பனும், கற்புக் கரசி கண்ணகியும் பிறந்த பூமி; உலகையே வசப்படுத்தும் இசையும், பாடலும், நடனமும் தோன்றிய இடம்; மக்களாட்சித் தத்துவத்திற்கு மையை எடுத்துக்காட்டுவனவாகும். இந்திய நாட்டின் விடுதலை வர லாற்றில், உப்பு சத்தியாக்கிரகம் நடந்த சிறப்புப் பெறும் இடங்கள் இரண்டு ஆகும். அவற்றில் ஒன்று வடநாட்டில் உள்ள தண்டி ஆகும். மற்றொன்று இம்மாவட்டத்தில் இடம்பெறும் வேதாரண்யம் என்ற பெருமையும் இப்பகுதிக்கு உண்டு.

இன்னும் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமானால், இன்றைய இந்தியத் திருநாட்டின் குடியரசுத் தலைவரே, இம்மாவட்டத்தில் பிறந்தவர் என்று சிறப்பையும் பெற்றிருக்கின்றோம். இவ்வாறு இம்மாவட்டத்திற்கு நானும் உரிமை கொண்டாடக் காரணம், எனது மூதாதையர்கள் பிறந்து

# காயிதே மில்லத் மாவட்டம்
# தொடக்க விழா

## மாண்புமிகு முதல்வர் விழாப் பேருரை

மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்கள், நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டத்தைத் தொடங்கி வைத்து விழாப் பேருரை நிகழ்த் தினார். அப்போது அவர் குறிப் பிட்டார்:

'கண்ணியத்தின் மறுபெயர் காயிதே மில்லத்' எனப் பேரறிஞர் அண்ணா அவர்களால் புகழப்பட்ட, இந்திய இஸ்லாமிய இனத்தின் புகழ்மிக்க தலைவர்களில் ஒருவரான, பெருந்தகை முகமது இஸ்மாயில் அவர்களின் நினைவினை என்றும் பசுமையாகப் போற்றிடும் வகையில்- எங்கள் இதயதெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் எடுத்த முடிவின்படி, சீர்மிகு கடற்கரை நகரான இந்நாகப் பட்டினத்தைத் தலைநகராகக் கொண்ட, 'நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டத்தை' தொடங்கி வைப்ப தில் மெத்தப் பெருமையும் பூரிப்பும் கொள்கிறேன்.

முதல் முதல் வழிகாட்டிய குட வோலை முறையையும், உள்ளாட்சி நிர்வாக அமைப்பையும் நமக்கு அறிமுகப்படுத்திய நாடு என்ற சிறப்பினை எல்லாம் பெற்ற பண் டைய சோழ நாட்டின் ஒரு பகுதி தான், இன்று புதிய மாவட்டமாக அமைகிறது.

அண்ணல் காந்தியடிகளின் அன்பைப் பெற்ற தில்லையாடி வள்ளியம்மையின் புகழும் பெருமை யும், இம்மண்ணின் தியாகப் பெரு



வளர்ந்தது இதே சோழ மண்டலத் தில் உள்ள ஸ்ரீரங்கம் ஆகும்.

### புதிய மாவட்டம் உதயமாகிறது!

பல்வேறு சிறப்புக்களின் தொகுப் புத்தான் தஞ்சை மாவட்டம் ஆகும். இன்று புதிதாக அமையும் நாகப் பட்டினம்- காயிதேமில்லத் மாவட்டம், உலகப்புகழ் பெற்ற திருத்தலங்களை யும் தன்னகத்தே கொண்ட சீர்மிகு மாவட்டம் ஆகும். இந்துக்கள் பெரிதும் விரும்பும் சிக்கல் சிங்கார வேலன் திருக்கோயிலும், இஸ்லாமி யர்கள் மனங்கவர்ந்த நாகூர் தர்கா வும், கிறிஸ்தவர்கள் போற்றிப் புகழும் வேளாங்கண்ணி ஆலயமும், இங்கே அமைந்திருந்தாலும், அவை அனைத்தும் மத வேறுபாடின்றி அனைவரும் வழிபடும் ஸ்தலங் களாகத்திகழுவது,நமது வரலாற்றின் மத ஒற்றுமைக் கொள்கைகளுக்கு ஓர் சீரிய எடுத்துக்காட்டாக அமைந் துள்ளது.

இத்தனைப் புகழ், பெருமை, சிறப்பு ஆகியவற்றைப் பெற்ற இம் மாவட்டம், இதுவரையிலும் நிர்வாக

# நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டம்




வசதிக்காகக் கீழத் தஞ்சை மாவட்டம் என்று அழைக்கப்பட்டு வந்திருந் தாலும், முறைப்படி ஒரு தனி மாவட்டம் என்று அழைக்கப்பெறும் வாய்ப்பு பெறாமல் இருந்தது பெருங் குறையாகவே இருந்தது. அந்தக் குறையைப் போக்கவும், இப்பகுதி மக்களின் நீண்டநாள் வேட்கையைத் தீர்க்கவும், அரசு நலத் திட்டங்களின் பயன்கள் அவர்களை விரைந்து சென்று அடைய வேண்டும் என்ப தற்காக வும் இன்று முதல் கண்ணியத் திற்குரிய காயிதே மில்லத் அவர் களின் பெயர் தாங்கி புதிய மாவட்டம் உதயமாகிறது.

தமிழ்நாட்டில் பிறந்து, இந்திய அரசியலில் பொது வாழ்வின் தூய் மைக்கு எடுத்துக்காட்டாகத் திகழ்ந்த பெருந்தகை, காயிதே மில்லத் இஸ்மாயில் சாகிப் என்றால் மிகை யாகாது. இந்தியத் திருநாட்டின் அரசியல் நிர்ணய சபையில் இடம் பெற்றிருந்த காயிதே மில்லத் அவர்கள், இந்தியாவின் பொது மொழியாக எம்மொழியை ஏற்றுக் கொள்வது என்ற சர்ச்சை ஏற்பட்ட போது, தொன்மைச் சிறப்பும், இலக்கியச் செறிவும், இலக்கண வளமும் மிக்க ஒரே இந்திய மொழி யான, நம் தமிழ்மொழியைத்தான் ஏற்றுக்கொள்ள வேண்டுமென அன்றைக்கு உரத்த குரலில் வாதாடி னார் என்பதிலிருந்து, அவர் பெயரில் இன்று சிறப்பிற்குரிய ஓர் மாவட் டத்தை நாம் உருவாக்கியிருப்பது, எவ்வளவு பொருத்தமான செயல் என்பதை அனைவரும் ஏற்றுக் கொள்வர்.

### உயிர்நாடியான பிரச்சினை

இம்மாவட்டத்தின் அனைத்துச் சிறப்பையும் பெருமையும், புகழை யும் கூற வேண்டுமானால், கூறிக் கொண்டே போகலாம். இவ்வளவு சிறப்புக்களையும் ஒருசேரப்பெற்று நஞ்சையும், புஞ்சையும் கொஞ்சி விளையாடும் தஞ்சை வளநாடு எனப் போற்றப்பட்ட இப்பூமி, அண்மைக்காலமாக எங்கே வறண்ட பாலையாகி விடுமோ என்ற அச்சம், தமிழக மக்கள் அனைவர் மனதிலும் குடிகொண்டுள்ளது. அத்தகைய அச்சத்தைப் போக்க வேண்டும், தஞ்சைத் தரணி என்றென்றும் தமிழகத்தின் நெற்களஞ்சியமாக நிலைபெற்றிட வேண்டும் என்ற ஒரே எண்ணத்தோடுதான், காவிரி நீர்ப் பிரச்சினையில், சிறிதும் விட்டுக் கொடுக்க முடியாத ஒரு தீவிர நிலை யினை நான் எடுத்தேன் என்பதை நீங்கள் அனைவரும் அறிவீர்கள்.

ஆனால், 'நான் காவிரித் தண்ணீர் குடித்து வளர்ந்தவன், இங்கே பிறந்தவன்' என்றெல்லாம் தன்னைப் பிரகடனப்படுத்திக் கொண்டிருப்பவர், இப்பிரச்சினை யில் 1974-75 காலக்கட்டத்தில், எவ்வளவு பெரிய துரோகம் செய் தார் என்பதை நான் கூறாமலேயே இம்மாவட்ட மக்கள் நன்கு அறி வீர்கள். இம்மாவட்டத்தின் உயிர் நாடியான பிரச்சினை என்பது மட்டுமல்லாது, தமிழகத்திற்கே ஓர் ஜீவாதாரப் பிரச்சினை காவிரிப் பிரச்சினை ஆகும். ஓர் குழந்தையை அதன் தாய் பேணி வளர்ப்பதைப் போல், காவிரித்தாய் தஞ்சைத் தரணி மூலம் தமிழக மக்களை ஊட்டி வளர்த்து வருகிறாள். அந்தத் தாயை ஜீவனற்றதாக்க யார் முயற்சித்தாலும், அதைத் தடுப்பது என்னுடைய கடமை என்ற உணர்வோடுதான், உங்கள் உரிமைக்குரல் உலகிற்குத் தைரியமாக எடுத்துரைத்தேன். நம் பக்கம் இருக்கும் நியாயத்திற்கு நீதி கிடைக்கும் வரை, இறுதி வரை இதில் ஓய மாட்டேன், பின் வாங்க மாட்டேன் என்ற உறுதியை, இத் தஞ்சை மண்ணிலிருந்து தெரிவித்துக் கொள்கிறேன்.

### உங்கள் குரலுக்குத்தான் செவிமடுப்பேன்!

இப்படி நான் உரிமைக்குக் குரல் கொடுப்பது, சிலருக்கு எரிச்சலைத் தருகிறது. குறிப்பாக இப்பிரச்சினை யில் தமிழகத்திற்குத் துரோகம்செய்த வர்களுக்கு என்னவோ போலிருக் கிறது.

எனவேதான்,

- நான் காவிரிப் பிரச்சினை பற்றிப் பேசினால், எக்காளமாக ஏகடியம் பேசுகிறார்கள்.
- நான் கச்சத் தீவைப் பற்றிய

உண்மையைச் சொன்னால், அவர்களுக்கு உளைச்சலாகத் தெரிகிறது.
- நான் கள்ளச் சாராயத்தை ஒழிக்க நடவடிக்கை மேற்கொண்டால், திசை திருப்ப முயற்சிக்கிறார்கள்.
- நான் வன்முறையை ஒடுக்க நினைத்தால், எப்படியேனும் அதற்கு எண்ணெயிட்டு ஊக்குவிக்கிறார்கள்.

இதற்கெல்லாம் என்ன காரணம்?

புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். வழியில் ஏழைகளின் பக்கம் நின்று உழைக்கிறேன் என்பதால்தான். பேரறிஞர் அண்ணா வழியில் ஆணவக்காரர்களின் ஆதிக்கத்தை எதிர்க்கிறேன் என்பதால்தான். தந்தை பெரியார் வழியில் எவருக்கும் அஞ்சாமல், மக்கள் எதிரிகளை நேருக்கு நேர் சந்திக்கத் தயாராக இருக்கிறேன் என்பதால்தான்.
நான் இவர்களுடைய எந்த மிரட்டலுக்கும் அஞ்ச மாட்டேன். உங்களுக்காக நான் ஆற்றுகிற பொது நலப்பணியிலிருந்து பின் வாங்கமாட்டேன். எங்களுடைய உயர்விற்கும் வளர்ச்சிக்கும் உரமாகத் திகழும் உங்கள் குரலுக்குத்தான் செவிமடுப்பேன்.

## தக்க பாடம் புகட்ட வேண்டும்!

தமிழகத்தை ஆளுகிற வாய்ப்பைத் தமிழக மக்கள் எனக்கு வழங்கி இருக்கிறார்களே தவிர, இன்று என்னை வசைபாடும் ஆணவக்காரர்கள் அல்ல. இவற்றை எல்லாம் நான் மனம் திறந்து சொன்னால், சாதித்தீயை மூட்டி அதில் குளிர் காயத் திட்டமிடுகிறார்கள்.

கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் பெயரில் இன்று மாவட்டம் தொடங்குகிறோமே, இதை எந்த வருணாசிரமத்தை வளர்க்கும் திட்டம் எனச் சொல்வார்கள்?

1967-இல் பேரறிஞர் அண்ணாவும், மூதறிஞர் இராஜாஜியும், காயிதே மில்லத் சாகிப் அவர்களும், ஓர் உன்னத நோக்கத்திற்காக இணைந்து பணியாற்றினார்களே, அன்றைக்கு அவர்களிடம், இன்றைய இனபேதத் தீயை மூட்டுவது போன்ற உணர்வா இருந்தது? மக்கள் நலன், மக்கள் உயர்வு என்பது மட்டும் தானே பிரதான நோக்கமாக இருந்தது? இத்தகைய தலைவர்கள் கொண்டிருந்த உயரிய நோக்கத்தைத்தான், இன்றைய தினம் அமைந்திருக்கிற உங்கள் அரசு கொண்டிருக்கிறது என்பதை, இந்த நல்ல நேரத்தில் திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழகத்தைத் தலை நிமிரச் செய்து, இந்தியத் துணைக் கண்டத்திலேயே முதல் மாநிலமாக உயரச் செய்வதில், நாங்கள் எடுத்து வரும் முயற்சிக்கு முட்டுக்கட்டை போட, சாதித் துவேசத்தைப் பயன்படுத்த முற்படுவோரை, நீங்கள் தான் பார்த்துக் கொள்ள வேண்டும். தக்க பாடமும் புகட்ட வேண்டும். புகட்டுவீர்களா?...

## ஆதிதிராவிடரும் அர்ச்சராகும் வாய்ப்பு

அரசின் சார்பில் வேத ஆகம சாஸ்திரக் கல்லூரி ஒன்று தொடங்க உள்ளோம் என்ற அறிவிப்பு ஒன்றினைச் சட்டமன்றத்திலே வெளியிட்டேன். அன்று முதல் ஒரு கட்சியின் தலைவர் அவராலே ஏவிவிடப் பட்ட நாலாந்தரப் பேச்சாளர்கள் பலரும், என்னை 'இனம்' சொல்லி வசைபாடி வருகின்றனர். இக்கல்லூரியில் வேதம், ஆகமசாஸ்திரம், திருமுறைகள் மற்றும் நாலாயிரத் திவ்யப் பிரபந்தங்கள் ஆகியவை பாடத்திட்டங்களாக அமையும் என்றும், சமஸ்கிருத மொழியிலுள்ளவை தமிழில் மொழிபெயர்க்கப் பட்டு, பயிற்சி அளிக்கப்படும் என்றும், நான் சட்டமன்றத்தில் தெரிவித்திருந்தும், அதனை மூடி மறைத்து, என் மீது அவதூறு கூற வேண்டும் என்பதற்காகவே அவர்கள் பேசி வருகின்றனர்.

அரசின் சார்பில் ஓர் நிறுவனம்- குறிப்பாக வேத ஆகம சாஸ்திரக் கல்லூரி ஒன்று தொடங்குகிறோம் என்றால், சொல்லாமலே உங்கள் அனைவர்க்கும் தெரியும்; அங்கே 18 சதவிகிதம் ஆதிதிராவிடர்களுக்கு இடம் ஒதுக்கப்பட வேண்டும் என்பது.

**வளரும் தமிழகத்தில் மலரும் புதிய மாவட்டம்!**

ஆக, நாளைக்கு இத்தகைய நிறுவனங்களில் பயிற்சி பெற்றோர் தான், ஆலயங்களில் அர்ச்சகராகலாம் என்கிற நிலை உருவாகிற போது, அத்தகைய ஆதிதிராவிடர்களும் இத்திட்டத்தால் அர்ச்சகராகும் வாய்ப்புப் பெறவிருக்கிறார்கள். தந்தை பெரியாரும் - பேரறிஞர் அண்ணாவும் கோரி வந்தபடி, 'ஆதிதிராவிடரும் அர்ச்சகராக வேண்டும்' என்ற கோரிக்கைக்கு, வலுச்சேர்க்கும் முயற்சி தான் எனது அறிவிப்பு என்கிற அடிப்படையைக் கூட உணராமல், அந்தக் கட்சியின் தலைவர் என்னைத் திட்டுகிறார்; இனபேதம் என்னும் விஷ வித்தைத் துவுகிறார்.

மேலும், இந்த வேத ஆகம சாஸ்திரக் கல்லூரி அமைப்பதற்கு அரசு நிதியிலிருந்து செலவிடப்படப் போவதாக ஒரு சிலர் வேண்டுமென்றே உள்நோக்கத்துடன் குற்றம் சாட்டுகின்றனர்.

இது முற்றிலும் தவறான செய்தி மட்டுமல்ல, மக்களைத் திசைதிருப்பச் செய்யும் முயற்சியும் ஆகும். நான் சட்டப்பேரவையிலேயே இந்நிறுவனத்தை அமைத்து நடத்துவதற்கு, நிதி உபரியாக உள்ள திருக்கோவில்களிலிருந்து சுமார் ஒரு கோடி ரூபாய் திரட்டி அதனை வைப்பு நிதியாகக் கொண்டு இத்திட்டம் செயல்படுத்தப்படும் என்று தெளிவாகத் தெரிவித்துள்ளேன்; எனவே, இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு அரசு நிதியோ, அல்லது முதலமைச்சரின் ஆலயத் திருப்பணி மற்றும் பராமரிப்பு நிதியோ பயன்படுத்தப்படமாட்டாது என்பதையும் நான் இங்கு தெளிவுபடுத்த விரும்புகின்றேன்.

## இரட்டைவேடதாரிகளின் கூக்குரல்!

ஆலயங்கள் புனரமைக்கப்பட வேண்டும். அழிவிலிருந்து அவைகள் காப்பாற்றப்படவேண்டும் என்பது யாருக்குப் புரிந்தாலும் புரியாவிட்டாலும், தஞ்சை மாவட்ட மக்களுக்கு மிக நன்றாகப் புரிந்து இருக்கும் -

ஏனென்றால், தஞ்சை மாவட்டம் விண்ணைமுட்டும் கோயில்களின் பிறப்பிடம். உலகத்தை, அதன்மூலம் வியக்கவைத்த திருத்தலங்கள் பல வற்றைக் கொண்ட புண்ணிய பூமி யாகும்.

அந்தத் திருத்தலங்கள் அனைத் தும், அவை உருவான காலத்தில் பெற்றிருந்த பெருமையைப் பெற வேண்டும், சிதைந்த கோயில்கள் அனைத்தும் சீரமைக்கப்பட வேண்டும், என்ற பெரும்பான்மை மக்களின் விருப்பத்தை நிறைவேற்ற அரசாங்கம் திட்டங்களை மேற்கொண்டால், இது வருணாசிரமத்தை வளர்க்கும் திட்டம் எனச் சிலர் கதைக்கிறார்கள் என்றால், அவர்களைப் பற்றி குறிப் பாக தஞ்சை மாவட்ட மக்கள்தான் அபிப்பிராயம் சொல்ல வேண்டும். உங்களையே கேட்கிறேன்? அவர்கள் நல்லவர்களா?... நீங்களே கூறுங்கள்- நல்லவர்களா?...

தங்கள் மனைவி மக்கள் மட்டும் கோயிலுக்குச் செல்லலாம், தங்களுக் காக வழிபடலாம், ஏன் - வரம்கூட கேட்கலாம்; ஆனால், நாட்டு மக்கள் கோயில்களுக்குச் சென்று வழிபட வசதிகள் செய்து கொடுத்தால், திராவிடப் பண்பாடே சிதைந்து விட்டதே, சீரழிக்கிறார்களே, என வசைபாடுகிறார்கள் என்றால், இது நியாயமா?... தெய்வ பக்தியும், தேச பக்தியும்மிக்க இம்மாவட்ட மக்கள் தான் அவர்களுக்குப் பதில் சொல்ல வேண்டும். இவையெல்லாம் உங் களுக்கு நன்றாகவே தெரியும்; அந்த இரட்டை வேடதாரிகளின் கூக்குரல் அதிக நாள் எடுபடாது.

இப்படிப்பட்டவர்களிடமிருந்து - மக்களைக் காக்க வேண்டும், மக் களின் வாழ்வை வளப்படுத்த வேண்டும் என்பதற்காகத்தான், உங்கள் சகோதரியான நான், என் உயிரையும் பணயம் வைத்து, உங் களை முடிந்தபோதெல்லாம் சந் தித்து, உங்களுக்கு நன்மை பயக்கிற திட்டங்களைத் தீட்டிச் செயல்பட்டு வருகிறேன்.

## கிராம மக்கள் முன்வர வேண்டும்

மதுவிலக்குக் கொள்கையில் எங்கள் அரசு கொண்டிருக்கும் பிடிப்பு, உங்கள் அனைவருக்கும் தெரியும். அதற்காக எங்கள் அரசுக்கு ஏற்படும் வருமான இழப்பு மட்டும் தற்போது ஆண்டுக்கு ரூபாய் 390 கோடி ஆகும்.

ஒழிக்கவே முடியாது எனக் கூறப்பட்ட கள்ளச் சாராயத்தை, பெரும்பகுதி ஒழித்துள்ளோம் என் பதை, நியாய உள்ளம் படைத்தோர் ஒப்புக்கொண்டுள்ளனர். எங்கே அடித்தால் கள்ளச் சாராய சாம் ராஜ்யம் சரியும் என்பதை அறிந்து, சரியான ஓர் நடவடிக்கை எடுத்துள் ளோம். இன்னும் பூரண மதுவிலக்

## ஓயமாட்டேன்... பின்வாங்க மாட்டேன்...

**“தமிழகத்திற்கே ஓர் ஜீவா தாரப் பிரச்சினை காவிரிப் பிரச் சினை ஆகும். ஓர் குழந்தையை அதன் தாய் பேணி வளர்ப்பதைப் போல், காவிரித் தாய் தஞ்சைத் தரணி மூலம் தமிழக மக்களை ஊட்டி வளர்த்து வருகிறாள். அந்தத் தாயை ஜீவனற்றதாக்க யார் முயற்சித்தாலும், அதைத் தடுப்பது என்னுடைய கடமை என்ற உணர் வோடுதான், உங்கள் உரிமைக் குரலை உலகிற்குத் தைரியமாக எடுத்துரைத்தேன். நம்பக்கம் இருக்கும் நியாயத்திற்கு நீதி கிடைக்கும் வரை, இறுதி வரை இதில் ஓய மாட்டேன், பின் வாங்க மாட்டேன் என்ற உறுதியை, இத்தஞ்சை மண்ணி லிருந்து தெரிவித்துக் கொள்கிறேன்”.**

கினை நடைமுறைப்படுத்த, மக்களின் பங்கு முக்கியமானது என்பது. எனது அழுத்தமான நம்பிக்கை. அதற்கான ஒத்துழைப்பைத் தஞ்சை மாவட்ட மக்கள், மற்றவர்களைவிடப் பரி பூரணமாக வழங்குவீர்கள் என்பதும் எனது நம்பிக்கையாகும். கிராம மக்கள் தாங்களாகவே முன்வந்து, ஒரு கட்டுப்பாட்டோடு மதுவினை முழுவதும் ஒழிக்க, அனைத்து முயற் சிகளையும் மேற்கொள்வது, அவர வர்களின் ஒரு சமுதாயக் கடமை எனக் கருதிட வேண்டும்.

பழம்பெருமை கொண்ட தஞ்சை மாவட்டத்திற்கு, பழமையான இன் னொரு பெருமையும் உண்டு. அது தான் இந்த மாவட்டத்தின் சாலைகள். கடந்த மூன்று ஆண்டுகளில் தமிழகம் முழுவதிலும் பலமுறை நான் மேற் கொண்ட சுற்றுப்பயணங்களின் மூலம், நான் கண்டறிந்த மிக முக் கியமான உண்மை; சாலைகளில் மிகவும் குறுகலானது; சீர்கேடானது; வளைவானது தஞ்சை மாவட்டச் சாலைகள்தான் என்பதாகும்.

எனவேதான், தஞ்சை மாவட்டச் சாலைகளை மேம்படுத்த முன்னுரிமை தந்துள்ளோம். அவ்வகையில், மிக இன்றியமையாச் சாலைகள் சில வற்றைச் செப்பனிடுகின்ற பணிக்கு, ரூபாய் 25.57 கோடி செலவில் இன்று இங்கு திட்டம் துவக்கப் பட்டுள்ளது.

இதைத் தவிர, சில சாலை களைச் சீர்ப்படுத்துகிற பணிகளை, அதாவது அவைகளையும் பராமரித் துப் பாதுகாக்கிற பணியினை சில தனியார் தொழில் அதிபர்களிடம் ஒப்படைக்கிற ஒரு சோதனைத் திட்டம், (Experimental measure) ஒன்றினையும் முதன்முதலில் இந்த மாவட்டத்தில்தான் செயல்படுத்த உள்ளோம். ஒன்றாக இருந்த தஞ்சை மாவட்டத்தின் மிகப் பிரதான ஓர் சீர்கேட்டைக் களைந்திட, எந்த அளவுக்கு உங்கள் அரசு முன் னுரிமை கொடுத்துள்ளது என்பதை நீங்கள் உணரலாம்.

## பெட்ரோலியப் பொருட்கள் பொங்கி வழியும் பூமி

இயற்கையும் தஞ்சை மாவட்டத் திற்குப் பல்வேறு சீதனங்களையும் வழங்கி உள்ளது. ஏற்கெனவே நீண்ட கடற்கரையையும், வளமான மண் ணையும் தன்னகத்தே கொண்டு, ‘தென்னகத்தின் நெற்களஞ்சியம்’ என்கிற பெருமையைத் தாங்கியுள்ள தஞ்சை மாவட்டம், தற்போது எண் ணெய்க் களஞ்சியங்களையும், அதாவது பெட்ரோலியம் பொருட் களையும் பொங்கி வழியும் பூமியாக வும் உள்ளது. இது பொருளாதார நோக்கில் பார்த்தால், இந்தியத் துணைக்கண்டம் முழுமைக்கும் மகிழ்ச்சி அளிக்கிற செய்தியாகும்.

பம்பாயிலிருந்து எரிவாயு வினைத் தமிழ்நாட்டிற்குக் கொண்டு வரமுடியும் என்று, நாம் ஆய்வு செய்து கொண்டிருக்கிற இந்த நேரத்தில், இந்தப் பகுதியில் உள்ள

நரிமணத்தில் கிடைக்கும் எரிவாயு வைப் பயன்படுத்தி, தமிழ்நாடு மின் வாரியத்தின் மூலம் மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்காக, ரூ.22.57 கோடி செலவிலான ஒரு திட்டத்திற்கும், இன்று அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். இதோடு எரிவாயு, பெட்ரோலிய எண்ணெய் சார்ந்த தொழில்களை, மத்திய அரசு விரைந்து இப்பகுதியில் துவக்கினால், மாநில அரசு தேவையான அனைத்து உதவிகளையும் உடன் செய்யும் என்றும், இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

### ரூ.88.41 கோடிக்குப் புதிய திட்டங்கள்

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் ரூ.12.13 கோடி செலவில், புதிய குடிநீர் வழங்கும் இனிய திட்டங்கள் இங்கே என்னால் துவக்கப்பட்டுள்ளன.

இவற்றோடு இன்னும் பல்வேறு திட்டப்பணிகளின் கீழ், இந்தப் புதிய மாவட்டத் தொடக்க விழாவில், மொத்தமாக ரூ.88.41 கோடி அளவில் புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது என்பதையும், மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, தஞ்சை நகருக்கு அருகில் மத்திய அரசின் ஓர் சிறிய விமானத் தளம் உள்ளதே, அதனைப் பெரிய அளவில் விரிவுபடுத்த விமான தள விரிவாக்கப் பணிக்காக (Establishment of Air Force Station) ஏறத்தாழ 1732.69 ஏக்கர் நிலத்தை ஆர்ஜிதம் செய்து வழங்கிட, மாநில அரசு முடிவு எடுத்தது மட்டுமல்லாமல், நான் இந்த விழாவிற்கு வருவதற்குமுன்பே, அந்த அனுமதிக்கான கோப்பில் கையெழுத்தும் போட்டுவிட்டுத்தான் வந்திருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### இந்தியாவிலேயே முதல் தர மாநிலமாகத் திகழ்ந்திட....

கழக அரசு பொறுப்பேற்று ஒரு சில மாதங்களே ஆகி இருந்தாலும், நாங்கள் தொலைநோக்குப் பார்வையோடு அடுக்கடுக்காய் ஆற்றிவரும் செயல்கள், தீட்டிவரும் திட்டங்கள், தமிழக மக்களிடம் நல்ல நம்பிக்கையை உருவாக்கி இருக்கிறது என்பதை நான் அறிவேன்.

என்மீது மக்கள் வைத்துள்ள நம்பிக்கை எப்போதும் வீண்போகாது. ஏனென்றால், நான் மக்களுக்கு உரிய உயர்வு தந்து, மக்கள் தீர்ப்புக்கு மதிப்பளித்து, நீதிக்குத் தலை வணங்கிய புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களிடம் அரசியல் பாடம் பயின்ற மாணவி. அந்தத் தலைவனின் புகழ் காக்கப் பொது வாழ்வில் ஈடுபட்டவள்.

## ஆதிதிராவிடரும் அர்ச்சகராக வேண்டும்

**"அரசின் சார்பில் ஓர் நிறுவனம் - குறிப்பாக வேத ஆகம சாஸ்திரக் கல்லூரி ஒன்று தொடங்குகிறோம் என்றால், சொல்லாமலே உங்கள் அனைவர்க்கும் தெரியும்; அங்கே 18 சதவிகிதம் ஆதிதிராவிடர்களுக்கு இடம் ஒதுக்கப்பட வேண்டும் என்பது.**

**ஆக, நாளைக்கு இத்தகைய நிறுவனங்களில் பயிற்சி பெற்றோர் தான், ஆலயங்களில் அர்ச்சகராகலாம் என்கிற நிலை உருவாகிற போது, அத்தகைய ஆதிதிராவிடர்களும் இத்திட்டத்தால் அர்ச்சகராகும் வாய்ப்புப் பெறவிருக்கிறார்கள். தந்தை பெரியாரும்- பேரறிஞர் அண்ணாவும் கோரி வந்தபடி, 'ஆதிதிராவிடரும் அர்ச்சராக வேண்டும்' என்ற கோரிக்கைக்கு, வலுச் சேர்க்கும் முயற்சி தான் எனது அறிவிப்பு".**

எனவே, அனைத்துத் துறைகளிலும் தமிழ்நாடு வெற்றி இலக்கினை முழுமையாக எட்டிடவும், இந்தியாவிலேயே முதல் தர மாநிலமாகத் தமிழ்நாட்டைத் திகழச் செய்திடவும், உங்கள் பேரன்புமிக்க நல்லாதரவோடு எங்கள் இலட்சியத்தை அடைந்தே தீருவோம் என்று உறுதியளித்து, வாழ்க அண்ணா நாமம்! வாழ்க புரட்சித்தலைவர் நாமம்! என்று கூறி உங்களிடமிருந்து விடைபெறுகிறேன். நன்றி; வணக்கம்!

முன்னதாக, விழாத் தொடக்கத்தில் மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு. எஸ்.டி. சோமசுந்தரம் அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசுகையில், 'நல்ல காரியங்களை செயல்படுத்துவதற்காக- அதை நிறைவேற்றுவதற்காக வீரமும் விவேகமும் உள்ள புரட்சித் தலைவியை நாம் பெற்றிருக்கிறோம்' என்று கூறினார்.

பிறகு மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்கள், நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டதைத் தொடங்கி வைத்தார். பல்வேறு அரசுத் திட்டங்களைத் தொடங்கி வைத்து, அடிக்கல் நாட்டினார். நலிந்த பிரிவினர்க்கு உதவிகள் வழங்கினார்.

கண்ணியத்துக்குரிய காயிதே மில்லத் அவர்களின் புதல்வர் திரு ஜே. மியாகான் அவர்களுக்கு, மாண்புமிகு முதல்வர் அவர்கள் பொன்னாடை அணிவித்துச் சிறப்பித்தார்.

தஞ்சை மாவட்ட ஆட்சியர் திரு. தி. சண்முக ராஜேஸ்வரன் , இ.ஆ.ப., அவர்கள் பேசுகையில், புதிய மாவட்டத்தின் பகுதிகள் தஞ்சை மாவட்டத்திலிருந்து பிரிந்து செல்வது சற்று மனவருத்தத்தை அளித்தாலும், புக்ககத்துக்குப் பெண்ணைத் தாய் உரிய சீதனங்களுடன் (இயற்கை வளங்கள், நல்வாழ்வுத் திட்டங்களுடன்) அனுப்பி வைப்பதைப் போல நாங்களும் அனுப்பி வைத்திருக்கிறோம் என்று நெகிழ்ச்சியுடன் குறிப்பிட்டார்.

மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத்துறை அமைச்சர் திரு. டி. ஜெயக்குமார் அவர்கள் பேசுகையில், 'இந்தியாவிலேயே தமிழகத்தை அனைத்துத் துறைகளிலும் முன்னேற்ற மாநிலமாக்க புரட்சித் தலைவி அவர்கள் பணியாற்றி வருகிறார்' என்றார்.

திரு.ஆர்.கோடிமாரி, எம்.எல்.ஏ., அவர்கள் பேசுகையில், நாகையை மாவட்டத் தலைநகராக்கிய முதல்வர் அவர்களுக்கு நன்றியையும், பாராட்



**மாண்புமிகு முதல்வர் அவர்கள், கண்ணியத்துக்குரிய காயிதே மில்லத் அவர்களின் புதல்வர் திரு மியாகான் அவர்களுக்குப் பொன்னாடை வழங்கிச் சிறப்பித்தார். மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு. எஸ்.டி.சோமசுந்தரம் அவர்களும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. அழகு திருநாவுக்கரசு அவர்களும் உடன் உள்ளனர்.**

டையும் தெரிவித்து, புரட்சித்தலைவி மீனவர்களின் காவலராக விளங்கு கிறார் என்றார்.

திரு. எம்.எம்.எஸ். அபுல் ஹசன், எம்.எல்.ஏ., அவர்கள் பேசுகையில், 'இந்தப் புதிய மாவட் டத்திற்கு, காயிதே மில்லத் பெயரைச் சூட்டியதற்கு, மற்ற சமுதாயத்தினர் பாராட்டுவதுபோல, எங்கள் முஸ்லீம் சமுதாயமும் முதல்வர் அவர்களைப் பாராட்டுகிறது' என்றார்.

டாக்டர் பத்மா, எம்.பி., அவர்கள் பேசுகையில், முதல்வர் அவர்கள், பாரதியார் கனவை நனவாக்கி வரு கிறார் என்று பாராட்டி, நாகப் பட்டினத்தின் சிறப்பை எடுத்துக் கூறினார்.

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு. முகம்மது ஆசீப் அவர்கள் பேசுகையில், புதிய மாவட்டத்திற்குக் காயிதே மில்லத் பெயரைச் சூட்டியதற்கு நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்.

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் திரு. கு.ப.கிருஷ்ணன் அவர்கள் பேசுகையில், புதிய மாவட்டத்துக்கு வரவேற்பு நல்கி, வாழ்த்துக்கள் கூறினார்.

மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. செ.அரங்க நாயகம் அவர்கள் பேசுகையில், புரட்சித்தலைவரின் விருப்பம் நிறை வேறுகிற நன்னாளாக இன்று விளங்கு கிறது என்று மகிழ்ச்சி தெரிவித்தார்.

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. அழகு திருநாவுக்கரசு அவர்கள் பேசுகையில், ஏழை எளிய வர்களின் வாழ்வில் ஒளியேற்ற பல திட்டங்களைச் செயலாற்றி வரு கிறார் புரட்சித்தலைவி அவர்கள் என்று கூறி, இன்று மது ஒழிக்கப் பட்டிருக்கிறது, வன்முறை அகற்றப் பட்டிருக்கிறது என்றார்.

விழாவிற்குத் தலைமை வகித்த மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு. சேடப்பட்டி இரா. முத்தையா அவர்கள் பேசுகையில், ரூ. 88 கோடிக்கு நலத்திட்டங்களைத்

> **★ எவன் தனக்குத் தானே கட்டுப் பாடுகளை ஏற்படுத்திக் கொள் கிறானோ, அவனே சுதந்திர மனிதன்.**
>
> **—அண்ணல் காந்தியடிகள்**

தொடங்கியிருக்கிற மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி அவர் களைத் தமிழகமே பாராட்டுகிறது என்றார்.

இந்தச் சீர்மிகு விழாவில், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. சு. முத்துசாமி அவர்களும், மாண்புமிகு போக்கு வரத்துத்துறை அமைச்சர் திரு. கே.ஏ.செங்கோட்டையன் அவர் களும், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் திரு.எஸ்.கண்ணப்பன் அவர்களும், மாண்புமிகு வீட்டு வசதித்துறை அமைச்சர் திரு. டி.எம். செல்வ கணபதி அவர்களும் மற்றும் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப் பினர்களும் கலந்து கொண்டார்கள்.

விழாவில் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நினைவுப் பரிசுகள் வழங்கப்பட்டன.

நாகப்பட்டினம்-காயிதேமில்லத் மாவட்ட ஆட்சியர் திரு. கே. ஸ்கந்தன், இ.ஆ.ப., அவர்கள் நன்றி நவில விழா இனிதே நிறை வேறியது.

**- நிகழ்ச்சித் தொகுப்பு: பி.வி. கிரி**

# மூடிக்கிடக்கும் ஆலைகளின் தொழிலாளர்களுக்கு நிவாரணத் தொகை

## மாண்புமிகு முதல்வர் அவர்களின் அறிவிப்பு

மூடப்பட்டிருக்கும் 13 ஆலைகளில் பணியாற்றிய சுமார் 10,962 தொழிலாளர்களுக்கு உதவித்தொகையாகத் தலா ரூ.400 வீதம் ரூ.43,84,800-ஐ அக்குடும்பத்தினர் அனைவரும் வருகின்ற தீபாவளியை மகிழ்ச்சிகரமாகக் கொண்டாட வேண்டும் என்ற நல்லெண்ணத்தின் அடிப்படையில் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்குவதற்கு 20.10.'91 அன்று உத்தரவிட்டுள்ளேன்.

அதே போன்று மேட்டூர் டெக்ஸ்டைல் மில் மீண்டும் திறக்கப்பட்டிருந்தும் அதில் தொடர்ந்து பணி கிடைக்காமல் தவிக்கும் 2,175 ஆலை தொழிலாளர்களுக்கும் ஒரு தொழிலாளிக்கு ரூ.400 வீதம் ரூ.8,70,000-ஐ வழங்க தற்போது உத்தரவிட்டுள்ளேன்.

இந்தத் தொகையும் தீபாவளிக்குள் வழங்கப்படும் என்பதை, இந்தத் தருணத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். ஆக மொத்தம் 13,137 தொழிலாளருக்கு ரூ.52,54,800-ஐ தீபாவளிக்குள் நிவாரணத் தொகையாக முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க ஆணையிட்டுள்ளேன்.

தீபாவளியின்போது தொழிலாளர்கள் ஆலைகளிலிருந்து போனஸ் தொகை பெற்று தீபாவளியை மகிழ்ச்சிகரமாகக் கொண்டாட இருக்கின்ற இந்த நேரத்தில், சில ஆலைகள் மற்றும் நிறுவனங்கள் மூடிக்கிடப்பதினால் அங்கு பணியாற்றிய தொழிலாளர்கள் வேலையின்றி வறுமையில் வாடிக்கொண்டிருக்கின்ற நிலைமையில், என்றைக்கு மூடிக்கிடக்கின்ற மில்கள் திறக்கப்படும் என்ற ஏக்கத்தோடு, ஆலைகளின் வாயில்களை எதிர்நோக்கி இருக்கிறார்கள்.

சமீபத்தில் 'பி அண்டு சி' மில் தொழிலாளர்கள் 8,000 பேர்களுக்கு, ஒரு தொழிலாளிக்கு ரூ.400 வீதம் மொத்தம் ரூ.32 இலட்சம் உதவித் தொகை வழங்கப்பட்டதை தமிழகம் நன்கு அறியும். அதே போன்று, மூடிக்கிடக்கின்ற மற்ற மில் தொழிலாளர்களும் பயன் பெறுகின்ற வகையில், அவர்களும் தங்களுடைய குடும்பத்தோடு தீபாவளிப் பண்டிகையை மகிழ்ச்சியுடன் கொண்டாட வேண்டும் என்ற நோக்கத்துடன், ஒரு தொழிலாளிக்கு ரூ.400 வீதம் 10,962 தொழிலாளர்களுக்கு ரூ.43,84,800-ஐ முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க உத்திரவிட்டுள்ளேன். இந்தத் தொகை தீபாவளிக்குள் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட வேண்டுமென்றும் ஆணையிட்டுள்ளேன்.

கீழ்க்கண்ட நிறுவனங்களில் பணியாற்றிய தொழிலாளர்கள் இதன் மூலம் பயன் அடைவார்கள்.

1. அலெக்ஸ்சாண்டர் நூற்பிரிவு, மேட்டூர் டேம் 260
2. வசந்தா மில்ஸ், கோயம்புத்தூர் 1,562
3. கே.ஜி.எஸ்.ஸ்பின்னர்ஸ், கோயம்புத்தூர் 150
4. ராதாகிருஷ்ணா மில்ஸ், கோயம்புத்தூர் 1,100
5. காவேரி ஸ்பின்னிங் மில்ஸ், புதுக்கோட்டை 850
6. ஜெயலஷ்மி மில்ஸ், கோயம்புத்தூர் 558
7. மது ஸ்பின்னிங் அண்டு வீவிங் மில்ஸ், கோயம்புத்தூர் 500
8. ராமகிருஷ்ணா இண்டஸ்டிரிஸ், கோயம்புத்தூர் 400
9. எவரெஸ்ட் என்ஜினியரிங் வொர்க்ஸ், கோயம்புத்தூர் 330
10. ஸ்டேண்டர்டு மோட்டார் புராடக்டஸ், பெருங்களத்தூர் 3,086
11. சேஷசாயி இண்டஸ்டிரிஸ், வடலூர் 1,662
12. கேம்ப் இந்தியா லிமிடெட், கோயம்புத்தூர் 186
13. நியு சிடி என்ஜினியரிங் வொர்க்ஸ், கோயம்புத்தூர் 182

மேலும், 'பி அண்டு சி' மில்லில் இதுவரை நிவாரணம் பெறாத 136 தொழிலாளர்களையும் சேர்த்து மொத்தம் 10,962 தொழிலாளர்கள் பயன் பெறுகிறார்கள்.

# நியாய விலைக் கடைகள் மூலமாக பாமாயில் எண்ணெய் வழங்குவது தொடங்கப்படும்!

## தீபாவளிப் பரிசாக மாண்புமிகு முதல்வர் அறிவிப்பு

தமிழக மக்களின் விருப்பத்திற்கிணங்க, தீபாவளிக்குப் பாமாயில் நிச்சயமாக வழங்கப்படும் என்ற உறுதிமொழியினை நான் சட்டப் பேரவையில் அறிவித்தேன். மத்திய அரசு பாமாயில் எண்ணெய் இறக்குமதி செய்ய வேண்டுமென்று விடுத்த கோரிக்கையின் பேரிலும், பாரதப் பிரதமருக்கு நான் எழுதிய கடிதத்தின் அடிப்படையிலும் மத்திய அரசு நடவடிக்கைகள் மேற்கொண்டு தற்பொழுது 3,000 டன் பாமாயில் எண்ணெயை முதல் தவணையாகத் தமிழகத்திற்கு வழங்கியிருக்கிறது. இந்த எண்ணெய் முழுவதும் சென்னைத் துறைமுகத்தை வந்தடைந்துள்ளது.

பாமாயில் எண்ணெய்யைப் பாக்கெட்டுகளில் அடைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்குவதற்குக் காலதாமதம் ஏற்படும் என்பதால், தீபாவளியை முன்னிட்டு மக்களுக்கு விரைவில் கிடைப்பதற்காகத் தற்போது சில்லரையாக நிறுத்துக் கொடுக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

நவம்பர் 1-ஆம் தேதி முதல் நியாய விலைக் கடைகள் மூலமாகப் பாமாயில் எண்ணெய் வழங்குவது தொடங்கப்படும் என்ற மகிழ்ச்சிகரமான செய்தியைத் தமிழக மக்களுக்கு என்னுடைய தீபாவளிப் பரிசாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னையிலும், அதன் சுற்றுப்புறப் பகுதிகளிலும் மற்றும் மாவட்டத் தலைநகரங்களிலும் பாமாயில் எண்ணெய் குடும்ப அட்டை ஒன்றுக்கு 1 கிலோ வீதம் வழங்கப்படும். மற்ற பகுதிகளுக்குப் பாமாயில் எண்ணெய் மத்திய அரசின் அடுத்த ஒதுக்கீடு கிடைக்கப்பெற்றவுடன் தொடர்ந்து வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் சட்டப்பேரவையில் தெரிவித்த உறுதிமொழியினைத் தற்போது ஓரளவாவது நிறைவேற்ற முடிந்ததை எண்ணி மகிழ்ச்சி அடைகிறேன். மேலும், அதிக அளவு பாமாயில் எண்ணெய் தமிழகத்திற்குக் கிடைக்க அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.



★ மனிதனின் கல்வியறிவு வளரப் படிப்பு ஒன்று தான் உதவி செய்கிறதென்று நினைப்பது தவறு. எந்தக் கல்வித் திட்டத்திலும் உடல் உழைப்பு மிக மிக முக்கியம்.

★ மனித குல முன்னேற்றத்திற்காக மனிதன் உழைக்கின்ற இடமே உயர்ந்த கோயிலாகும். ஆயிரக் கணக்கிலே மக்கள் அன்றாடம் உழைத்து இரத்தமும் வியர்வையும் சிந்தி, ஏன், உயிரையும் கொடுத்து உருவாக்கியிருக்கும் தொழிற்கூடங்கள், அணைக்கட்டுக்களை விட தொழுகைக்குரிய கோயில்கள் வேறெங்கே இருக்க முடியும்?

★ உண்மையான நம்பிக்கை மட்டுமே ஒருவனுக்கு இருக்குமானால், அந்த நம்பிக்கையை வைத்தே மலைகளைக் கூட அசைத்து விடலாம்.

# பிற்படுத்தப்பட்டோர் வாழ்க்கைத் தரம் உயர்ந்திட...

**பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் வகுப்பைச் சார்ந்த மக்களின் சமூக, பொருளாதார நிலையை மேம்படுத்த பல செயல் திட்டங்கள் நிறைவேற்றப் பட்டு வருகின்றன. அவற்றைத் தெளிவுபடுத்துகிறது இக்கட்டுரை.**

தமிழ்நாட்டில் வாழும் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், மற்றும் சீர்மரபினர் ஆகிய வகுப்பினர்களுக்கு ஒரு நிரந்தரத் தொழில் வாய்ப்பை அளித்து, அதன்மூலம் அவர்களுடைய பொருளாதார வாழ்க்கைத் தரத்தினை உயர்த்த தனிப்பட்டதொரு அரசு நிறுவனமாக, தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் செயல்பட்டு வருகிறது.

தமிழ்நாடு அரசு இக்கழகத்திற்கென அறிவிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூ.10 கோடியாகும். அதில், ஏப்ரல் 1991 வரை இக்கழகத்தின் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ.131.56 இலட்சமாக உள்ளது.

கூட்டுறவே நாட்டுயர்வு என்னும் கொள்கையின் அடிப்படையில் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் ஆகியோரால் அமைக்கப்படும் வரையறுக்கப்பட்ட தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்று நடத்தப் படுகிற எல்லாத் தொழில்களுக்கும் மொத்த திட்ட மதிப்பீட்டில் 20 சதவிகிதம் (1/5 பாகம்) அதிகபட்சமாக ரூ.3.00 இலட்சம் வரை ஆரம்ப முதலீட்டுக் கடனாகக் கீழ்க்கண்ட எளிய வட்டி விகிதத்தில் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கடன் வழங்கி வருகிறது.

ரூ.25,000 வரை உள்ள கடன் தொகைக்கு வட்டி விகிதம் 4 சதவிகிதமாகும். அவ்வாறே ரூ.25,000 முதல் ஒரு இலட்சம் வரை உள்ள கடன் தொகைக்கு வட்டி விகிதம் 6 சதவிகிதமும், ரூ. ஒரு இலட்சம் முதல் 3 இலட்சம் வரை உள்ள கடன் தொகைக்கு வட்டிவிகிதம் 7.5 சதவிகிதமும், ரூ.3 இலட்சத்திற்குமேல் உள்ள கடன்தொகைக்கு வட்டி விகிதம் 9 சதவிகிதமும் ஆகும்.

இக்கழகம் தற்பொழுது பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர்களால் ஏற்படுத்தப்பட்ட தொழிற் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ரூ.15 இலட்சம் வரை செலவாகும் திட்டங்களுக்கு ரூ.3 இலட்சம் வரை நிதியுதவி செய்து வருகிறது. ரூ.3.00 இலட்சத்திற்கும்மேல் விளிம்புத் தொகை கடன் கோரும் திட்டங்களுக்கு அரசின் பரிசீலனைக்குப் பரிந்துரை செய்யப்பட்டு வருகிறது. இக்கழகத்தின் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு மாவட்டப் பிற்படுத்தப்பட்டோர், சிறுபான்மை நல அலுவலர்களின் பணியினையும் பயன்படுத்திக் கொள்ள வகை செய்ய அரசு உத்தரவிட்டுள்ளது.

1990-91 முடிய இக்கழகம் விளிம்புத் தொகைக் கடனாக ரூ.13.19 இலட்சத்தினை 42 கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கியதில் 2,500 குடும்பங்கள் பயன்பெற்றுள்ளன. பல்வேறு கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து நிதியுதவி வேண்டி ரூ.18.49 இலட்சம் அளவுக்கு விண்ணப்பங்கள் இக்கழகத்தின் பரிசீலனையில் உள்ளன.

கீழ்க்கண்ட திட்டங்கள் பல்வேறு மாவட்டங்களில் செயல்படுத்த எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன:

1. தையற் தொழிற் கூட்டுறவுச் சங்கம், 2. தச்சு, கருமார் தொழிற் கூட்டுறவுச் சங்கம், 3. சரிகை தயாரிப்புத் தொழிற் கூட்டுறவுச் சங்கம், 4. எண்ணெய் தயாரிப்புத் தொழிற் கூட்டுறவுச் சங்கம், 5. முடி திருத்தும் தொழிற் கூட்டுறவுச் சங்கம், 6. சலவைத் தொழிலாளர் தொழிற் கூட்டுறவுச் சங்கம், 7. பானைத் தொழிலாளர் தொழிற் கூட்டுறவுச் சங்கம், 8. கருமார் தொழிலாளர் தொழிற் கூட்டுறவுச் சங்கம், 9. தச்சுத் தொழிலாளர் தொழிற் கூட்டுறவுச் சங்கம், 10. மீன்பிடி தொழிலாளர் தொழிற் கூட்டுறவுச் சங்கம்.

11. ரெடிமேட் துணி தயாரிப்பாளர் தொழிற் கூட்டுறவுச் சங்கம், 12. செங்கல், ஓடு தயாரிப்பாளர் தொழிற் கூட்டுறவுச் சங்கம், 13. மூங்கில் பொருட்கள் தயாரிப்பாளர் தொழிற் கூட்டுறவுச் சங்கம், 14. வாகனங்கள் பழுதுபார்க்கும் தொழிற்

கூட்டுறவுச் சங்கம், 15. கேஸ் வெல்டிங், கிரில் தயாரிப்புத் தொழிற் கூட்டுறவுச் சங்கம், 16. ஆட்டோமொபைல் தொழிற்பட்டறை, 17. பிளாஸ்டிக் மழைக் கோட்டுகள் தயாரிக்கும் தொழிற் கூட்டுறவுச் சங்கம், 18. சூட்கேஸ்கள் தயாரிப்புத் தொழிற் கூட்டுறவுச் சங்கம், 19. லாரி பாகங்கள் தொழிற் கூட்டுறவுச் சங்கம், 20. டியூப் லைட் தயாரிப்பு தொழிற் கூட்டுறவுச் சங்கம்.

21. நூல், பேப்பர் தயாரிப்பு தொழிற் கூட்டுறவுச் சங்கம், 22. ரப்பர் ஸ்டாம்ப் தயாரிப்புத் தொழிற் கூட்டுறவுச் சங்கம், 23. சமையலறைப் பவுடர்கள் தயாரிப்புத் தொழிற் கூட்டுறவுச் சங்கம், 24. மர விளையாட்டுச் சாமான்கள் தயாரிப்புத் தொழிற் கூட்டுறவுச் சங்கம், 25. விதைகளிலிருந்து பவுடர் தயாரிக்கும் தொழிற் கூட்டுறவுச் சங்கம், 26. அச்சகத் தொழிலாளர் தொழிற் கூட்டுறவுச் சங்கம், 27. சாயம், அச்சிடுதல் தொழிற் கூட்டுறவுச் சங்கம், 28. நெசவுத்தொழிலாளர் தொழிற் கூட்டுறவுச் சங்கம், 29. கைத்தறித் துணி தயாரிப்பாளர் தொழிற் கூட்டுறவுச் சங்கம், 30. கூடை தயாரிப்பாளர் தொழிற் கூட்டுறவுச் சங்கம்.

31. இயந்திரங்கள் வார்ப்படத் தயாரிப்புத் தொழிற் கூட்டுறவுச் சங்கம், 32. குழந்தைகட்கு எண்ணெய் தயாரிக்கும் தொழிற் கூட்டுறவுச் சங்கம், 33. கருங்கற்கள் மெருகேற்றும் தயாரிக்கும் தொழிற் கூட்டுறவுச் சங்கம், 34. சரிகை, எம்ப்ராய்டரி தொழிற் கூட்டுறவுச் சங்கம், 35. சைக்கிள் கடை, 36. டைப்ரைட்டிங் பயிலகம், ஜாப் டைப்பிங், 37. ஓட்டல் கடை, 38. கரிக்கடை, 39. பழம் மற்றும் காய்கறிக் கடை, 40. போட்டோ ஸ்டுடியோ, ஜெராக்ஸ் கடை

41. ஆட்டோ ரிக்ஷா சர்வீஸ், 42, பெட்டிக் கடை, 43. டீ ஸ்டால், 44. விறகுக் கடை, 45. ஊறுகாய், அப்பளம் தயாரித்தல், 46. காப்பிக் கொட்டை அரைத்தல், மாவு மில், 47. மளிகைக் கடை, 48. ஆட்டோ ரிக்ஷா வாங்கக் கடனுதவி, 49. மோட்டார் வைத்த ரிக்ஷா வாங்கக் கடனுதவி, 50. மருந்துக் கடை.

51. குளிர்சாதனத் தயாரிப்புத் தொழிற் கூட்டுறவுச் சங்கம், 52. மொசைக் கற்கள் தொழிற் கூட்டுறவுச் சங்கம், 53. புத்தகப் பைண்டிங் தயாரிப்புத் தொழிற் கூட்டுறவுச் சங்கம், 54. இலகு வாகனங்கள் (கார் மற்றும் வேன்), 55. வீடியோ, ஆடியோ கடை, 56. டி.வி. பழுது பார்த்தல்.

**ஊரகக் கைவினைஞர் வளாகம்**

தமிழ்நாட்டில் வறுமைக்கோட்டிற்குக் கீழே வாழும் பிற்பட்ட, மிகவும் பிற்பட்ட, சீர்மரபினர் வகுப்பினைச் சார்ந்த கைவினைஞர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும்பொருட்டு, ஊரகக் கைவினைஞர் வளாகம் அமைக்கத் திட்டமிட்டுள்ளது. ஒவ்வொரு மாவட்டத்தில் 25 தனி நபர்கள் பயன்பெறும் வகையில் ரூ.5.50 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் 20 சதவிகித விளிம்புத் தொகைக் கடன் ரூ.1.25 இலட்சத்துடன் கூடிய ஊரகக் கைவினைஞர் வளாகம் அமைக்க இக்கழகம் தீர்மானித்துள்ளது. ஆரம்பக் கட்டமாக, கீழ்க் கண்ட 6 மாவட்டங்களில் விளிம்புத் தொகைக் கடன் ரூ.7.5 இலட்சம் மதிப்பீட்டில் மேற்படி திட்டத்தைச் செயல்படுத்த இக்கழக இயக்குநர்கள் குழு தீர்மானித்து இருக்கிறது.

1. செங்கல்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்டம்
2. திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம்
3. வட ஆர்க்காடு-அம்பேத்கர் மாவட்டம்
4. தென் ஆர்க்காடு மாவட்டம்
5. பெரியார் மாவட்டம்
6. தர்மபுரி மாவட்டம்.

மேற்கண்ட 6 மாவட்டங்களுக்கும் ஊரகக் கைவினைஞர் வளாகம் அமைக்கத் தலா ரூ.1.25 வீதம் செயல்முறை ஆணை வழங்கப்பட்டு, அதில் திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டத்திற்கு ரூ.1.25 இலட்சம் வழங்கப்பட்டுவிட்டது. இதர

## சுற்றுச்சூழல் ஆய்வுக்கு செயற்கைக் கோள்!

உலகின் சுற்றுச்சூழல் பற்றி ஆய்வு நடத்துவதற்கான மிகப்பெரிய செயற்கைக் கோள் ஒன்றை அமெரிக்க விண்வெளி ஓடம் டிஸ்கவரி அண்மையில் விண்வெளியில் ஏவியது. அந்தச் செயற்கைக் கோள் மிகவும் நல்லமுறையில் செயல்பட்டு வருகிறது.

பூமியிலிருந்து 566 கிலோமீட்டர்கள் உயரத்தில் இந்தச் செயற்கைக்கோள் செலுத்தப்பட்டுள்ளது. அதன் பிறகு, இந்தச் செயற்கைக்கோளை இன்னும் உயரமான சுற்றுப்பாதையில் செலுத்துவதற்கு உந்துவிசை ராக்கெட்டுகள் பயன்படுத்தப்பட்டன. இதன் மூலம் இந்தச் செயற்கைக்கோள், பூமிக்கு மேலே 595 கிலோ மீட்டர்கள் உயரத்தில் தனது சுற்றுப்பாதையை அடைந்து பூமியை வலம் வரத் துவங்கும்.

''மேல் வளிமண்டல ஆய்வுக்கோள்'' (Upper Atmospheric Research Satellite) என்று இந்தச் செயற்கைக்கோளுக்குப் பெயரிடப்பட்டுள்ளது. பூமியைச் சுற்றியுள்ள 'ஓஸோன்' ('ஓஸோன்' என்பது மனிதன் உயிர் வாழ்வதற்குத் தேவையான பிராண வாயுவின் ஒரு வகையே ஆகும்) பாதுகாப்புப் படலம் எந்த அளவுக்குப் பாதிக்கப்பட்டுள்ளது என்பதை ஆராயும் நோக்கத்துடனேயே இந்தச் செயற்கைக்கோள் ஏவப்பட்டுள்ளது. இது, குறைந்தபட்சம் ஒன்றரை ஆண்டுக் காலம் பூமியை வலம் வரும் என்று மதிப்பிடப்படுகிறது.

மாவட்டங்களில் ஆவணங்கள் எதிர்பார்க்கப்பட்டு வருகின்றன.

தற்போது 1991-92-ஆம் ஆண்டுக்கு அனைத்து மாவட்டங்களிலும் மொத்தம் 24 வளாகங்கள் அமைக்க பூர்வாங்க நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டு வருகிறது.

**தனி நபர் கடன்**

கூட்டுறவுச் சங்கங்கட்கு மட்டுமே கடன் வழங்கி வந்த இக்கழகம், தற்போது இக்கழக நடவடிக்கை களை விரிவுபடுத்தும் நோக்கத்தோடு தகுதிவாய்ந்த தனி நபர்களுக்குக் கழகச் சங்க அமைப்பு விதி களுக்குட்பட்டுக் கடனுதவி வழங்கத் தொடங்கி யுள்ளது.

முதல் கட்டமாக, சர்க்கரை ஆலைகட்குக் கரும்பு எடுத்துச் செல்வதற்கு ஏதுவாக டயர் பொருத்திய மாட்டு வண்டி வாங்குவதற்குத் தனி நபர்களுக்கு விளிம்புக் கடனாக 20 சதவிகிதம் (மொத்தத் திட்ட முதலீட்டில்) அல்லது உயர்ந்த பட்சமாக ரூ.5,000 வரை கழகம் கடன் வழங்கி வருகிறது. இத்திட்டத்தின்கீழ் இதுகாறும் ரூ.26.362 இலட்சம் கடனாக வழங்கப்பட்டுள்ளது. இதனால் பயனடைந்த பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற் படுத்தப்பட்டோர், சீர்மரபினர் 984 நபர்கள் ஆவார்கள்.

**பயிற்சி நிலையங்கள்**

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப் பட்டோர், சீர்மரபினர் வகுப்பினைச் சார்ந்த கைவினைஞர்கள் தங்களது தொழில் திறமையை வளர்த்துக் கொள்ளவும், அதன் மூலம் வரு வாயைப் பெருக்கிக் கொள்ளவும் ஏதுவாகப் பயிற்சி நிலையங்கள் தோற்றுவிக்க இக்கழகம் விழைகிறது. இந்த அடிப்படையில் கிருஷ்ணகிரி யில் கறுப்புக் கல் வெட்டவும், அதனை மெரு கேற்றவும் பயிற்சி அளிக்க தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் துணை கொண்டு ரூ.40 இலட்சம் செலவில் ஒரு பயிற்சி நிலையம் அமைக்கத்தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேலும் சிற்பக்கலை, மர வேலைப்பாடு களுடன் கூடிய சிற்பங்கள் தமிழ்நாட்டில் மிகவும் புகழ்வாய்ந்த கலைத் தொழிலாகும். மேற்கண்ட சிற்பங்கள் நம் நாட்டில் மிகவும் தட்டுப்பாடாக உள்ளது. வெளிநாட்டுப் பயணிகள், இந்தியா வின் மற்ற மாநிலங்களிலிருந்து வரும் உல்லாசப் பயணிகள் இதனை மிகவும் விரும்பி வாங்கு கின்றனர்.

தற்சமயம் இம்மாநிலத்தில் கைவினைஞர் வளாகங்கள் குறைந்த அளவில் உள்ளன. பிற் பட்டோர், மிகவும் பிற்பட்டோர், சீர்மரபினர் வகுப்பினைச் சார்ந்த இளைஞர்களுக்கு இக் கலையில் பயிற்சி தந்து சுயவேலைவாய்ப்பு பெறு வதற்குண்டான தொழில்நுட்பப் பயிற்சி நிலை யத்தில் வழங்கும் சான்றுக்கு இணையாகச் சான்று வழங்குவது போன்று ஒரு பயிற்சி நிலையம்

★ ஒரு குறிப்பிட்ட காலத்தைச் சேர்ந்த மக்களின் வாழ்வையும், நாகரிகத்தையும் உள்ளவாறு பிரதி பலிக்கும் கண்ணாடி கலையாகும். இந்திய நாகரிகம் உயிராற்றல் பொங்கித் ததும்பிய காலத்தில் அது அழகுப் பொருள்களைப் படைத்தது. கலைகள் சிறந் தோங்கின. அவற்றின் எதிரொலி தொலை நாடுகளி லும் கேட்கப்பட்டது.

—பண்டித நேரு

அமைக்க, சென்னையிலிருந்து 40 கிலோ மீட்டர் தொலைவில் மாமல்லபுரம் சாலையில் அமைந்த திருவிடந்தைக் கிராமத்தில் பயிற்சி நிலையம் ஒன்று ஆரம்பிக்கலாம் என முடிவு செய்து, முதல் கட்ட வேலையாகப் பயிற்சி நிலையம் ஆரம்பிக்கத் தகுதியான இடம் 2.5 ஏக்கர் நிலப்பரப்பில் பார்வையிடப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக அரசின் ஒப்புதல் பெற நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டு வருகிறது.

இக்கழகத்தின் மூலம் கடன் பெற அடிப்படைத் தகுதிகள்

1. இத்தொழிற் கூட்டுறவுச் சங்கங்களில் சேர்ந்து பயனடையும் பயனாளிகள் குற்றப்பட்டிய லிலிருந்து நீக்கப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் இவைகளில் ஏதாவது ஒன்றைச் சார்ந்தவராக இருத்தல் வேண்டும்.

2. இவர்களில் ஆண்டு வருமானம் ரூ.6,400-க்கு உட்பட்டதாக இருத்தல் அவசியம்.

**கடன் கோரும் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களின் கடமைகள்**

கூட்டுறவுச் சங்கங்கள் அந்தந்தத் துறைகளில் பதிவு செய்த பிறகே இக்கழகக் கடன் கோரும் விண்ணப்பங்களையும் இதர ஆவணங்களையும் அந்தந்தத் துறை மாவட்ட அலுவலரின், சம்பந்தப் பட்ட மாவட்ட பிற்பட்டோர், சிறுபான்மையினர் நல அலுவலர் அவர்களது பரிந்துரையுடன் இக் கழகத்திற்கு அனுப்புதல் வேண்டும்.

இதேபோல் வங்கிக் கடன் பெறத் தேவையான கடன் விண்ணப்பம் மனுக்களை, வங்கிகளுக்குச் சம்பந்தப்பட்ட துறை மாவட்ட அலுவலரின் பரிந்துரையுடன் அனுப்பி, இதன் விவரத்தினை இக்கழகத்திற்குத் தெரியப்படுத்துதல் அவசியம். அத்துடன் இத்திட்டத்திற்கு ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் மானியம் பெறத் தகுதி உள்ள வற்றிற்குத் தகுந்த பிரேரணையுடன் திட்ட அலுவலர், ஊரக வளர்ச்சித் திட்டம் அவர்களுக்கு அனுப்பி விவரத்தை இக்கழகத்திற்கு தெரியப் படுத்துதல் அவசியம்.

வங்கிகளிடமிருந்து இத்திட்டத்திற்குக் கடனுதவி பெற இக்கழகம் தகுந்த நடவடிக்கை எடுக்கும். வங்கிகள் இத்திட்டங்களுக்கு கடனுதவி வழங்கும் நேரத்தில் இக்கழகம் தனது ஆரம்ப முதலீட்டுக்

# பொய் சொல்லக்கூடாது பாப்பா!



அவன் சிறுவன்; இளம் கன்று; பயமறியாதவன். மானெனத் துள்ளி வீட்டை வலம் வந்தவன். தந்தை வீட்டில் இல்லை என்பதை உணர்ந்தான். வக்கீல் அப்பா ஆபீஸ் அறையைத்தான் பார்ப் போமே என்று நினைத்துக்கொண்டு மெதுவாக உள்ளே நுழைந்தான். அறைக்குள் இருந்த கண்ணாடி பீரரோக்களிலிருந்த கனமான புத்த கங்கள் அவனைக் கவரவில்லை. மேசைமீது இருந்த இரண்டு பேனாக்கள் மட்டும் அவனை ஈர்த்தன.

'இரண்டுமா அப்பாவிற்கு? எனக்கும் ஒன்று இருந்தால் என்ன?' என்று மனம் நினைக்க, கரம் அவைகளில் ஒன்றை எடுத்துச் சட்டைப் பையில் செருகிக் கொண்டது.

தந்தை வந்தார்; தம் அறைக்குச் சென்றார். மேசை மேலிருந்த பேனாவைக் காணவில்லை. வீடு முழுவதும் தேடியும் கிடைக்கவில்லை; மிக்க சினம் கொண்டார்.

சிறுவன் அந்தப் பக்கம் ஓடி வந்தான்; அவனை நிறுத்தி தந்தை அதட்டிக் கேட்டார்; ''மேசை மீதிருந்த பேனாவை எடுத்தாயா?

''இல்லையே...'' தந்தையின் கோபம் அவனைப் பொய் சொல்ல வைத்தது. ஒருவேளை அன்புடன் கேட்டிருந்தால் உண்மையைச் சொல்லியிருப் பானோ என்னவோ!

பொய் என்றும் நிலைப்பதில்லை. பேனாவை எடுத்து மறைத்து வைத்ததைத் தந்தை அறிந்தார். கோபம் குமுறிக் கொந்தளிக்கச் சிறுவனை நன்கு புடைத்து விட்டார்.

சிறுவன் அழுதுகொண்டே அம்மாவிடம் ஓடினான். மகனின் உடலெல்லாம் சிவந்து வீங்கியிருப்பதைக் கண்ட அன்னைக்கு மனம் பதைத்தது. கண்கள் நீர் சொரிய, ''பொய் சொல்லலாமா? பொய் சொன்னால்தானே அப்பா அடித்தார்'' என்று சொல்லிக்கொண்டே வீங்கியிருந்த இடங்களில் எல்லாம் மருந்து தடவி னார். சிறுவன் எண்ணிக்கொண்டான்; 'பொய் சொல்லக்கூடாது. பொய் சொன்னதற்குக் கிடைத்த தண்டனை நியாயமே!'

'இன்று எனக்கு என்ன ஏற்பட்டுவிட்டது? நம் அருமை மைந்தனிடம் இப்படி நடந்துகொள்ள எப்படித் துணிந்தேன்?' என்று எண்ணி எண்ணித் தனிமையில் தந்தையார் வருந்தியதை சிறுவன் அறிய நியாயமில்லை.

'பொய் சொல்லக்கூடாது; அதற்குத் தண்டனை நியாயமே' என்று அச்சிறுவயதிலும் உணர்ந்தவர் நமது மதிப்பிற்குரிய நேருஜியே ஆவார். மகனை நையப் புடைத்து அதற்காக மனம் வருந்தியவர் நேருஜியின் தந்தையான மோதிலால் நேரு. அருமைச் செல்வனைப் பொய் சொல்லக் கூடாது என்று அறிவுரை கூறி ஆறுதலளித்தவர் அன்னை சொரூபராணியார்.

**—'நாட்டுக்கு உழைத்த நல்லவர்' என்னும் நூலிலிருந்து.**

---

கடனை நேராகச் சம்பந்தப்பட்ட வங்கிகளுக்கு அனுப்பி, வங்கிகள் மூலம் திட்டத்திற்குத் தேவைப் படும் முழுத்தொகையையும் பெற வகை செய் கிறது.

இக்கழகம் வழங்கும் கடன் தொகைக்குக் கடன் கொடுத்த 6-வது மாதத் தொடக்கத்திலிருந்து இக்கழகக் கடன் தொகையை 6 மாதக் காலத் தவணையிலோ அல்லது மாதத் தவணையிலோ தொழிலின் தன்மைக்கேற்ப வங்கிக் கடனுடன் சேர்த்து செலுத்தப்படல் வேண்டும். குறிப்பிட்ட காலம் கடந்து செலுத்தப்படும் தவணைத் தொகைக்கு அபராத வட்டியாக ஒரு சதவிகிதம் கூடுதலாக வசூலிக்கப்படும்.

இக்கழகம் கொடுக்கும் கடனுக்கு அடமானமாக வங்கிக்கு ஒப்பளிக்கப்பட்ட சொத்தின்மேல் 2-வது அடமானமாக அடமானப் பத்திரமும் அதற்கு வங்கியின் ஒப்புதலும் (வங்கித் தடையின்மைச் சான்று) சேர்த்துக் கொடுக்கப்பட வேண்டும். இக்கழகம் மூலம் நிதி உதவி பெற்ற கூட்டுறவுச் சங்கங்கள் தங்களது காலாண்டு வளர்ச்சி அறிக் கையைத் தவறாது இக்கழகத்திற்கு அனுப்புதல் வேண்டும்.

ஆர்வமுள்ள பிற்படுத்தப்பட்ட சமூகத்தினர் கூட்டுறவு முறையில் இணைந்து தொழிற் கூட்டுற வுச் சங்கங்கள் அமைத்து, அதன்மூலம் வேலை வாய்ப்பு பெற்று மேன்மையடைய விரும்புவோர், இதுகுறித்து தங்கள் மாவட்ட பிற்பட்டோர் - சிறுபான்மையினர் நல அலுவலர் அவர்களைத் தொடர்பு கொள்ளலாம். இதுகுறித்து பொது மேலாளர், தமிழ்நாடு பிற்பட்டோர் பொருளா தார மேம்பாட்டுக் கழகம் அவர்களை, கடிதம் மூலமாகவோ அல்லது வேலைநாட்களில் காலை 10 மணி முதல் மாலை 5.00 மணி வரை, 807, அண்ணாசாலை (5-ஆம் தளம்), சென்னை-600 002 என்ற முகவரியில் நேரிலும் சந்திக்கலாம்.

# கைவினைஞர்கள் வாழ்க்கைத்தரம் மேம்பட கதர்கிராமத் தொழில் வாரியப் பணிகள்

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் தொடங்கப்பட்ட 1.4.60-லிருந்து கடந்த 31 ஆண்டுகளாக, கிராமப் பகுதிகளிலுள்ள கை வினைஞர்களின் வாழ்க்கைத் தரத்தைக் கதர் கிராமத் தொழில்கள் மூலமாக மேன்மை அடையச் செய்திட அனைத்து முயற்சிகளையும் மேற் கொண்டு வருகிறது.

கிராமத் தொழில்கள் செயல்படுத்துவதில் அகில இந்திய அளவில், தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் முதலிடத்தை வகிக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது. கதர்த் திட்டங்களை நிறைவேற்றுவதில் உத்திரப்பிரதேசத்திற்கு அடுத்து இரண்டாவது இடத்தை இவ்வாரியம் வகிக்கிறது.

கதர் கிராமத் தொழில் திட்டங்கள், மூன்று அடுக்கு முறையில் இவ்வாரியத்தினால் செயல் படுத்தப்பட்டு வருகின்றன. அவை:

| | |
|---|---|
| 1. வாரியத்தின் அலகுகள் | 1,239 |
| 2. தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் | 1,587 |
| 3. கைவினைஞர்களுக்குத் தனி நபர் நிதியுதவி | 67,170 (நபர்கள்) |

இவ்வாரியத்தின் 1990-91-ஆம் ஆண்டின் சாதனைகளும், 1991-92-ஆம் ஆண்டிற்கான இலக்குகளும் வருமாறு:

| உற்பத்தி | 1990-91-ஆம் ஆண்டின் சாதனை (ரூபாய் | 1991-92-ஆம் ஆண்டிற்கான இலக்கு கோடியில்) |
|---|---|---|
| அ. கதர் ரகங்கள் | 20.29 | 25.00 |
| ஆ. கிராமத் தொழில் பொருட்கள் | 251.59 | 275.00 |
| விற்பனை | | |
| அ. கதர் ரகங்கள் | 24.85 | 29.00 |
| ஆ. கிராமத் தொழில் பொருட்கள் | 280.77 | 310.00 |

இதுவரை 10 இலட்சம் பேர் வேலைவாய்ப்புப் பெற்றுள்ளனர். இதில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் 1.85 இலட்சம் பேர். மகளிர் 4.05 இலட்சம் பேர் என்பது குறிப்பிடத்தக்கது.



### எதிர்காலத் திட்டங்கள்

★ நடப்பு 1991-92-ஆம் ஆண்டில் இவ்வாரியம் ஒரு இலட்சம் நபர்களுக்கு கூடுதல் வேலை வாய்ப்பு அளித்திடத் திட்டங்களைத் தீட்டி வருகிறது.

★ 1991-92-ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் புதிதாக 25 கதர் அங்காடிகள் திறக்கப்பட உள்ளன.

★ இவ்வாண்டில் புதிதாக 5 டிடெர்ஜெண்ட் சோப்பு உற்பத்தி நிலையங்கள் திறக்கப்பட உள்ளன.

★ தென்னார்க்காடு மாவட்டம் விருதாசலத்தில் செயல்படாமல் உள்ள அரசுக்குச் சொந்தமான பீங்கான் கலைக்கூடத்தை இவ்வாரியம் எடுத்துக் கொண்டு, அதனைப் புத்தாக்கம் செய்ய உள்ளது.

★ கதர்த் துணி ரகங்களின் வடிவமைப்புகளை நவீனப்படுத்திட தமிழ்நாடு அரசு இவ்வாரியத்திற்கு மூன்று இலட்சம் ரூபாய் வழங்கியுள்ளது. இந்த நிதியைக் கொண்டு 1,000 நெசவாளர்களிடம் உள்ள அச்சுகளும் விழுதுகளும் மாற்றியமைக்கப்பட உள்ளன.

★ இந்தியாவிலேயே மிகப் பெரிய கதர் விற்பனை நிலையமான சென்னை குறளகம் கதர் அங்காடியின் விற்பனையை மேலும் அதிகரிக்கும் நோக்கத்துடன், கணிப்பொறியைப் பயன்படுத்திட அரசு அனுமதி வழங்கியுள்ளது.

★ புகழ் பெற்ற குறளகம் கதர் அங்காடியில், குளிரூட்டும் சாதனம் அமைப்பதற்கான எடுத்துரையை அரசு பரிசீலனை செய்து வருகிறது.

★ இவ்வாண்டு முதல் செயற்கை வைரக்கற்களைப் பட்டை த் தீட்டும் தொழிலை மேம்படுத்திட வாரியம் தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ளது.

அண்ணல் காந்தியடிகள் பிறந்த நாள் மற்றும் தீபாவளிப் பண்டிகைக் காலங்களில் கதர் கிராமத் தொழில் ஆணைக் குழுவும், தமிழ்நாடு அரசும் இவ்வாண்டு கதர்த் துணி விற்பனைக்குத் தலா 10 சதவிகிதம் சிறப்புத் தள்ளுபடி வழங்குகிறது.

தீபாவளிப் பண்டிகைக் காலத்தில் கதர் ரகங்களுக்கு கீழ்கண்டவாறு மொத்த சிறப்புத் தள்ளுபடி இவ்வாண்டு அளிக்கப்படுகிறது:

1. கதர் பருத்தி 35 சதவிகிதம், 2. பாலியஸ்டர் 30 சதவிகிதம், 3. பட்டு ரகங்கள் 20 சதவிகிதம், 4. பாவ்டா 30 சதவிகிதம், 5. உல்லன் 20 சதவிகிதம்.

இவ்வாண்டு தீபாவளிப் பண்டிகைக் காலத்தில், கதர் விற்பனை இலக்கு ரூபாய் 24.10 கோடி அளவிற்கு வாரியம் நிர்ணயம் செய்துள்ளது. இதில் ரூபாய் 3.40 கோடிக்குக் குறளகம் கதர் அங்காடியில் மட்டும் விற்பனை செய்யப்பட உள்ளது.

## புகையால் பலி எட்டு லட்சம்

புகைப்பிடித்தல் உட்பட புகையிலை உபயோகித்தல் தொடர்பான நோய்களால் ஆண்டொன்றுக்கு நமது நாட்டில் எட்டு லட்சம் பேர் மரணம் அடைவதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

சிகரெட் பற்றிய 1975 ஆம் ஆண்டு சட்டத்தை அரசு செயல்படுத்தி வருகிறது. இதன்படி சிகரெட் விளம்பரங்களில் 'புகை பிடித்தல் உடலுக்குத் தீங்கானது' என்ற சட்டப்பூர்வ எச்சரிக்கை கட்டாயமாக இடம்பெற வேண்டும்.

புகைப்பதைத் தடுப்பதற்காக சில நிர்வாக ரீதியிலான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன. மருத்துவமனைகள், இதர சுகாதார மையங்கள், கல்விக் கூடங்கள், மாநாட்டு அறைகள், உள்நாட்டு விமானங்கள், குளிர் சாதன வசதியுள்ள இரயில் வண்டி பெட்டிகள், பேருந்துகள் ஆகிய இடங்களில் புகை பிடித்தல் தடுக்கப்பட்டுள்ளது.

புகையிலையைப் பயன்படுத்துவதால் ஏற்படும் தீய விளைவுகளைப் பற்றி மக்களுக்கு எடுத்துச் சொல்வதற்காக பல்வேறு சுகாதாரக் கல்வித் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

## நெய்வேலி சுரங்கத்தில் உற்பத்தி சாதனை

நெய்வேலி பழுப்பு நிலக்கரி கார்ப்பொரேஷன், 1990-91 ஆம் ஆண்டில் தனது முதல் சுரங்கத்திலிருந்து 75.44 லட்சம் டன் பழுப்பு நிலக்கரியும், 2.55 லட்சம் டன் கோக் கரியும் வெட்டி எடுத்து உற்பத்தி சாதனை நிகழ்த்தியுள்ளது. இந்த உற்பத்தி அளவு, இந்த கார்ப்பொரேஷன் வரலாற்றிலேயே கண்டிராத உயர் அளவாகும்.

அதே ஆண்டில், கார்ப்பொரேஷனின் மொத்த பழுப்பு நிலக்கரி உற்பத்தியானது, நிர்ணயிக்கப்பட்ட 110 லட்சம் டன் இலக்கையும் மிஞ்சி 117.59 லட்சம் டன் ஆகவும், அனல் மின் உற்பத்தி 7,040 மில்லியன் யூனிட் என்ற இலக்கைத் தாண்டி 7,462.35 மி. யூனிட் அளவையும் எட்டியது.

கடந்த நிதியாண்டில் நெய்வேலி பழுப்பு நிலக்கரி கார்ப்பொரேஷன் ரூ. 93 கோடி லாபம் ஈட்டியுள்ளது. தொடர்ந்து 14 ஆண்டுகளாக லாபம் ஈட்டி வரும் அரசுத்துறையாகும் இது.

—நன்றி: 'திட்டம்'

மாணவர் பக்கம்

# அறிவுச்சுடர்

**வினாக்கள்:**

1. ஆசியாவிலேயே இரு பெரிய ஜனநாயக நாடுகள் எவை?

2. எவரெஸ்டு சிகரத்தின் உயரம் என்ன?

3. உலகிலேயே மிகப் பெரிய பரிசு எது?

4. உலகிலேயே அதிக அளவு காப்பி உபயோகிக்கும் நாடு எது?

5. உலகின் மூன்றாவது உயரமான சிகரம் எது?

6. உலகிலேயே மிக அழகான இரண்டாவது கடற்கரை எது?

7. இந்தியாவில் இராணுவப்படை எப்போது ஆரம்பிக்கப்பட்டது?

8. தமிழ்நாட்டில் எந்த மாவட்டத்தில் முதன்முதலாகக் கூட்டுறவு நகர வங்கி ஆரம்பிக்கப்பட்டது?

9. தமிழ்நாட்டின் மிகப்பெரிய ஏரி எது?

10. 'வைக்கம் வீரர்' யார்?

11. மிகச் சுத்தமான வைரத்தின் நிறம் என்ன?

12. மின்சாரத்தின் வேகம் ஒரு வினாடிக்கு எவ்வளவு?

13. 'தங்கக் கதவு' என்ற பெயர் எந்த நகரத்தோடு தொடர்பு உடையது?

14. தஞ்சைப் பெரிய கோவிலைக் கட்டிய இராசராச சோழனின் இயற் பெயர் என்ன?

**விடைகள்:**

1. இந்தியாவும்-ஜப்பானும்
2. 29,028 அடி
3. நோபல் பரிசு
4. அமெரிக்கா
5. கஞ்சன்-ஜங்கா
6. சென்னை மெரீனா கடற்கரை
7. 1921-ஆம் ஆண்டு
8. செங்கல்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்டம்
9. மதுராந்தகம் ஏரி
10. தந்தை பெரியார்
11. வைரத்திற்கு நிறம் கிடையாது
12. ஒரு வினாடிக்கு 2,70,000 மைல்
13. சான் பிரான்சிஸ்கோ
14. அருள் மொழி

**வீ. செங்கதிர்**
**XI-C புனித சூசையப்பர்**
**மேனிலைப் பள்ளி**
**செங்கற்பட்டு-603 001.**



# சுற்றுலா

புலவர் தணிகை உலகநாதன்





சுற்று லாவாம் சுற்றுலா
சுகமளிக்கும் சுற்றுலா!
கற்ற கல்வி மனத்தில் பதியக்
கருவி யாகும் சுற்றுலா.

காடும் மலையும் காணலாம்;
கடலும் வயலும் பார்க்கலாம்;
நாடு முற்றும் சுற்றி வந்தால்
நன்மை பலவும் அடையலாம்.

கோயில், குளங்கள், சோலைகள்
குலவும் நாட்டுப் புறங்களில்
பாயும் அருவி, ஆறு தம்மைப்
பார்த்துப் பார்த்து மகிழலாம்.

'உலகம் நமது பள்ளியாம்;
இயற்கை நமது புத்தகம்;
நிலவும் இந்த உண்மை தன்னை
நேரில் அறிந்து களிக்கலாம்.

பறவை, விலங்கு மக்களின்
பழக்க வழக்கம் அறியலாம்
உறவை வளர்த்து ஒருமைப் பாட்டின்
உயர்வை அளிக்கும் சுற்றுலா.





★ **இன்றைய குழந்தைகளே நாளைய இந்தியாவை அமைப்பவர்கள் என்பதை எப்போதும் நான் உணர்கின்றேன். குழந்தைகளை வளர்க்கும் முறையைப் பொறுத்தே, ஒரு நாட்டின் எதிர்காலம் அமையும்.**

மருத்துவக் கட்டுரை:

# அல்சர்

## ULCER

**இரைப்பையிலும், சிறுகுடலிலும் 'அல்சர்' புண் வருவதற்கான காரணங்கள் யாவை?... அந்தத் துன்பத்திலிருந்து விடுபடுவது எப்படி?... என்றெல்லாம் விளக்குகிறார். டாக்டர் எம்.ஏ.அப்துல் சீதக்காதி எம்.டி.**

வயிற்றை வலிக்கிறதா அல்லது எரிகிறதா... என்று இனங்காண முடியாத வேதனையோடு சிலர் துடிப்பதை நாம் பார்த்திருக்கிறோம்; சுருட்டிக்கொண்டு கிடந்து புரளுவதைக் கண்டு நாமும் கண்கலங்கியிருக்கிறோம்.

அப்படிப்பட்ட உபாதைக்கு ஆளானவர்களை மருத்துவர்களிடம் கொண்டு சென்று பரிசோதிக்கச் செய்தோமானால் - நோயாளியின் வயிற்றுப் பகுதியை லாவகமாக அழுத்திப் பார்ப்பார் அவர்; குறிப்பாக இரண்டொரு இடங்களில் தட்டிப் பார்ப்பார்; மிகக் கவனமான பரிசோதனைக்குப் பிறகு, அவருக்குள்ள துன்பங்கள் பற்றி நேரிலும் கேட்டறிவார்.

முடிவாக - 'இவருக்கு அல்சர்' என்று சொல்லிவிட்டு, மருந்து மாத்திரைகளைக் கொடுப்பார்; உணவு முறைகளில் - வாழ்முறை நடவடிக்கைகளில் மேற்கொள்ள வேண்டிய பழக்கவழக்கங்களைச் சொல்லுவார்.

'அல்சர்'(ULCER) எதனால் வருகிறது?... அதை வருமுன் தவிர்ப்பதும் வந்த பின் ஒருவர் நடந்து கொள்ள வேண்டியதும் எப்படி என்பன போன்ற ஐயப்பாடுகளைக் களைவதற்காக டாக்டர் எம்.ஏ. அப்துல் சீதக்காதி, எம்.டி. அவர்களைச் சந்தித்தோம்.

'அல்சர்' பற்றி நாம் தொடுத்த வினாக்களும், அவர் அளித்த விடைகளும் இங்கே தொகுத்தளிக்கப் படுகின்றன:

**அல்சர் என்றால் என்ன - அது உடலின் எந்த உறுப்புகளிலெல்லாம் ஏற்படும்?**

அல்சர்(ULCER) என்றாலே புண் என்று தான் பொருள். நமது உடலில் இன்னின்ன உறுப்புகளில்



தான் அல்சர் வரும் என்பதில்லை; உடலின் உள் உறுப்புகளிலும், வெளி உறுப்புகளிலும் இது வருவதுண்டு. ஆனால், இப்போதெல்லாம், அல்சர் என்றாலே, பெரும்பாலும் வயிற்றில் வருவதுதான் என்றாகிவிட்டது.

**வயிற்றில் ஏற்படும் அல்சர் எத்தனை வகைப்படும் - அவை, வயிற்றின் எந்தப் பகுதிகளையெல்லாம் பாதிக்கும்?**

வயிற்றில் ஏற்படும் அல்சர் பெப்டிக் அல்சர் Peptic Ulcer) என்றுதான் குறிப்பிடப்படும்; அதாவது, இரைப்பையில் செரிமானக் கோளாறினால் ஏற்படும் புண்.

உணவுக்குழலின் கீழ்ப்பகுதி, இரைப்பை, சிறுகுடலின் முன்பகுதி ஆகிய இடங்களில்தான் பெரும்பாலும் இந்தப் புண் தோன்றும்.

இரைப்பையில் ஏற்படும் புண் காஸ்ட்ரிக் அல்சர் Gastric Ulcer) எனப்படும்; சிறுகுடலின் முன்பகுதியில் ஏற்படும் புண் டியோடெனால் அல்சர் Duodenal Ulcer) எனப்படும். இந்த இரண்டும் சேர்ந்ததுதான் பெப்டிக் அல்சர் Peptic Ulcer)

**ஒருவருக்கு அல்சர் ஏற்பட்டிருக்கிறது என்பதற்கான அறிகுறிகள் யாவை?**

பசி எடுப்பதைப்போன்ற உணர்வுடன் வயிறு வலிக்கும்; வாந்தி வரும் அல்லது வாந்தி பண்ண வருவதுபோலிருக்கும்; உணவைப் பார்க்கவே வெறுப்பாக இருக்கும். சிறுகுடல் முன்பகுதியில் புண் Duodenal Ulcer) ஏற்பட்டுள்ள நோயாளிக்கு, ஏதாவது சாப்பிட்டவுடன் வயிற்று வலி குறையும்; ஆனால் இரைப்பையில் புண் Gastric Ulcer) உண்டான நோயாளிக்கோ வயிற்றுவலி அதிகமாகும். 40 சதவிகித இரைப்பைப் புண் நோயாளிகள் எடை குறைந்து, மிக மெலிந்து காணப்படுவார்கள்.

**பெப்டிக் அல்சர் ஏற்படுவதற்கான அடிப்படைக் காரணங்கள் என்ன?**

ஒருவர் உண்ணும் உணவு, உணவுக் குழல் வழியாக இரைப்பையை அடைகிறது; இரைப்பையில்



**டாக்டர் எம்.ஏ.அப்துல் சீதக்காதி, எம்.டி.**



சுரக்கும் ஹைடிரோகுளோரிக் அமிலமும், பெப்சின் என்ற நொதியும் அந்த உணவுப் பொருளைச் செரிக்கச் செய்கின்றன. இந்த இரண்டும் அளவுக்கு அதிகமாகச் சுரந்தால், பெரும்பாலும் சிறுகுடலின் முன்பகுதியிலும் இரைப்பைச் சுவரிலும் சளிபோல் படர்ந்து பாதுகாப்பளிக்கின்ற சிலேட்டுமப் படலம்நீர்த்துப் போய் வலுவிழந்து சீர்குலைந்துவிடும். இதன் காரணமாக, அந்த அமிலம் படுகிற இடமெல்லாம் புண்ணாகி விடும். இதுதான் பெப்டிக் அல்சர். இரைப்பைச் சுவரும் சிறுகுடலின் முன்பகுதியும் இவ்வாறு அமிலத்தால் அரிக்கப்பட்டுப் புண்ணாவதற்குப் பாக்டீரியா கிருமிகளும்கூட காரணமாக இருக்கக்கூடும் என்று இப்போது கருதப்படுகிறது. ஆனால், இன்னமும் இதுதான் காரணம் என்று அறுதியிட்டுக் கூறமுடியாத நிலைமையிருக்கிறது.

**ஹைடிரோ குளோரிக் அமிலமும் பெப்சின் என்கிற நொதியும் அளவுக்கு அதிகமாகச் சுரக்கும் நிலை எதனால் உண்டாகிறது?**

இதனால்தான் அப்படி ஏற்படுகிறது என்று குறிப்பாக எதையும் சொல்லமுடியாது; ஆனால் - அடிக்கடி உணர்ச்சிவசப்படுவோர், மது அருந்துவோர், புகையிலை போடுவோர், காபி-டீ அடிக்கடி குடிப்பவர்கள், ஆறாத உணவை அவசர அவசரமாகச் சுடச்சுடச் சாப்பிடுவோர், மிகுந்த காரம் உண்போர், மசாலா அதிகமுள்ளவைகளையோ - வறுத்த பண்டங்களையோ அடிக்கடி விரும்பி உண்போர், Asprin போன்ற மாத்திரைகளை அதிகமாகச் சாப்பிடுபவர்கள் ஆகியோருக்கே பெரும்பாலும் பெப்டிக் அல்சர் உண்டாகிறது என்று கண்டறியப்பட்டுள்ளது. காரணம் - மேலே குறிப்பிட்ட பழக்க வழக்கங்களால்தான் இரைப்பையின் சிலேட்டுமப் படலம் பாதிக்கப்பட்டும் அமிலத்தன்மை அதிகமாகிப் புண் வரவும் ஏதுவாகும்.

மேற்கண்ட பழக்கவழக்கங்கள் உள்ளவர்கள் அதை நிறுத்தாவிட்டால், அளிக்கப்படும் சிகிச்சையும் கூட அவ்வளவாகப் பலனளிக்காது.

முன்சிறுகுடல் புண் உள்ளவர்களுக்கு அமிலம் சுரப்பது அதிகமாக இருந்தாலும், இரைப்பைப் புண் உள்ளவர்களுக்கு அமிலம் சுரப்பது சாதாரணமாகவோ அல்லது குறைவாகவோதான் இருக்கும்.

இதிலிருந்து அமிலம் அதிகமாகச் சுரப்பதனால் மட்டுமே அல்சர் வரும் என்று கூற இயலாது.

ஒருவர் உணவு உண்டபிறகு, வேகஸ் (Vagus) என்ற நரம்பின் தூண்டுதலால்தான் ஹைடிரோ குளோரிக் அமிலம் சுரக்கிறது. மனக்கவலை, அமைதியின்மை, பரபரப்புத்தன்மை, காபி, டீ, ஆகியவை அமிலம் சுரப்பதை அதிகரித்து, அதன் காரணமாகவே அந்த அமிலம் படும் இடம் புண்ணாகும் நிலை நேரிடுகிறது.

**அல்சருக்கு ஆளானவர்கள் காபி, டீ, சாப்பிடக்கூடாது என்றால், பால் குடிப்பது நல்லதா?**

பாலை, ஒரு அல்சர் நோயாளி, அல்சர் குணமாக்கும் மருந்து என்று கருதி அதிகம் அருந்துவது தவறாகும். ஏனெனில், பாலில் கால்சியமும் புரதச்சத்தும் அதிக அளவில் உள்ளது; இந்த இரண்டும் சேர்ந்து அதிக அளவில் அமிலம் சுரக்க வழி வகுத்துவிடும். இதனால், அல்சருள்ளவர்களுக்குப் பால் அதிகம் தருவதும் கூடாது. 'வயிற்றில் பால் வார்த்த மாதிரி இருந்தது' என்று வேண்டுமானால் அவர்கள் சொல்லிக் கொள்ளலாமே தவிர, அல்சர் உள்ளவர்கள் வயிற்றில், உள்ளபடியே அதிகமாகப் பால் வார்த்தால் வம்புதான்!

**அல்சர் என்பது பரம்பரை நோயா?**

அப்படிச் சொல்ல முடியாது என்றாலும், அல்சர் நோயாளியின் முதல் வாரிசுக்கு இதே பாதிப்பு ஏற்படுகிற வாய்ப்பு, மூன்று சதவிகிதம் இருக்கிறது என்று ஆராய்ச்சிகள் மூலம் கண்டறியப்பட்டிருக்கிறது.

**அல்சர் பொதுவாக ஆண்களை அதிகம் பாதிக்குமா, பெண்களை அதிகம் பாதிக்குமா?**

அல்சர், இருபாலருக்கும் பொதுவான நோய்தான். ஆனால், சிறுகுடல் புண்ணானது (Duodenal Ulcer) 5 முதல் 15 சதவிகிதம் வரை பெண்களைவிட ஆண்களையே அதிகம் பாதிக்கிறது. ஒரு சதவிகிதச் சிறுகுடல் புண் சிறுகுடலின் துவக்கத்திலேயே காணப்படும். இந்த அல்சர் புண்ணின் அளவானது ஒரு சென்டிமீட்டருக்கும் குறைந்த விட்டம் உள்ளதாகவே இருக்கும். மொத்தத்தில் பார்த்தோமானால், இந்தப்புண் உள்ள ஆண்களே 4 மடங்கு அதிகமாக இருப்பார்கள்.

அல்சர் நோய் 'ஓ' பிரிவு இரத்தம் உள்ளவர்களிடையேதான் அதிகம் காணப்படுகிறது. ஏன் இப்படி என்று இதற்கான அடிப்படைக் காரணம் இன்னும் திட்டவட்டமாகக் கண்டறியப்படவில்லை.

**டியோடினல் அல்சர், காஸ்ட்ரிக் அல்சர் இரண்டுக்கும் உள்ள வேறுபாட்டை எளிதாக அறியும் வழி என்ன?**

டியோடினல் அல்சர் உள்ளவர்களுக்கு, வயிற்றுவலி, சாப்பிட்டு 90 நிமிடத்திலிருந்து 3 மணி நேரத்திற்குள் வரும்; பெரும்பாலும் இரவில் தூக்கத்தில் வலி உண்டாகும். ஆனால், சாப்பிட்டவுடனோ அல்லது உட்கொள்ளுகிற Antacid மருந்தோ உடனே வயிற்று வலியைக் குறைக்கும். நீண்டநாளாகச் சிறுநீரகக் கோளாறு உள்ளவர்களுக்கும்-



ஆஸ்துமா, ஈரல் வீக்கம் இருப்பவர்களுக்கும் சிறுகுடல் புண்ணான டியோடினல் அல்சர் அதிகம் வரக் கூடும்.

இரைப்பைப் புண்ணான காஸ்ட்ரிக் அல்சர் உள்ளவர்களுக்கோ சாப்பிட்ட உடனேயே வயிற்று வலி தொடங்கிவிடும். வயிற்றின் மேல் புறம் நடுபாகத்தில் வலிக்கும். வாந்தி, குமட்டல் இருக்கும். இது பெரும்பாலும் இது 50 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கே வரும்.

**அல்சரிலிருந்து குணம் பெறும் எளிய வழிகள் ஏதாவது இருந்தால் சொல்லுங்களேன்?**

அப்படியொரு வழி எந்த நோய்க்கும் இல்லை; ஆனால், ஒன்று செய்யலாம்; அல்சர் உள்ளவர்கள் தன் உடலுக்கு ஒத்துக் கொள்ளாத உணவைத் தவிர்த்து விடலாம். தலைவலி, மூட்டு வலி என்று வலி நிவாரணதிற்காக ஆஸ்பிரின் (Asprin) கார்டிசோன் (Cortisone) வகை மாத்திரைகளை விருப்பம்போல் தாமாக வாங்கிச் சாப்பிடக் கூடாது. மனஅமைதி, காலாகாலத்தில் உணவு உட்கொள்ளல், எப்போதும் நிதானம், மகிழ்ச்சி, போதுமான ஓய்வு ஆகியவைகளும் கூட அல்சர் வராமல் காக்கும் வழிமுறைகளேயாகும்.



**★ கடந்த காலத்தில் சாதிமுறையினால் ஏதாவது நன்மை ஏற்பட்டிருக்கக் கூடுமா என்பதைப் பற்றி எனக்குத் தெரியாது. ஆனால், இன்றைய உலகத்தில், சாதிமுறைதான் நம்முடைய படுமோசமான பலவீனம்!**

அல்சருக்கு ஆளானவர்கள், தக்க மருத்துவர்களின் ஆலோசனைப்படி மூன்று மாத காலம் தொடர்ந்து சாப்பிட்டுவந்தால் குணமாகி விடும். அப்படியும் குணமாகவில்லை என்றால், மீண்டும் நோயாளியைப் பரிசோதனைக்கு உட்படுத்தி அல்சர் ஆறாத தன்மைக்கான காரணத்தைக் கண்டறிய வேண்டும்.

**அல்சர் நோய் புற்றுநோயாக மாறக் கூடிய வாய்ப்பு உண்டா?**

திட்டவட்டமாக அப்படிச் சொல்லி விட முடியாது. பெரும்பாலும், அல்சர் புண் புற்றுநோயாக மாறும் வாய்ப்பு மிகவும் குறைவு. Endoscopy சோதனை நடைமுறைக்கு வந்த பிறகு, அல்சர் புண்ணைப் பற்றி நிறைய தகவல்கள் கிடைத்திருக்கின்றன. அதாவது, இரைப்பை அல்சர் புண் தொடக்கத்திலேயே சாதாரண அல்சர் புண்ணாகவோ (Benign Gastric Ulcer) அல்லது புற்றுநோய்ப் புண்ணாகவோ (Malignant Gastric Ulcer) உருவாகும்; முன்பெல்லாம் கருதியதைப்போல் இரைப்பைப் புண் புற்றுநோயாகமாறும் வாய்ப்பு அவ்வளவாக இல்லையென்றே கூறலாம். அதேபோலச்

# நரிமணம் மின் நிலையம்

**இந்த நூற்றாண்டின் இறுதியில், தமிழகத்தின் மின்தேவை 8500 மெகாவாட் அளவு இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது. எதிர்நோக்கும் பற்றாக் குறையை ஈடுகட்ட, சுமார் 4300 மெகாவாட் அளவிற்கு கூடுதலாக மின் உற்பத்தி அதிகரிக்கப்பட வேண்டியுள்ளது. தமிழகத்தில் புனல் மின் ஆதாரங்கள் பெரும்பாலும் பயன்படுத்தப்பட்டுள்ளன. நிலக்கரி ஆதாரங்கள் இல்லை. அணுமின் உற்பத்தி ஒரு அளவிற்கே அதிகரிக்க முடியும். இந்த நிலையில் இயற்கை எரிவாயுவை மின் உற்பத்திக்குப்பயன்படுத்தும் முயற்சியில், தற்பொழுது நரிமணத்தில் அமைக்கப்பட்டிருக்கும் எரிவாயு சுழலி மின் நிலையம் முதற்படியாகும். நரிமணம் எரிவாயு சுழலி மின் திட்டத்திற்கு 1990 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்களில் மைய அரசின் ஒப்புதல் பெறப்பட்டது. இத்திட்டத்திற்கு ரூ.30 கோடி செலவழிக்கப்பட்டுள்ளது. இம் மின்நிலையத்திலிருந்து ஆண்டொன்றுக்கு 660 இலட்சம் யூனிட் மின்சாரம் கிடைக்கப் பெறும். உற்பத்திச் செலவு யூனிட் ஒன்றுக்கு ரூ.1.56 ஆகும். இந்நிலையத்தில் உற்பத்தி ஆகும் மின்சாரம் 110 கி.வோ. மின் அழுத்தத்திற்கு உயர்த்தப்பட்டு திருவாரூர் துணை மின் நிலையத்திற்கு அனுப்பப்படும். நாகப்பட்டினத்தில் புதிதாக 110 கி.வோ. அழுத்த துணைமின் நிலையம் நிறுவி அத்துடன் இம் மின் நிலையம் இணைக்கப்படும். மைய அரசின் மின்சக்தி முதலீட்டுக் கழகம் இத்திட்டத்திற்கு ரூ.11 கோடி கடனுதவி செய்துள்ளது.**

**காவிரிப்படுகையில் கிடைக்கவிருக்கும் எரிவாயுவைப் பெருமளவில் பயன்படுத்துவதற்காக தரங்கம்பாடி வட்டத்திலுள்ள பிள்ளைபெருமாள் நல்லூர் கிராமத்தில் 600 மெகாவாட் திறன் கொண்ட ஒரு மின் நிலையம் ஒன்பதாவது திட்டக் காலத்தில் அமைக்கப்படவுள்ளது என்பது தமிழக மக்களுக்கு மன நிறைவைத்தரும்.**

சிறுகுடல் அல்சர் புண்ணும் புற்று நோயாக மாறும் வாய்ப்பு இல்லை.

**அல்சருக்கான சிகிச்சைகள் யாவை?**

பெரும்பாலும் சிறுகுடல் அல்சர் புண் முறைப்படி மருந்துகள் உட்கொண்டால் முற்றிலுமாகக் குணமாகிவிடும். தற்போது H2 Recepter Blocker, Anion Pump Inhibitor, Bismuth Salt போன்ற மருத்துகள் வந்தபின், அல்சருக்காக அறுவைச் சிகிச்சையே தேவையில்லை என்ற நிலைகூட ஏற்பட்டிருக்கிறது.

இரைப்பை அல்சர் புண்ணானது ஆரம்ப நிலையில் இருந்தால் Acute (Gastric Ulcer) மருந்துகள் கொடுத்து குணமாக்கலாம். நீண்ட நாள் ஆறாத இரைப்பைப் புண்ணுக்கு (Chronic Gastric Ulcer) அறுவைச் சிகிச்சை செய்து கொள்ளுவதுதான் சிறந்த வழியாகும்.




**பொதுவானதோர் கணக்கெடுப்பு நடத்தினால் எந்த வகையான அல்சர் புண் மக்களிடையே அதிகமிருக்கும்?**

பொதுவாகப் பார்த்தோமானால்- நம்நாட்டில் சிறுகுடல் அல்சர் புண்தான் அதிகம் காணப்படுகிறது. அதிகமான அளவில் காரம் சாப்பிடுகிறவர்களுக்கே இரைப்பை அல்சர் புண் வரும்; இந்த வகையில் பார்த்தால், இரைப்பை அல்சர் புண்ணானது ஜப்பானியர்களிடமே அதிக அளவில் காணப்படுகிறது. காரணம், அவர்களுடைய உணவுப் பழக்கம் அப்படி!

**இரைப்பையில் அல்சர்புண் வந்தால் அறுவைச் சிகிச்சை செய்ய முடியுமா?**

முடியும். இரைப்பை அல்சர் புண்ணை Partial Gastrectomy என்ற முறை அறுவைச் சிகிச்சை மூலமும், Radical Gastrectomy என்ற அறுவைச் சிகிச்சை மூலமும் குணமாக்கலாம்.

**அறுவைச் சிகிச்சை செய்யப்பட வேண்டிய அளவிற்கு ஒருவருக்கு அல்சர் நோய் முற்றிவிட்டது என்பதை எப்படிக் கண்டறிவது?**

அல்சர் புண்ணால் பெருமளவில் பாதிக்கப்பட்ட நோயாளிக்குப் பேரியம் எக்ஸ்ரே எடுத்துப் பார்க்கப்படும். இதன்மூலம் 70 சதவிகித அல்சர் புண்ணைக் கண்டுபிடித்துவிடலாம். நோயாளிக்கு அல்சர் புண்ணிலிருந்து இரத்தக் கசிவு (Haemorrhage) சிறுகுடலில் அடைப்பு (Obstruction), சிறுகுடலிலோ இரைப்பையிலோ ஓட்டை (Perforation) போன்ற கோளாறுகள் - அதாவது மருந்துகளினால் குணமாக்க முடியாத நிலை ஏற்படும்போதுதான், 'என்டாஸ்கோப்பி' Endoscopy என்ற சோதனை செய்து, அதன் மூலம் கிடைக்கும் தகவலின்பின் அறுவைச் சிகிச்சைக்கு நாம் அல்சர் நோயாளியை உட்படுத்தவேண்டும்.

பேரியம் எக்ஸ்ரேயில்கூட ஒருவர் உடலினுள் சிறிய அளவில் உள்ள அல்சர் புண்கள், அவ்வளவு தெளிவாகத் தெரியாமல் போய் விடுகிற நிலைமை ஏற்படுவதும் உண்டு. அந்த நிலையில்தான் 'என்டாஸ்கோப்பி' என்ற கருவி பயன்படுத்தப்படுகிறது. மிக மெல்லிய நூலிழைபோல் உள்ள இதன் நுனியில் துல்லியமான 'லென்ஸ்' பொருத்தப்பட்டிருக்கும்.

இதை நோயாளியின் வாய் வழியாக, உள்ளே இரைப்பை - சிறுகுடல் வரை செலுத்தமுடியும். அப்படிச் செலுத்தி, அல்சர் புண் எந்த அளவில் எந்த இடத்தில் இருக்கிறது என்பதையும் - இரத்தக் கசிவு ஏற்பட்டிருக்கிறதா, அதன் நிலைமை என்ன என்பதையும் மிகச் சரியாக ஒரு மருத்துவர் கண்டு பிடிப்பார். இந்தக் கருவி மூலமே அப்புண்ணின் சிறுபகுதியை வெளிக் கொணர்ந்து, அதை வைத்து முறையான பரிசோதனையை மேற்கொண்டு, அது அல்சர் புண்தானா அல்லது புற்றுநோய்ப் புண்ணா என்று கண்டறிந்து தக்கபடி சிகிச்சையளிக்கலாம்.

**அல்சர் நோயாளிக்கு, டாக்டர் என்ற முறையில் நீங்கள் கூறும் அறிவுரை என்ன?**

வயிற்றுவலி எல்லாமே அல்சரால்தான் வரும் என்று சொல்லுவதற்கில்லை; அதுதான் காரணம் என்று, ஒருமுறை மருத்துவர் கண்டுபிடித்துத் தகுந்த சிகிச்சைமூலம் சரிபடுத்திவிட்டார் என்று வைத்துக் கொள்ளுங்கள்; மறுபடியும் அந்த நபருக்கு அல்சர் புண் வராது என்று கூறமுடியாது; அதே இடத்திலோ, வேறு இடத்திலோ கூட மறுபடியும் அதுபோன்ற புண் வரலாம்.

ஆனால், குறிப்பிட்ட அந்த நபருக்கு அதேபோல மறுபடியும் வயிற்றுவலி தோன்றினால், நோயாளி தாமாகவே முன்பு டாக்டர் சிபாரிசு செய்த பழைய மருந்தை உட்கொள்ளாமல், மீண்டும் பரிசோதித்துக் கொள்ளுவது நல்லது. ஏனென்றால் அந்த வயிற்று வலிக்கு வேறு ஏதாவது நோயும் காரணமாக இருக்கலாமல்லவா? ஆக மொத்தத்தில் அல்சர் நோயாளி எப்போதும் மிகவும் எச்சரிக்கையோடு இருக்க வேண்டும்.

**சந்திப்பு: பி.எல்.ஆர்.**

# சிறப்பு மிக்க சிறுசேமிப்பு



கே. அலாவுதீன் இ.ஆ.ப.,
இயக்குநர்,
சிறுசேமிப்புத்துறை,

### சிறுசேமிப்பு முகவர்களுக்கு இலவசப் பரிசுக் கூப்பன் மற்றும் போனஸ் திட்டம்

முகவர் ஊக்கத்தொகை வழங்கும் திட்டம் ஒன்று, சிறுசேமிப்புத் துறையினால் அறிமுகப் படுத்தப்பட்டிருக்கிறது.

சிறுசேமிப்பு முதலீடுகள் திரட்டும் பணியில் ஈடுபட்டுள்ள பல்வேறு வகையான சிறுசேமிப்பு முகவர்களை ஊக்குவித்து ஆர்வத்துடன் செயல் படச் செய்வதற்காக 1987-88 முதல் தமிழக அரசு முகவர்களுக்கு ஊக்கத்தொகை வழங்கும் திட்டத் தைச் செயல்படுத்தி வருகிறது. தற்போது, இத் திட்டத்தின்படி மத்திய அரசு வழங்கும் கமிஷன் தொகைக்கு இணையாகத் தமிழக அரசும் முகவர் களுக்கு ஊக்கத்தொகை வழங்கி வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

### இலவசப் பரிசுக் கூப்பன் திட்டம்

1991-ஆம் ஆண்டு முதல் சிறுசேமிப்பு முகவர் களைப் பெருமளவில் ஊக்கப்படுத்தும் நோக்கத் துடன் தமிழக அரசு சிறுசேமிப்புத் திட்டங்களில் முதலீடு செய்வோருக்காகச் செயல்படுத்தும் இலவசப் பரிசுக் கூப்பன் திட்டத்தைப் போன்று, சிறுசேமிப்புத் திட்டங்களில் முதலீடு சேகரிக்கும் முகவர்களுக்கும் இலவசப் பரிசுக் கூப்பன் திட்டத் தினை அறிமுகப்படுத்தி ஆணையிட்டுள்ளது.

இத்திட்டத்தின்படி, தமிழ்நாட்டில் 1.4.91 முதல் 31.3.92 வரை முகவர்கள் திரட்டும் முதலீடுகளுக்கு, ஒவ்வொரு ரூ.10,000/-க்கும் ஒரு இலவசப் பரிசுக்கூப்பன் வீதம் வழங்கப்படும். ஒவ்வொரு வரிசைக்கும், ஒரு இலட்சம் கூப்பன்கள் வெளியிடப்படுகின்றன. இத்திட்டம், முதல் கட்ட மாக மாநில அளவில் செயல்படுத்தப்படும். ஒரு இலட்சம் கூப்பன்கள் தமிழகம் முழுவதும் முகவர் களுக்கு வழங்கப்பட்ட பிறகு, குலுக்கல் நடத்தப் படும். சிறுசேமிப்பு முகவர்கள் மூலம் ஒவ்வொரு வரிசைக்கும் மொத்த வசூலாக ரூ.100 கோடி சிறு சேமிப்புத் திட்டங்கள் மூலம் திரட்டப்படும் என்பது குறிப்பிடத்தக்கது. இத்திட்டத்தின் பரிசுகள் விபரம் பின் வருமாறு:

| | | |
|---|---|---|
| முதல்பரிசு | (5) | ஸ்கூட்டர் |
| 2-வது பரிசு | (10) | மொபட் |
| 3-வது பரிசு | (15) | 8 கிராம் தங்க நாணயம் (22 காரட்) |
| 4-வது பரிசு | (20) | மிக்ஸி |
| 5-வது பரிசு | (50) | சைக்கிள் |
| 6-வது பரிசு | (300) | சூட்கேஸ் |
| ஆறுதல் பரிசு | (500) | எல்காட் சுவர்க் கடிகாரம் |
| மொத்தம் | 900 | |

சிறுசேமிப்பு முகவர்கள் (எஸ்.ஏ.எஸ்) மகளிர் முகவர்/பி.பி.எப் முக்வர்) பரிசுக் கூப்பன்களை சென்னை நகரில் சென்னை மாநகராட்சியின் சிறுசேமிப்புப் பிரிவிலும், பிற மாவட்டங்களில்

மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர் (சிறுசேமிப்பு) அலுவலகத்திலும் பெற்றுக் கொள்ளலாம்.

**1991-92-ஆம்** ஆண்டுக்குத் தமிழக அரசு **1.4.91** முதல் முதலீடுதாரர்களைக் கவரும் வண்ணம்

அ. மாவட்ட அளவிலான மாருதி கார் பரிசுத் திட்டம் (*1.4.91* முதல் *31.3.92* வரை) மற்றும் ஆ. மண்டல அளவிலான அடுக்கு மாடி வீடுகள் வழங்கும் பரிசுத் திட்டம் (*1.4.91* முதல் *30.9.91* வரை)

ஆகிய இரு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

இத்திட்டங்களில் முதல் மூன்று பரிசுகளை வெல்லும் முதலீட்டாளர்களிடமிருந்து முதலீடு திரட்டிய சிறுசேமிப்பு முகவர்களுக்குப் போனசாகப் பரிசுகள் வழங்கவும் தமிழக அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

**மாவட்ட அளவிலான மாருதிகார் பரிசு வழங்கும் திட்டம்:**
**(ரூ.500/- முதலீட்டிற்கு ஒரு கூப்பன்)**

| | முதலீடுதாரர் பெறும் பரிசு | முகவர்பெறும் பரிசு |
|---|---|---|
| ஒரு சூப்பர் பம்பர் பரிசு | மாருதி கார் | மோஃபா |
| ஒரு முதல் பரிசு | ஸ்கூட்டர் | சைக்கிள் |
| இரண்டு இரண்டாவது பரிசு | கலர் டி.வி. | பிரீப்கேஸ் |

**மண்டல அளவிலான அடுக்குமாடி வீடுகள் வழங்கும் திட்டம்**
**(ரூ.2,000/- முதலீட்டிற்கு 1 கூப்பன்)**

| | முதலீடுதாரர் பெறும் பரிசு | முகவர்பெறும் பரிசு |
|---|---|---|
| ஒரு முதல் பரிசு | எம்.ஐ.ஜி. பிளாட் | மோஃபா |
| ஒரு இரண்டாவது பரிசு | எல்.ஐ.ஜி. பிளாட் | சைக்கிள் |
| பத்து மூன்றாவது பரிசு | 165 லிட்டர் ரெபிரிஜிரேட்டர் | பிரீப்கேஸ் |

தமிழகம் முழுவதிலுமுள்ள சிறுசேமிப்பு முகவர்கள் அதிக அளவில் சிறுசேமிப்புத் திட்டங்களில் முதலீடுகளைத் திரட்டி இத்திட்டங்களின் பயனைப் பெறவேண்டும் என்பது தான் எங்கள் நோக்கம். ●

---

## ஆலைகள் வளர - தொழில் பெருக... அரசு அளித்திடும் பேருதவி

- புதிய தொழில்களை துவங்க வருவோர்க்கு அரசின் அமைப்பான I.S.D. கார்ப்பரேஷன் ஏற்கனவே அவர்களிடம் இல்லாத தொழிலுக்கு தேவைப்படுகிற - எல்லாவிதமான உதவிகளையும் தானே செய்து தருகிறது.
- இதுவரை அளிக்கப்பட்டு வந்த மானியத் தொகை 15% இனி 20% ஆக உயர்த்தப்படுகிறது. தமிழகத்தின் பின்தங்கிய பகுதிகளில் ஆரம்பிக்கப்படும் தொழில்களுக்கு 15 லட்சத்தில் இருந்து 20 லட்சமாக உதவித்தொகை அதிகரிக்கிறது.
- வேலைக்கமர்த்தும் பணியாளர்களில் 30%க்கும் மேல் - பெண்களைச் சேர்க்கும் தொழிற்கூடங்களுக்கு அளிக்கிற உதவித்தொகையிலும் - இன்னும் 5% அதிகம் தரப்படும். (அதிகபட்சமாக ரூ.5 லட்சம் வரை)
- சுயமாக தொழில் துவங்க வரும் பெண்களுக்கு - அரசின் புதிய தொழில்பேட்டைகளில், கட்டிடங்களாக உள்ள 'ஷெட்டுகள்' 'பிளாட்டுகளில்' கண்டிப்பாக 30% இட ஒதுக்கீடு.
- தர்மபுரி மாவட்டம் - பர்கூர் தொகுதி மாதப்பள்ளியில் - முதலமைச்சரால் அடிக்கல் நாட்டப்பட்ட கருங்கல் தொழிற்சாலைக்கு மொத்த முதலீடு - 15 கோடி.
- தொழிற்சாலை சட்டங்களில் வரம்புக்கு உட்பட்ட சக்தியைப் பயன்படுத்தும் சிறுதொழில் நிறுவனங்களில் பணி புரிவோர் எண்ணிக்கை 10ல் இருந்து 25 ஆகவும் இதே சக்தியை பயன்படுத்தாத சிறுதொழில் நிறுவனங்களில் பணிபுரிவோர் எண்ணிக்கை 20ல் இருந்து 50 ஆகவும் உயர்த்தப்படுகிறது. மின்சாரத்தில் 10 H.P வரை பயன்படுத்தும் நிறுவனங்கள் மட்டுமே 'சக்தி உபயோகிக்காத' சிறுதொழில் நிறுவனமாக கருதப்படும்.
- கிரானைட் தொழில் வளர்ச்சிக்கு உதவும் வகையில், ''தொழில் தொடங்குவோர் பாலிஷிங் மற்றும் கட்டிங் செய்யும் தொழிற்சாலைகளை இரண்டு வருடத்திற்குள் நிறுவ வேண்டும்'' என்ற கொள்கையிலிருந்து விலக்கு அளிக்கப்படுகிறது.

### திட்டங்கள்

- திருச்சி மாவட்டத்திலுள்ள ஜெயங்கொண்ட சோழபுரத்தில் நிலக்கரி மின்விசைத் திட்டம் கூட்டுமுயற்சியில் நிறுவுதல்
- ரூ.600 கோடி முதலீட்டில் 9 புதிய திட்டங்கள் TIDCO மூலம் தொடங்கப்பட உள்ளது.
- இந்திய T.F. Authorityயின் கூட்டு முயற்சியோடு தரமணியில் ஆலோசனைக் கூடத்துடன் கூடிய நிரந்தர தொழில்துறைக் கண்காட்சி வளாகம் ஒன்றை நிறுவுதல்.
- கடலூரில் ரூ.17 கோடி முதலீட்டில் வருடத்திற்கு 1600 டன். பாஸ்பரஸ் இரசாயன பூச்சிமருந்து உற்பத்தி செய்யும் தொழிற்சாலையை நிறுவுதல்.
- விவசாயத்தை மையமாகக் கொண்டு தொழிற்சாலைகள் நிறுவ பெரியார், நெல்லை-கட்டபொம்மன், தஞ்சாவூர் மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் இடங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளது.
- ஏற்றுமதிக்கான ஆடைகள் தயாரிக்கும் தொழிற்சாலை SIDCOவினால் செங்கை-எம்.ஜி.ஆர். மாவட்டத்தில் துவங்கப் பட உள்ளது.
- இந்திய அரசின் உதவியோடு ELCOT நிறுவனம் கோவையில் ரூ.8 கோடி முதலீட்டில் ஒரு சாப்ட்வேர் (கணிப்பொறி) நிறுவனத்தைத் தொடங்கவுள்ளது.
- சோழிங்க நல்லூரில் ரூ.40.65 கோடி முதலீட்டில் மின்னணுவியல் தொழிற்சாலைகள் தொடங்கப்படவுள்ளது.





# ஆடு வளர்ப்போம்

**டாக்டர் எஸ். மாரிமுத்து,**
**டாக்டர் டி. பொற்செழியன்**
**கால்நடைப் பராமரிப்புத்துறை**
**விவசாயக் கல்லூரி**
**மதுரை**

பொதுவாக வெள்ளாடுகள் பாலுக்கும் இறைச்சிக்கும் வளர்க்கப்படுகின்றன. குளிர்ப்பிதேசங்கள் மற்றும் மலைப்பாங்கான இடங்களில் ஆடுகளிலிருந்து பால், இறைச்சி நமக்கு கிடைப்பதோடு 'மொகைர் (Mohair) என்னும் உயர் ரக உரோமம் கிடைப்பதற்காகவும் வெள்ளாடுகள் வளர்க்கப்படுகின்றன. செம்மறி ஆடுகளில் நம் நாட்டில் இறைச்சிக்காகவும் உரத்துக்காகக் கிடை அமைக்கவும் (Penning) வளர்க்கப்படுகின்றன. ஆனால் அயல் நாடுகளில் பால் உற்பத்தித் திறன் கூடுதலாக உள்ளதால், செம்மறி ஆடுகளிலிருந்து இறைச்சி, கம்பளி மற்றும் பால் உற்பத்தி ஆகியவைற்றுக்காக அவை வளர்க்கப்படுகின்றன என்பது நமக்கு வியப்பாக இருக்கலாம்.

### கூண்டு முறையில் ஆடு வளர்ப்பு

கிராமங்களில் வெள்ளாடு மற்றும் செம்மறி ஆடுகளை திறந்த வெளியில் ஓட்டிச் சென்று மந்தை மந்தையாக மேய்க்கப்படுவதைக் காணலாம். தொழில் வளம் பெருகி வரும் இத்தருணத்தில் மேய்ச்சல் நிலம் குறைந்து வருவதைக் காண்கிறோம். எனவே ஆழ்கூள முறையில் (Deeplitter System) ஆடுகளை வளர்க்கப் பரிந்துரைக்கப்படுகிறது. வெள்ளாடு மற்றும் செம்மறி ஆடுகளையும் ஆழ்கூள் முறையில் இலாபகரமான முறையில் வளர்க்கலாம் என்று ஆராய்ச்சி மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

ஆழ்கூள முறையில் வளர்ப்பதன் நோக்கம்: குறைந்த இடத்தில் ஆடுகளை வளர்க்கலாம். இதனால் மேய்ச்சலுக்காக நீண்டதூரம் சென்று வருவதைத் தவிர்ப்பதோடு இதனால் ஏற்படம் சக்தி வீணாவதைக் குறைக்க வழிவகை ஏற்படுகிறது. வெள்ளாடுகளால் பயிர்கள் அழிக்கப்படுவதைத் தவிர்க்கலாம். பராமரிப்பு முறைகள் எளிதாக இருப்பதோடு ஆடுகளில் நோய் பரவுவதைக் கட்டுப்படுத்த முடியும். இம்முறையில் தேவையான தீவனம் கொடுத்து ஆடுகள் வளர்க்கப்படுவதால் வளர்ச்சி விகிதம் அதிகரிக்கவும், கூடுதலான எடை கொண்டதாக அவை வளரவும் வாய்ப்புள்ளதால் விரைவில் குட்டிகள் பருவமடையவும் குறிப்பிட்ட காலத்தில் இனப் பெருக்கம் செய்வதும் ஏதுவாகிறது. இதனால் ஆட்டுப் பண்ணையில் அதிக எண்ணிக்கையில் குட்டிகள் கிடைத்து பண்ணையின் பொருளாதாரம் அதிகரிக்க வாய்ப்புள்ளது.

### இடவசதி

ஒரு வெள்ளாட்டுக்கு 15 முதல் 20 சதுர அடியும் செம்மறி ஆட்டிற்கு 15 சதுர அடியும் இடம் தேவைப்படுகிறது. வெள்ளாடு மற்றும் செம்மறி ஆடுகளை வளர்க்கும் போது தனித்தனியாக ஆழ்கூள முறையில் வளர்க்க வேண்டும்.

### ஆழ்கூள வீடு அமைத்தல்

ஆடுகளை ஆழ்கூள முறையில் வளர்க்க ஒரு ஆட்டுக்கு 7 கிலோ ஆழ்கூளம் தேவைப்படுகிறது. கடலைத் தோல், நெல்உமி, நெல் கருக்காய், மரத்தூள், தென்னை நார்க்கழிவு போன்றவற்றில் ஏதாவது ஒன்றினை ஆழ்கூளமாகப் பயன்படுத்தலாம். இம்முறையில் அமைக்கப்படும் வீடு நல்ல காற்றோட்ட வசதியுடன் அமையவேண்டும். தரை ஈரம்படாமலிருக்க வேண்டும். சுவர் தரை மட்டத்திலிருந்து 1.5 அடி உயரமுள்ளதாகவும் அதற்குமேல் பகுதியில் மூங்கில் படல் அல்லது கம்பி வலை கொண்டும் அமைத்தல் நல்லது.

இவ்வித எற்பாட்டில் நல்ல காற்றோட்டம் கிடைக்க வசதியாக இருக்கும். தீவனம் அளிக்க நீட்டவாக்கில் தீவனத் தொட்டியும், தண்ணீர்த் தொட்டியும் அமைக்க வேண்டும். ஆழ்கூளத்தை வாரத்தில் இரண்டு அல்லது மூன்று முறை நன்றாகக் கிளறிவிடுவது முக்கியம். ஈரப்பதம் அதிகமிருந்தால் 100 சதுர அடிபரப்பிற்கு 5 முதல் 7 கிலோ சுண்ணாம்புத்தூள் தூவி ஆழ்கூளத்தைக் கிளறிவிட்டால் துர்நாற்றம் வராமல் பாதுகாக்கலாம். 5 அல்லது 6 மாதத்திற்கு ஒருமுறை ஆழ்கூளத்தை உரமாக்கி மண்

வளத்தைப் பெருக்கி விளைச்சலை அதிகரிக்கலாம்.

### ஆட்டுக்குட்டி பராமரிப்பு

பிறந்தவுடன் குட்டிகளை சுமார் 15 நிமிடத்திற்குச் சீம்பால் குடிக்க ஏற்பாடு செய்ய வேண்டும். குட்டிகளில் ஒருமாத வயதில் குடற்புழு நீக்கம் செய்வது அவசியம். 3 மாத வயதில் குட்டிகளை பிரித்துத் தனியாகப் பராமரிப்பது அவசியம். இவ்வாறு செய்வதால் தாய் ஆடு எளிதில் மீண்டும் சினைப்பிடித்துக் குட்டிகள் போட ஏதுவாகும். தவிர, குட்டிகளுக்கு அடர்த்தீவனம் கொடுத்து வளர்த்தால் துரித வளர்ச்சி அடையும். இனப்பெருக்கத்துக்குத் தேவையற்ற கிடாய்க் குட்டிகளை 2 மாத வயதில் காயடித்தல் Castration அவசியம். இதனால் துரித வளர்ச்சியடைந்து கூடுதலான எடை கொண்டு வளர்ந்து, அவை விற்பனைக்கு தயாராகின்றன. 9 அல்லது 10 மாத கிடாய்க் குட்டிகள் சுமார் 20 கிலோ எடைக்குமேல் வளர்ச்சியுடனிருக்கும். இத்தகைய கிடாய்க் குட்டிகளை இறைச்சிக்காக விற்பனை செய்து இலாபமடையலாம்.

### தீவனம் அளித்தல்

ஒரு வளர்ந்த ஆட்டுக்கு 40 முதல் 50 செ.மீட்டர் குட்டிக்கு 30 முதல் 35 செ.மீட்டர் தீவன இட வசதி தேவை. எளிய மற்றும் விலை குறைவாகத் தீவனம் அளிக்க பனை மரத்தை மேல்பாகத்தில் சுமார் 20 முதல் 28 செ.மீட்டர் அகலத்திலும் 12 முதல் 15 செ.மீட்டர் ஆழமுள்ளதாகவும் செதுக்கு நீட்டவாக்கில் தீவனத் தொட்டியாகப் பயன்படுத்தலாம்.

### வயதுவந்த ஆடுகளுக்கு அடர்த் தீவனம் தயாரிக்க

மக்காச் சோளம் 50 பாகமும், கடலைப் புண்ணாக்கு 20 பாகமும், கோதுமைத் தவிடு 20 பாகமும், குதிரை மசாலா பவுடர் 5 பாகமும், துவரம் பொட்டு/உளுந்தம் பொட்டு 2 பாகமும், உப்பு ஒரு பாகமும், தாதுப்பு 2 பாகமும் கலவை செய்ய வேண்டும்.

### ஆட்டுக்குட்டி தீவனத்திற்கு

மக்காச் சோளம் 50 பாகமும், கடலைப் புண்ணாக்கு 20 பாகமும், கோதுமைத் தவிடு 17 பாகமும், குதிரை மசாலா பவுடர் 5 பாகமும், மீன்தூள் 5 பாகமும், தாது உப்பு 2.5 பாகமும், உப்பு 0.5 பாகமும் கலந்து வைக்க வேண்டும்.

### இனப்பெருக்கம்

வெள்ளாடுகள் செம்மறி ஆடுகளை விட அதிகமாக தீவனம் உண்ணும் திறன் கொண்டது. வெள்ளாடு அதன் எடையில் 3 முதல் 6 சத விகிதமும், செம்மறி ஆடு 3 முதல் 4.5 சதவிகிதமும் உவர்தீவனம் உட்கொள்ளும் தன்மை வாய்ந்தவை. அன்றாடம் பசுந்தீவனம் 4-5 கிலோவும் உலர்ந்த தட்டு 1-2 கிலோவும் கொடுப்பது நல்லது. வயது வந்த ஆடு ஒன்றுக்கு அன்றாடம் 20 கிராம் அடர்த்தீவனமும், கொடுக்க வேண்டும். குட்டிகளுக்கு அன்றாடம் 50 கிராம் முதல் 100 கிராம் வரை அடர்த்தீவனம் கொடுக்க வேண்டும். கலப்புத் தீவனத்துடன் பசுந்தீவனம் 2 முதல் 3 கிலோ வரையும் உர்ந்த தட்டு 0.500 கிலோ முதல் 1 கிலோவும் கொடுக்க வேண்டும். சினைப்பருவத்தில் கூடுதலான தீவனம் கொடுத்து ஆடுகளை செழுமை செய்தல் (lushing) அவசியம். சுத்தமான தண்ணீர் எப்போதும் கிடைக்கும்படி செய்ய வேண்டும்.

### இனப்பெருக்கம்

20 ஆண்டுகளுக்கு ஒன்று அல்லது இரண்டு கிடாய் என்ற விகிதத்தில் இனப்பெருக்கத்திற்காக பராமரிக்க வேண்டும். இரண்டு குட்டிகள் மற்றும் மூன்று குட்டிகள் ஒரு ஈத்தில் போடும் ஆடுகளை தேர்ந்தெடுத்து பண்ணையில் பராமரித்தால் ஆடுகளின் எண்ணிக்கை விரைவில் அதிகரிக்கவும் பொருளாதார முன்னேற்றத்துக்கும் ஏதுவாகும். நன்கு பராமரிக்கப்படும் ஆட்டுப் பண்ணையில் ஆண்டில் இருமுறை குட்டிகள் போடும் அல்லது இரண்டு ஆண்டில் 3 ஈத்து குட்டிகள் பிறக்கும்.

ஆட்டுப் பண்ணையை சுகாதாரமான முறையிலும் முன்னேற்றமான தொழிற்நுட்பங்களுடனும் பராமரித்தால் ஆடு வளர்ப்பவர்களுக்கு சுயவேலைவாய்ப்பும், கூடுதல் வருவாயும் கிடைக்க வாய்ப்புள்ளது. வருவாய் குறைவாக உள்ள சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கும் நிலமற்றவேலைபார்ப்பவர்களுக்கும் ஆடு வளர்ப்பு, கறவை மாடு வளர்ப்புக்குச் சமமாகும். எனவேதான் வெள்ளாடுகளை 'ஏழைகளின் பசு' என்று கூறப்படுகிறது. ஆகையால் கிராமப்புறங்களில் மட்டுமின்றி நகர்ப்புறங்களிலும் ஆழ்கூள முறையில் ஆட்டுப் பண்ணை அமைத்துப் பயன் பெறலாம்.

---



**நேருவின் பொன்மொழிகள்**

★ விஞ்ஞானம் மனிதனுடைய அறிவை அதிகரித்தது மட்டுமன்றி, இயற்கையின் மீதும் அவன் செலுத்தக் கூடிய ஆதிக்கத்தையும் அதிகரித்தது.

★ வாழ்க்கையே ஒரு விசித்திரமான கதம்பம்தான். நாம் அதை உள்ளது உள்ளவாறே எடுத்துக்கொண்டு முதலில் அதை அறியவும், பின்னர் அதைச் சீர்திருத்தவும் முயல வேண்டும்.

★ உடலால் உழைப்பது தாழ்வானது என்ற எண்ணம், நம் நாட்டில் இருந்து வருகின்றது. கீழ்நிலையில் உள்ளவர்கள்தாம் உடலால் உழைக்க வேண்டும்; மேல்நிலை மக்கள் அறிவால் சம்பாதிக்கலாம் என்ற கருத்து மூடத்தனமாகும்; நாட்டிற்குக் கேடு விளைவிப்பது. இந்தக் கருத்து மக்களிடம் இருக்கின்ற வரை நாடு முன்னேற முடியாது.



மக்கள் நன்மைக்காக மக்களால் நடத்தப்படும்
மக்கள் இயக்கம் கூட்டுறவு

செல்வி ஜெ. ஜெயலலிதா,
மாண்புமிகு தமிழக முதல்வர்.



மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் அரசு கூட்டுறவு இயக்கத்தின் மூலம் உங்களுக்காகக் குறைந்த விலையில் தரமான பொருட்களை தீபாவளிக்காகத்தர முன்வருகிறது. அருள்கூர்ந்து ஆதரிப்பீர்!

க. இராசாராம்
மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவு அமைச்சர்.

# கூட்டுறவு அங்காடிகளில் வாங்குவது ஒரு சுகமான அனுபவம்

★ கூட்டுறவுச் சிறப்பங்காடிகள் மக்களின் தேவையை அறிந்து சேவை செய்கின்றன.
★ தேவைக்கேற்ப அனைத்துப் பண்டங்களையும் ஒரே இடத்தில் பெறலாம்.
★ நியாயமான விலை ★ தரமான பொருள்.
★ சரியான எடை அளவு.
★ தீபாவளிக்கேற்ற கண்கவர் ஆடைகள், பட்டாசுகள்.




**கூட்டுறவுச் சிறப்பங்காடியினால் உங்கள் வீட்டில் தீப ஒளி பரவட்டும்.**

தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம்
சென்னை-600 010.






# தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் - தொடக்க விழா

**த**மிழக அரசால் ரூ.10 கோடி பங்கு முதலீட்டுடன், தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் உருவாக்கப்பட்டுள்ளது. இந்நிறுவனம் 1956-ஆம் ஆண்டின் இந்திய நிறுவனங்கள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது. தொழில் நிறுவனங்களின் பதிவாளரிடமிருந்து தேவையான பதிவுச் சான்றிதழும், நடவடிக்கையைத் தொடங்குவதற்கான அனுமதியும் பெறப்பட்டுள்ளன.

இந்நிறுவனம், தமிழ்நாட்டில் பொதுத்துறை நிறுவனங்கள், குறிப்பாக மின்விசைத் துறையில் ஈடுபட்டுள்ள பொதுத்துறை நிறுவனங்களுக்குத் தேவையான நிதியாதாரங்களைத் திரட்டும் மிக முக்கியமான பணியை நோக்கமாகக் கொள்ளும். பொதுமக்களிடமிருந்து வைப்புத் தொகைகள், கடன் பத்திரங்கள், நிறுவனக் கடன் முதலீடுகள் மற்றும் ஏனைய நிதி நிறுவனங்களிடமிருந்து பெறப்படும் கடன் வசதி மற்றும் முதலீட்டுத் தொகைகள் இந்நிதியாதாரங்களில் அடங்கும்.

இவ்வாறு திரட்டப்படும் நிதியானது, குறிப்பாக மின்விசைத் துறையில் மின் உற்பத்தி மற்றும் பகிர்மானப் பணிகளுக்குத் தேவையான வளர்ச்சித் திட்டங்களுக்கு, தவணை முறைத் தளவாடக்கடன் (Hire Purchase Finance), தளவாடங்களை வாடகை முறையில் உபயோகிக்கும் வசதிக்கான கடன்கள் (Leasing), குறுகிய மற்றும் இடைக் காலக் கடன்கள் ஆகிய நிதிவசதிகளை அளிக்கவும் மாநிலப் பொதுத் துறை நிறுவனங்களது அடிப்படை வசதி மேம்பாட்டுத் திட்டங்களுக்கு நிதி உதவி அளிக்கவும் பயன்படுத்தப்படும்.

மாநிலத்தில், மின்விசைத்துறையில், உற்பத்தி மற்றும் பகிர்மானப் பணிகளுக்குத் தேவையான முதலீடு போதிய அளவில் இல்லாத நிலையில், இப்பணிக்கெனக் கூடுதல் நிதியாதரங்களைத் திரட்டும் சீரிய நோக்கம் பற்றி குறிப்பிட்டு விளக்கத் தேவையில்லை. பெருமளவில் நிதியாதாரங்களைத் திரட்டி அந்நிதி, மின்விசைத் துறைத் திட்டங்களுக்கென அளிக்கப்படுவதால் மாநில விவசாய மற்றும் தொழில்துறை முன்னேற்றத்திற்கு இன்றியமையாத ஒரு உந்துகோல் தானாகவே கிடைக்கப்பெறுகிறது. இவ்வகையில், முதலீட்டாளர்களைக் கவரும் வகையில் அருமையான முதலீட்டுத் திட்டங்களைச் செயல்படுத்துவதன் மூலம், தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் அரியதொரு பணியை ஆற்றும். மேலும், பொருளாதார முன்னேற்றத்தில் முக்கிய அங்கம் வகிக்கும் துறைகளுக்கு நிதியுதவி செய்யும், இந்தியத் தொழில் முன்னேற்ற வங்கி (IDBI), இந்திய தொழில் நிதி நிறுவனம் (IFCI), இந்தியத் தொழில் கடன் மற்றும் முதலீட்டு நிறுவனம் (ICICI) வங்கிகள் மற்றும் ஏனைய நிதி நிறுவனங்களுக்கு இந்நிறுவனம் சிறந்ததொரு துணை நிறுவனமாகவும் விளங்கும். அதே போன்று, ஆயுள் காப்பீட்டுக் கழகம் (LIC), பொதுக் காப்பீட்டுக் கழகம் (GIC), இந்திய யூனிட் ட்ரஸ்ட் (UTI) போன்ற மத்திய நிதி நிறுவனங்களின் நிதியாதாரங்கள் இம்மாநிலத்தில் இன்றியமையாத பொருளாதார வளர்ச்சித்துறைத் திட்டங்களுக்குப் பயன்பெறும் வகையிலும், இந்நிறுவனம் உதவ இயலும்.

தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம், தற்போது, 25

மாத வைப்புத்தொகைக்கு ஆண்டொன்றுக்கு வட்டி வருமானம் 14.5 சதவிகிதம் என்றும், 36,48,60 மாத வைப்புத் தொகைகளுக்கு 15 சதவிகிதம் என்றும், முதலீட்டுத் திட்டங்களைத் தொடங்குகிறது. இந்திய ரிசர்வ் வங்கி விதிகளின்படி, வைப்புத் தொகைக்கு வட்டி, காலாண்டுக்கு ஒரு முறை வழங்கப்படும். மேலும் வைப்புதாரரின் கோரிக்கைக்கேற்ப, சற்றே வட்டிக் குறைப்புடன் மாதமொரு முறையோ அல்லது இருமாதங்களுக்கொரு முறையிலோ வட்டி பெறவும், வைப்புத் தொகைத் தேதியிலிருந்து 6 மாதங்களுக்குப் பிறகு, வைப்புத் தொகையில் 75 சதவிகிதத்துக்கு மிகாமல் கடன் வசதி பெறவும் வகை செய்யப்பட்டுள்ளது. வைப்புத் தொகையின் மீதான இக்கடன் வசதிக்கு, இயல்பான வட்டி வீதத்திலிருந்து 2 சதவிகிதம் கூட்டிய வட்டி மட்டுமே வசூலிக்கப்படும். மாநிலத்தில் சிறப்பாக பணியாற்றி வரும் ஏனைய தனியார் நிறுவனங்களையொத்த முதலீட்டுத் திட்டங்கள் அமல்படுத்தப்படும். முதலிலிருந்தே கம்ப்யூட்டர் வசதியுடன் கூடிய சிறந்த சேவையும், வைப்புதாரர்களுக்கு உடனுக்குடன் வேண்டிய தகவல்களை அளிக்கவும் வகை செய்யப்பட்டுள்ளது. நிறைந்த வருவாயும், மிக அதிகமான பாதுகாப்பும் கூடிய, கவர்ச்சியான முதலீட்டுத் திட்டங்களின் மூலமும், போதுமான விளம்பர மற்றும் முதலீட்டாளர் தொடர்பு நடவடிக்கைகளின் மூலமாகவும், இந்நிறுவனம், வைப்புதாரர்களின் கவனத்தை ஈர்த்து அவர்களது பொன்னான சேமிப்பைத் தக்க வைத்துக் கொள்ளும். வைப்புதாரர்களின் எதிர்பார்ப்புகளுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்படுவதே இந்நிறுவனப் பணியாளர்களின் முன் நோக்கமாகவும் அமையும்.

இந்நிறுவனம் சென்னையில் ஆழ்வார்ப்பேட்டை சந்திப்புக்கு அருகில், எண்.84, டி.டி.கே. சாலை, ஆழ்வார்ப்பேட்டை, சென்னை-18 என்ற முகவரியில் தனது பணியைத் தொடங்கியுள்ளது.

இந்நிறுவனத்தின் தொடக்க விழா 16.10.'91 அன்று சிறப்பான முறையில் நடைபெற்றது. விழாவிற்கு மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் திரு.எஸ்.கண்ணப்பன் அவர்கள் தலைமை வகித்துச் சிறப்புரையாற்றினார். அவர் தமது உரையில், ''பொதுமக்களைக் கவரும் வகையில் இதில் வட்டி விகிதமும் கடன் வசதியும் வழங்கப்படுகிறது. இந்த நிதிக்கு மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி அவர்கள், முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து ரூ.5,00,000 வழங்கித் தொடங்கி வைத்துள்ளார். முதல் அமைச்சர் இதில் கொண்டுள்ள ஈடுபாடே இந்த நிதியின் முக்கியத்துவத்தை விளக்கும். அகில இந்தியாவில் மின்சாரம் திருட்டுப்போவது தமிழ்நாட்டில்தான் மிகவும் குறைவு. அதனை அடுத்து வருவது மகாராஷ்டிரா மாநிலம் ஆகும். மின்சார கட்டணத்தை தற்போது உயர்த்தியிருப்பது மிகவும் எச்சரிக்கையோடு எடுக்கப்பட்ட நடவடிக்கை ஆகும். ஒரு நாளைக்கு இருபது மணிநேரம் உழைக்கும் நமது மாண்புமிகு முதல்வரின் சீரிய நிர்வாகத்தின் கீழ் மிகச்சிறந்த நிறுவனமாக இது திகழும் என்பதில் சந்தேகமில்லை'' என்று குறிப்பிட்டார்.

தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தை மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் அவர்கள் தொடங்கி வைத்து விழாப் பேருரையாற்றினார். தமது உரையில், ''இந்த நிதி நிறுவனம் அரசின் சுமையைக் குறைக்க சிறந்த ஒரு அமைப்பாக விளங்கும். மக்களுக்கு விதிக்கப்பட வேண்டிய வரியை தவிர்ப்பதற்கு இதுபோன்ற நிறுவனங்கள் பயன்படும். அரசு அறிவிக்கின்ற பல்வேறு மானியங்களை ரிசர்வ் வங்கி மற்றும் மத்திய அரசின் அனுமதியுடன் பொதுக் கடன்களிலிருந்துதான் தரவேண்டியுள்ளது. வளர்ச்சிப் பணிகள் தொய்வின்றித் தொடர, பொது நிதியிலிருந்து எடுக்காமல், தேவையான நிதியினைப் பெற இது போன்ற நிதி நிறுவனங்கள் நிறுவப்படுகின்றன. மின்துறையில் பெரும்பாலும் நஷ்டம் ஏற்படுவதில்லை. ஏற்படும் நஷ்டத்திற்குக் காரணம் மின்சாரக் கட்டணத்திற்கு வழங்கும் மானியம்தான். இது போன்ற அரசு மானியங்கள் மற்றும் நிதியுதவிகள் பற்றி மக்களிடையே புதிய சிந்தனை உருவாக வேண்டும். வளர்ச்சித் திட்டங்கள் பாதிக்கப்படாமல் இருக்க வரி விதித்தாக வேண்டும். இல்லையெனில் உற்பத்திச்செலவை வாங்குபவர்கள் தந்தாக வேண்டும்.

### அட்டைப்பட விளக்கம்

**முதல் அட்டை:**

மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு பி.வி.நரசிம்ம ராவ் அவர்களை, சென்னை விமான நிலையத்தில் மேதகு ஆளுநர் திரு பீஷ்ம நாராயண் சிங், மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா, ஆகியோர் வரவேற்றனர்.

**இரண்டாம் அட்டை:**

நவம்பர்-14 பண்டித நேரு பிறந்த நாளையொட்டி அவரது திருவுருவப்படம் அட்டையை அலங்கரிக்கிறது.

**கடைசிப் பக்க அட்டை:**

நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டத் தொடக்க விழாவில் அலைகடலெனக் கூடியிருந்த மக்கள் வெள்ளத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

Government is to Govern. மின்சாரத் திட்டங்கள் தடைபடாமல் நிறைவேற இந்த நிதி நிறுவனம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் தருவதைவிடக் கூடுதல் வட்டி தரப்படுகிறது. மக்கள் இதில் முதலீடு செய்யும் தொகைக்கு அரசு பாதுகாப்புத் தருகிறது.

தமிழக மக்கள் அனைவரும் தங்களிடம் புதைந்துள்ள எண்ணும் திறன் ஆற்றல்திறன், செயல்பாட்டுத் திறன் ஆகியவைகளைக் கொண்டு முனைப்போடு பணியாற்றினால், மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் விரும்பியதைப் போல் தமிழகம் இந்தியாவிலேயே முதல் மாநிலமாக விளங்கும் நாள் வெகு தொலைவில் இல்லை. இந்த இலட்சியத்தை நோக்கி விரைந்து சென்றிட மக்களின் மனதில் புதிய மாற்றம் ஏற்பட வேண்டும். புதிய சிந்தனை பிறக்க வேண்டும். அத்தகைய மகத்தான மாற்றத்திற்கு இந்த நிதி நிறுவனம் மிகவும் துணைபுரியும். மின்சக்தி பற்றாக்குறையால் வெளி மாநிலங்களுக்குச் செல்லும் தொழிலதிபர்களை நாம் ஈர்க்க இயலும். எனவே, இந்த நிதி நிறுவனம் நன்கு வளர வேண்டும்'' என்றார்.

இந்த நிதியில் மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் அவர்கள் ரூ.5,000-மும், மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் ரூ.6,000-மும் முதலீடு செய்தனர்.

முன்னதாக விழாவிற்கு வருகை புரிந்தவர்களைப் பொதுப்பணித் துறைச் செயலர் திரு.சி.செல்லப்பன், இ.ஆ.ப. அவர்கள் வரவேற்றார். நிறுவனத்தின் முதலீட்டுத் திட்டங்களைத் தமிழ்நாடு மின்சார வாரியத் தலைவர் திரு. சி.இராமச்சந்திரன், இ.ஆ.ப., அவர்கள் அறிமுகம் செய்தார். விழாவில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் திரு. அன்பரசு டாக்டர்.ஸ்ரீதரன், சட்டமன்ற உறுப்பினர்கள் திருவாளர்கள் பலராமன், டி.எம்.ரங்கராஜன் ஆகியோர் பேசினார்கள். இந்த நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் திரு. கிருஷ்ணன், இ.ஆ.ப. அவர்கள் நன்றி நவில விழா இனிது நிறைவுற்றது.

**நிகழ்ச்சித் தொகுப்பு:**

**—என். இளங்கோ**

# 39 அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்கு அறிவியல் உபகரணங்களுக்காக ரூ.35 இலட்சம் வழங்கப்படும்.

**1989-90**-ஆம் ஆண்டில் மேல்நிலைப் பள்ளிகளாக உயர்த்தப்பட்ட 39 அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்கு அறிவியல் உபகரணங்களுக்காக இவ்வாண்டு ரூ.35 இலட்சம் வழங்கி மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

தமிழ்நாடு முழுவதும் இதனால் பயன்பெறும் அரசு மேல்நிலைப்பள்ளிகளின் விவரம் வருமாறு:

**செங்கல்பட்டு-எம்ஜிஆர் மாவட்டம்:-** 3 பள்ளிகள் (போலம்பாக்கம், கத்திவாக்கம் மற்றும் நங்கநல்லூர்)

**வடார்க்காடு-அம்பேத்கர் மற்றும் திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டங்கள்:-** 8 பள்ளிகள் (சந்தவாசல், குரும்பேரி, பேரணாம்பட்டு (பெண்கள்), செங்கம், புதுப்பேட்டை, பெண்ணாகர், பேராம்பத்தூர் மற்றும் விரிஞ்சிபுரம்)

**தென்னார்க்காடு மாவட்டம்:-** 4 பள்ளிகள் (பேர்பெரியன்குப்பம், களமருதூர், இளவஞ்சூர் மற்றும் முரார்பாத்)

**தஞ்சை மாவட்டம்:-** 4 பள்ளிகள் (திருநெய்ப்பேர், காரியப்பட்டினம், பெருகவாழ்ந்தான் மற்றும் திருக்குவளை)

**புதுக்கோட்டை மாவட்டம்:-** ஒரு பள்ளி (மேலசிவபுரி)

**திருச்சி மாவட்டம்:-** ஒரு பள்ளி (மனச்சநல்லூர்)

**திண்டுக்கல்-அண்ணா மாவட்டம்:-** 2 பள்ளிகள் (ஜி. இராமநாதபுரம் மற்றும் செந்துறை)

**மதுரை மாவட்டம்:-** ஒரு பள்ளி (ஏ. வள்ளாளப்பட்டி)

**இராமநாதபுரம் மாவட்டம்:-** ஒரு பள்ளி (சண்முகநாதப்பட்டினம்)

**பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டம்:-** ஒரு பள்ளி (கீழாடி)

**திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம்:-** 2 பள்ளிகள் (சம்பவர் வடகரை மற்றும் கங்கைகொண்டான்)

**தருமபுரி மாவட்டம்:-** 3 பள்ளிகள் (இலக்கியம்பட்டி, நல்லம்பள்ளி மற்றும் கடத்தூர் (பெண்கள்)

**சேலம் மாவட்டம்:-** 3 பள்ளிகள் (கண்ணங்குறிச்சி, வலையப்பட்டி மற்றும் ஆர். புதுப்பாளையம்)

**கோவை மாவட்டம்:-** 2 பள்ளிகள் (இருகூர் மற்றும் குமாரலிங்கம்)

**நீலகிரி மாவட்டம்:-** 2 பள்ளிகள் (எடப்பள்ளி மற்றும் பிதிர்காடு)

**சிதம்பரனார் மாவட்டம்:-** ஒரு பள்ளி (காளிங்கப்பட்டி)

"நாக்குப் பூச்சிகளை ஒழிக்க எல்லா வழிகளையும் பார்த்துட்டேன். கடைசியிலே எங்க கால்நடை மருத்துவர் கொடுத்த பன்மின்த்* தான் பலிச்சுது... பால் நஷ்டம் தராமலே!"



கறவைப் பிராணி உலகுக்கு நல்ல சேதி!

தன்னிகரற்ற

# பன்மின்த்*

(மொரண்ட்டெல் ஸிட்ரேட்)

## நாக்குப் பூச்சிகளை அழிக்கிறது, பாலைக் காப்பாற்றுகிறது.

''பாழும் நாக்குப் பூச்சிகளால்—அம்மம்ம, நான் பட்டபாடு: பலவீனம் பசியிராது, கறந்த பாலும் குறைவு. பிறகு, எங்க கால்நடை மருத்துவர் தந்த பன்மின்த் தான் பலிச்சுது—அதுவும் ஒரே ஒரு டோஸ்லே!''

**பால் இழப்பே இல்லை.**

''அருமையான சேதி—எங்க மாதிரி எல்லாக் கறவைகளுக்கும், சினைப் பிராணிகளுக்கும் கூட பத்திரமான மருந்து பன்மின்த். மற்ற மருந்துகளைப் போல் இல்லாமல், பன்மின்த் உபயோகித்த பிராணிகளின் பால், மனிதருக்குக் கெடுதலே இல்லை—நூற்றுக்கு 100 பத்திரமானது.''

**சினைக் காலத்தில் எந்த சமயத்திலும் தீங்கற்றது.**

''என் தங்கச்சி—பிள்ளைத் தாய்ச்சி—அவளுக்கு ஒத்துக்குமான்னு கவலைப்பட்டேன். ஆனால் பன்மின்த் சினைக் காலம் முழுக்க எந்தக் கெடுதலும் செய்யலே, ஏன், பலவீனக் காலங்களிலே கூட பாதிக்கலே. பக்க விளைவுகளே கிடையாது. குணமானதும் ஆறுதலான சுகம்!''

**வசதி மிக்கதும் கூட.**

''சாப்பிட வெகு இலகு பன்மின்த். சுண்டிவிடுங்க ஒரு குளிகை (எங்க மாதிரி பெரிய பசு எருமைகளுக்கு இரண்டு), உடம்பு சுகமாயிடுது! ஆடு, கன்று மாதிரி சின்னப் பிராணிகளுக்கு மாத்திரையா வருது. சாப்பிடத் தயாரான கரைசலாகவும் கிடைக்குது. வேறென்ன வேணும் நம்மவர்களுக்கு!''

பால் இழப்பே இராது
பன்மின்த்*
விசனைய் ஈடு செய்வது

கால்நடை மருத்துவரிடம் பெறுவீர் சிறந்த மருந்து.

**பன்மின்த்***

புழுக்களைக் கொல்லும்! ஆரோக்கியத்தை வெல்லும்!

LINTAS BMT 2 2217 TM

*யூ.எஸ்ஏ. ஃபைஸர் இன்க்.நிறுவன டிரேடு மார்க்.

pfizer

மேலும் விவரமறிய, எழுதுவீர் இம் முகவரிக்கு: ஃபைஸர் லிட்., பி.ஓ. பாக்ஸ் நம்பர் 11602, பம்பாய் 400021.

# பார்த்தோம் படித்தோம்

**1.10.'91** இதழ் கண்டேன். மாண்புமிகு முதல்வர் அவர்கள் சட்ட மன்றத்தில் ஆற்றிய உரையும் - 'உலகத் தலைவர்களில் ஒப்பற்றவர் தந்தை பெரியார்' என்ற தலைப்பிலான உரையும் - ''பேரறிஞர் அண்ணாவின்' எழுத்துச் செல்வங்கள் நாட்டுடைமை யாக்கப்படும்'' என்ற பேரறிவிப்பும், ''கடமை கண்ணியம் கட்டுப்பாடு இம் மூன்றும் இணைந்திருந்தால் உயர்வுக்கு ஏது தட்டுப்பாடு?'' என்று அறைகூவல் விடுத்த உரையும் இவ்விதழுக்கு முத் தாய்ப்பு வைத்தது போல் அமைந் திருந்தன. பாராட்டுகின்றோம்!

நாடகத்தந்தை பம்மல் சம்பந்தனார் பற்றி இதுவரையிலும் நுனிப்புல்லாக மட்டுமே அறிந்திருந்தவர்களுக்கு இவ் விதழில் அவரைப்பற்றி மலர்ந்திருந்த கட்டுரை, நுண்மாண் நுழைபுலத்தோடு கூடியதாக அமைந்திருந்தது. பி.வி.கிரி அவர்கள், சந்தனமும் செந்தமிழும் கலந்ததுபோல் அல்லவா கட்டுரையைப் படைத்திருந்தார்கள்!

—பூபாளம் ப. முருகேசபாண்டியன்,
கரப்பாடி.

அக்டோபர் முதல் இதழில் வெளி வந்த அறிஞர்கள், தலைவர்கள் பொன் மொழிகள் பயனுள்ள வகையில் இருந்தன. மாண்புமிகு முதல்வர் அவர் களின், தந்தை பெரியார் பற்றிய சிறப்புரை படித்துப் பயன்பெறவேண் டியதாகும்.

—டி.வசந்தா துரைராஜ்
கீழபழுவூர்
(திருச்சி மாவட்டம்)

'பொம்மைக் கண்காட்சி' பற்றிய கட்டுரையும், அது தொடர்பான படங் களும் கண்ணையும் கருத்தையும் கவர்ந்தன. நவராத்திரி விழா கொண் டாடப்பெறும் சமயத்தில், இக்கட்டு ரையை வெளியிட்டமைக்கு என் பாராட்டுக்கள். காந்தி மகானின் அட்டைப்படம் கண்ணைக் கவர்ந்தது.

—பா. சிவகுமார்,
குஞ்சரம்,
(தென்னார்க்காடு மாவட்டம்)

## எங்கள் தமிழகம் - எங்கும் செயல்மயம்



* ரூ. 22.55 கோடி மதிப்பீட்டில் நரிமணம் மின் சுழலி எரிவாயுத் திட்டம்.
* சாலைகள் சீரமைப்பு, மயிலாடுதுறை-முத்துப்பேட்டை சாலை விரிவாக்கம், சென்னை எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை சாலை மற்றும் ஊரக சாலை வளர்ச்சித் திட்டத்திற்கென ரூ.15.17 கோடி.
* நன்னிலம், காரைக்கால், திருத்துறைப்பூண்டியில் ரூ.1 கோடி செலவில் புதிய பேருந்து பணிமனைகள்.
* ரூ.75 இலட்சத்தில் தஞ்சாவூர், கூத்தாநல்லூர், பேராவூரணி, பட்டுக்கோட்டையில் புதிய பேருந்து நிலையங்கள்.
* தஞ்சாவூர் விரிவாக்கத் திட்டத்தின் கீழ் ரூ.1.73 கோடி மதிப்பீட்டில் அடுக்குமாடி வீடுகள்.
* தஞ்சாவூர் புறநகர் மற்றும் நன்னிலம், நாகப்பட்டினம் பகுதிகளில் ரூ.12 கோடி செலவில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி.
* ரூ.1 கோடியில் பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவர்களுக்கு விடுதி மற்றும் பொதுப்பணித்துறை அலுவலகக் கட்டடம், சந்தை, காவல் நிலையம், சமுதாயக்கூடம்.
* ரூ.60 இலட்சம் செலவில் மருந்தகங்கள் மற்றும் மருத்துவ வசதிகள்.
* ரூ.58 இலட்சம் செலவில் மன்னார்குடி, ஆலத்தம்பாடியில் ஆதிதிராவிடர் மாணவர்களுக்கு விடுதிகள், மற்றும் வேட்டுக்காட்டில் பள்ளிக் கட்டடம்.
* ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் ரூ.20 கோடியில் தொகுப்பு வீடுகள், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுக் கூட கட்டடங்கள். பள்ளிக் கட்டடங்கள், சமுதாயக் கூடங்கள், மற்றும் ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்கள்.
* ரூ.3 கோடி செலவில் தஞ்சையில் மின்சார கிளை நிலையம், மற்றும் மின்வாரிய ஊழியர்களுக்கு வீட்டு வசதி.

# தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

தமிழ் மொழியின் வளர்ச்சிக்காக-அதன் முதன்மைக்காக வையகமெங்கும் வாழும் தமிழ்ப் பெருமக்களின் மொழி, இலக்கியம், கலை, பண்பாடு ஆகியவற்றின் உயர்வுக்காக அனைத்துத் துறைகளிலும் உயர்தனி நூல்கள் பலவற்றை வெளியிட்டுப் பெருமை படைத்துள்ளது தமிழ்ப் பல்கலைக்கழகம்

அறிவியல் களஞ்சியங்கள்
வாழ்வியல் களஞ்சியங்கள்
மருத்துவம், சட்டம்,
பொறியியல் நூல்கள்
கல்வெட்டு, செப்பேடு ஆய்வுகள்
பெருஞ்சொல்லகராதிகள்
இலக்கண இலக்கிய ஆய்வுகள்
இசை, நாடகம் பற்றிய ஆய்வுகள்
ஆங்கில மொழிபெயர்ப்புகள்

போன்ற

இருநூற்றுக்கும் மேலாக எங்கள் வெளியீடுகள் உள்ளன.

விவரங்களுக்கும் விலைப்பட்டியலுக்கும்
தொடர்பு கொள்க:

**உதவி இயக்குநர்,**
பதிப்புத்துறை,
தமிழ்ப் பல்கலைக்கழகம்
அரண்மனை வளாகம்,
தஞ்சாவூர் 613 001

**பதிவாளர்**
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் 613 005

# இன்றியமையாத இடைப்படுகாடுகள் திட்டம்



சமூகக் காடுகள் திட்டத்தின் ஒரு புதிய கோட்பாடான 'இடைப்படு காடுகள் திட்டம்' (Inter-Face Forestry) தமிழ்நாட்டின் கிராமப்புறங்களில் மிகவும் பிரபலமாகி வருகிறது. இத்திட்டத்தின் சிறப்பம்சம், வனப்பகுதிகளுக்கு அருகில் வசிக்கும் மக்களையும் இதில் ஈடுபடுத்துவதுதான்.

வனப்பகுதிகளுக்கு அருகில் வசிக்கும் மக்கள் பொதுவாக, விறகு, கால்நடைத் தீவனம், ஆடுமேய்ப்பு முதலியவற்றிற்கு வனப்பகுதியைச் சட்ட விரோதமாகப் பயன்படுத்தி வருகிறார்கள். இடைப்படு காடுகள் திட்டத்தின் மூலம் வனப்பகுதிக்கும், குடியிருப்புப் பகுதிக்கும் இடைப்பட்ட இடத்தில் மக்களை ஈடுபடுத்தி, காடு வளர்க்கும் பணி மேற்கொள்ளப்படுகிறது.

வனப்பகுதியை வளம் நிறைந்ததாக வைத்திருக்க உதவுவதுடன், கிராம மக்களின் தேவைகளுக்குப் பயன் அளிக்கும் முகமாகவும் இத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. ஊரகப் பகுதிகளில் உள்ள நிலமற்ற வேளாண்மைத் தொழிலாளர்களுக்கு இத்திட்டத்தின் வாயிலாக வேலைவாய்ப்பு கிடைக்கிறது.

தமிழ்நாட்டில், பாதுகாக்கப்பட்ட பத்து வனப்பகுதிகளில் இடைப்படு காடுகள் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இவற்றுள் ஒன்பது திட்டங்கள் வனத்துறையாலும், ஒரு திட்டம் ஒரு சமூக சேவை அமைப்பாலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்காக 1988-89-இல் மூன்று 'இடைப்படு காடுகள் திட்டக் கோட்டங்கள்' உருவாக்கப்பட்டன. இதுவரை இத்திட்டத்தில் ஈடுபடும் வாய்ப்புள்ளவைகளாக 3,072 கிராமங்கள் வனத்துறையால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

**கிராம மக்களின் பங்கு**

தற்போது இடைப்படு காடுகள் திட்டம் 30 கிராமங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கடந்த ஆண்டு இதற்காக 2,500 எக்டேர் நிலப்பரப்பு எடுத்துக்கொள்ளப்பட்டது. இவ்வாண்டு ஏறத்தாழ 6,500 எக்டேர் நிலப்பரப்பில் திட்டத்தை செயல்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் ஏறத்தாழ நான்கு இலட்சம் எக்டேர் சிதிலமடைந்த வனப்பகுதி உடனடி கவனிப்பைப் பெறவேண்டிய நிலையில் உள்ளது.

**இடைப்படு காடுகள் திட்டம்-அதனால் என்ன நன்மை? அவற்றை விளக்கிக் கூறுகிறது இக்கட்டுரை:**

திட்டம் செயல்படும் கிராமங்களுக்கு வனத்துறை அலுவலர்கள் அடிக்கடி சென்று கூட்டங்களை நடத்துகிறார்கள். புதிய மரக்கன்றுகளை நடுதல், கசிவு நீர்க்குட்டைகளை ஏற்படுத்துதல் உட்பட மண் பாதுகாப்பு நடவடிக்கைகளிலும் கிராம மக்கள் ஈடுபடுத்தப்படுகிறார்கள். இதனால் திட்டம் வெற்றிகரமாக நிறைவேறும்போது கிராம மக்களுக்குத் தாங்களும் அதில் பங்களித்த திருப்தி கிடைக்கும். மண் அரிப்பைத் தடுப்பதற்காகவும், சம்பந்தப்பட்ட இடங்களில் நீர் இருப்பைப் பாதுகாப்பதற்காகவும், 'முறையாக நீரைப் பயன்படுத்தும் தொழில்நுட்பம்' இடைப்படு காடுகள் திட்டத்தில் பயன்படுத்தப்படுவது குறிப்பிடத்தக்கதாகும். கால்நடைகளுக்குத் தேவையான தீவனங்களை இலகுவாகப் பெறுவதற்கும் இத்திட்டம் உதவி செய்கிறது.

மழை பிடிப்புப் பகுதிகளின் சுற்றுச்சூழல் இசைவுத் தன்மையை மேம்படுத்தவும், கிராம மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யவும் திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட நிலப்பரப்பு மூன்று அடுக்குகளாகப் பிரிக்கப்பட்டு பலவகையான மரங்கள் நடப்படுகின்றன.

**அடுக்குகளின் விவரங்கள்**

மூன்று அடுக்குகளாகப் பிரிக்கப்பட்டுள்ள திட்டப்பகுதியில், தாழ்ந்த அடுக்குக்கு 'இடைப்படு மண்டலம்' என்று பெயர். இப்பகுதியில் கால்நடைத் தீவனம், பழங்கள், எரிபொருள், பசுந்தாழ் உரம்

# மக்கள் வாழ்க்கைத் தரம் மேம்பட...

மக்களின் வாழ்க்கைத்தரம் மேம்பட மின்சாரம் ஒரு இன்றியமையாத ஆதாரமாகும். தொழில்வளம் மற்றும் உணவு உற்பத்தி பெருக போதுமான அளவு, மின் உற்பத்தி அதிகரிக்கப்பட வேண்டுமென்பது தமிழக அரசின் முக்கிய குறிக்கோளாகும். இதன் பொருட்டு கீழ்க் கண்ட திட்டங்கள் நிறுவப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| நரிமணம் எரிவாயு சுழலி மின் திட்டம் | 10 மெ.வா | 10/91 |
| தூத்துக்குடி அனல்மின் நிலைய விரிவாக்கத்திட்டம் | 420 மெ.வா | 1991-92 |
| வடசென்னை அனல்மின் திட்டம் | 630 மெ.வா | 1993-94 |
| பேசின் பாலம் எரிவாயு சுழலி மின் திட்டம் | 120 மெ.வா | 1992-94 |
| புனாச்சி நுண்புனல் மின் திட்டம் | 2 மெ.வா | 3/92 |
| மரவக்கண்டி நுண்புனல் மின் திட்டம் | 0.75 மெ.வா | 9/92 |
| சாத்தனூர் புனல் மின் திட்டம் | 7.5 மெ.வா | 3/95 |
| கீழ்பவானி வலதுகரைக் கால்வாய் புனல் மின் திட்டம் | 8 மெ.வா | 3/95 |
| பைக்காரா இறுதிநிலை புனல் மின் திட்டம் | 150 மெ.வா | 1997-98 |
| காற்றாலைகள் | 3 மெ.வா | 3/92 |
| மொத்தம் | 1351.25 மெ.வா | |

(மெ.வா: மெகாவாட்)

முதலியவற்றைத் தரக்கூடிய மரவகைகள் நடப்படுகின்றன. 'பொருள் சேர்ப்பு மண்டலம்' என்று அழைக்கப்படும் மத்திய அடுக்குப் பகுதியில், மரத்தடிகள் போன்றவற்றைக் கொடுக்கும் மரவகைகள் நடப்படுகின்றன. 'சுற்றுச்சுழல் இசைவை சமனப்படுத்தும் மண்டலம்' என்றழைக்கப்படும் மேல் அடுக்கில், வேம்பு, மூங்கில் முதலிய மரங்கள் வளர்க்கப்படுகின்றன. இப்பகுதியில் உள்ள வனப்பரப்பை இயல்பான நிலைக்குக் கொண்டுவருவதற்காக நில, நீர் நிர்வாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

அய்யலூரில், 1988 முதல் ஒரு முன்னோடித் திட்டமாக இடைப்படு காடுகள் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அய்யலூர் மலைகளையும், அவற்றைச் சுற்றியுள்ள பகுதிகளையும் சார்ந்த சிதிலமடைந்த 7,212.13 எக்டேர் வனப்பகுதி இதற்காகத் தேர்வு செய்யப்பட்டது. ஒவ்வொரு ஆண்டும் 600 எக்டேர் வனப்பகுதி இத்திட்டத்தின் கீழ் சீரமைக்கப்படுகிறது. ஒரு குடும்பத்தில் ஒருவருக்கு வேலை என்ற அடிப்படையில் ஆண்டு முழுவதும் வேலைவாய்ப்பும் அளிக்கப்படுகிறது. இப்பகுதி மக்கள் நடுவதற்காக மரக்கன்றுகள் இலவசமாக வழங்கப்படுகின்றன. இதுவரை 5,503 எக்டேர், இத்திட்டத்தின் கீழ் மேம்பாடு அடைந்துள்ளது.

**சமூகப் பொருளாதார வளர்ச்சி**

அய்யலூர் இடைப்படு காடுகள் திட்டத்தில், ஆறு கால்நடைத் தீவன வங்கிகள் உருவாக்கப்பட்டு கால்நடை வளர்ப்போரின் வருமான வரம்பு உயர்ந்துள்ளது. வனப்பகுதிகளை மேய்ந்துகொண்டிருந்த ஆடுகளுக்குப் பதிலாக கறவை மாடுகள் வாங்கப்பட்டுள்ளதால் வனப்பகுதி அழியும் நிலை தடுக்கப்பட்டுள்ளது. இவ்வகையில் கிராமங்களின் சமூகப் பொருளாதார வளர்ச்சியிலும் இடைப்படு காடுகள் திட்டம் முக்கிய பங்காற்றுகிறது.

காம்போஸ்ட் உரத் தயாரிப்பு, தோட்டக்கலை, கோழி வளர்ப்பு, முயல் வளர்ப்பு, வேளாண்-பண்ணை வனத்திட்டம் முதலியவற்றில் கிராம மக்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. காந்தி கிராமத்தில் உள்ள ஊரகப் பல்கலைக் கழகத்தின் பிரிவு ஒன்றும் கிராம மக்களுக்குப் பயிற்சியளித்து வருகிறது.

இடைப்படு காடுகள் திட்டத்தின் கீழ் பயன்பெற்ற கிராமங்களின் சுற்றுப்புற மக்கள், தங்களது கிராமங்களிலும் இத்திட்டத்தைக் கொண்டுவருமாறு வனத்துறையிடம் கேட்பதிலிருந்தே திட்டத்தின் வெற்றியை நாம் புரிந்து கொள்ளலாம். இந்தத் திட்டம் நாட்டின் இதர மாநிலங்களாலும் பின்பற்றப்படும் என்பதிலும் ஐயம் இல்லை. எனவே, கொஞ்சம் கொஞ்சமாக மறைந்து வரும் நமது வனப் பகுதிகளை மீண்டும் உருவாக்குவதில், இத்திட்டத்தால் பெரும் வெற்றி கிடைக்கும் என்று நம்புவோமாக!

—பத்திரிகைத் தகவல் அலுவலகம்




# நாகப்பட்டினம்- காயிதே மில்லத் மாவட்டம் - ஒரு கண்ணோட்டம்

திரு. சண்முக ராஜேஸ்வரன், இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித் தலைவர்
தஞ்சாவூர் மாவட்டம்

**அ**லை பாய்ந்து கலை வளர்க்கும் அன்னைக்காவிரியின் அரவணைப்பில் வாழ்ந்து வளர்ந்து வருவது தஞ்சாவூர் மாவட்டம். வரலாற்று ஆசிரியர்களின் கருத்துக்கு நல்லுணர்வாகப் பண்பாடு, கலை, இசை, ஓவியம், நாட்டியம், நாடகம் என பல்வேறு பண்பாட்டின் நிலைக்களனாக- உறைவிடமாகத் திகழ்வது தஞ்சாவூர். இம் மாவட்டத்தில் உள்ள கோயில்களும், கோட்டையும், அரண்மனைகளும், அகழிகளும், கல்வெட்டுகளும், சோழர் கால ஆட்சியின் மாட்சியையும், பின் வந்த நாயக்க, மராட்டிய மன்னர்களின் மாண்பையும் பறை சாற்றி நிற்கின்றன. முந்தைய சோழர் ஆட்சியில் கரிகாலன் (கி.பி.50-75) காவிரிக்குக் கரையமைத்து, கல்லணை கட்டி தஞ்சைத் தரணியின் கழனிகளில் ஒரு நெல் விதைத்தால் ஓராயிரம் நெல்லாக விளைந்த காட்சியை எண்ணி நம் மனம் இனிய வரலாற்று நினைவில் அசைபோடுகிறது.

தஞ்சாவூர்ச் சோழர்களின் புகழ் பெற்ற வரலாறு, விஜயாலயன் சோழன் (கி.பி. 846-881) காலத்தில் தொடங்குகிறது. நீண்ட இடைவெளிக்குப் பின், விஜயாலயன் காலத்திலே தஞ்சாவூர் நகரம் சோழர்கள் வரலாற்றின் பாதையில் முதல் சுவட்டை எடுத்து வைக்கிறது. மேலும் சிவபாதசேகரனான முதலாம் இராசராசன் (கி.பி. 985-1014) உலகோர் போற்றும் உன்னத கலை இருப்பிடமான தட்சிண மேரு என அழைக்கப்பெற்ற பெரிய கோவிலை பெருவுடையாருக்கு எடுத்தான். 'தஞ்சை இராசராசேசுவரம்' என அழைக்கப்படும் இக்கோயில் காலங்கள் உள்ளளவும் சோழர்களின் கலையுணர்வையும் கட்டடச் சிறப்புணர்வையும் பறை சாற்றி நிற்கும். தஞ்சையில் அமைந்துள்ள கோட்டைகளும், அகழிகளும், அரண்மனைகளும், ஏகாச்சிறப்பும், எழிலழகும் பெற்றவை. எல்லாவற்றிற்கும் மேலாக இரண்டாம் சரபோஜி மன்னரால் நிறுவப்பட்டு தொகுக்கப்பட்ட ஓலைச் சுவடிகள், காகிதச் சுவடிகள், கையெழுத்துப் பிரதிகளும், திரட்டப்பட்ட மேலை நாட்டு வரலாறுகளும், இசை, அறிவியல், நுண்கலை நூல்களும், இன்றளவும் அறிஞர்களுக்கும், ஆய்வாளர்களுக்கும், ஓவியர்களுக்கும், காவியம் படைப்போருக்கும் பெரிதும் துணை நின்று பெருமைப்படுத்துகின்றன. என்றால் அது மிகையாகாது. இதே போன்று கலைக் கூடத்தின் கவின் பெறும் சிறப்பையும் கூறலாம்.

இத்தகைய மாட்சியும், வரலாற்று மணத்தையும் அள்ளி வீசிக் கொண்டிருக்கும் தஞ்சாவூர் மாவட்டம் 6 வருவாய்க் கோட்டங்களையும் 20 வட்டங்களையும் கொண்டது. இதே போன்று ஆறு வளர்ச்சித்துறைக் கோட்டங்களையும் கொண்டது. இம்மாவட்டத்தில் வட எல்லை கொள்ளிடம் ஆற்றினாலும், கிழக்கு, தெற்குப்புறம் வங்கக்கடலாலும், மேற்கு எல்லை திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை மாவட்டங்களாலும் சூழப்பெற்றது. இவ்வாறு பரந்து விரிந்த இந்த மாவட்டம் ஒரு மாவட்ட ஆட்சியரின் ஆளுகையிலும், கட்டுப்பாட்டிலும் இதுகாறும் இயங்கி வந்தது. இன்றைய சமுதாய பொருளாதாரச் சூழ்நிலையில் மக்களுக்கு மிக விரைவானதும், வலுவானதுமான நிர்வாகத்தைத் தர வேண்டும் என்ற கருத்தின் அடிப்படையில் தமிழக அரசு இந்த மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து, 'கீழ்த்தஞ்சை'

★ வரலாறு என்பது, ஒரு நாட்டின் சரித்திரம் அல்ல; மக்கள் சமுதாயம் முழுமைக்குமான பொது நிகழ்ச்சியாக இன்றைய வரலாறு மாறியிருக்கின்றது. ஏனெனில், இன்றைய உலகம் ஒரு பொது நியதிக்கு உட்பட்டே இயங்குகின்றது.

—பண்டித நேரு

என இதுகாறும் அழைக்கப்பட்டு வந்த பகுதிகளை உட்கொண்ட பரப்பினை ஒருங்கிணைத்து நாகப் பட்டினத்தைத் தலைமை இடமாகக் கொண்டு 'காயிதே மில்லத்' எனும் பெயரில் உருவாக் கிட ஆணையிட்டுள்ளது.

இந்த இடத்திலே இந்திய அர சியல் வரலாற்றில் பின்னிப் பிணைக் கப்பட்டுள்ள திரு. காயிதே மில்லத் அவர்களின் பெயரை வைத்தது எவ்வளவு பொருத்தமானது என எண்ணி மகிழ வேண்டியிருக்கிறது. திருநெல்வேலியில் பேட்டையில் 5.6.1893-இல் பிறந்த திரு. காயிதே மில்லத் அவர்கள் இந்திய சுதந்திரப் போராட்டத்திலே ஈடுபட்டதும், காந்தியடிகளின் ஒத்துழையாமை இயக்கத்தில் ஈடுபட்டதும் அவர் அர சியலிலே காட்டிய கண்ணியமும், இந்து-முஸ்லிம் ஒற்றுமைக்காகப் பாடுபட்ட பாங்கும் 'பிறந்த நாட்டுக் கும், பெற்றெடுத்த சமுதாயத்திற் கும்' பேசிய மொழிக்கும் அவர்கள் ஆற்றிய சேவையும் இந்திய வரலாற் றிலே தனக்கென ஒரு தனியிடம் ஏற்படுத்தியுள்ளது. குறிப்பாக அவர்கள் இந்திய அரசியல் நிர் ணயச் சபையில் உறுப்பினராக இருந்த காலம் 'எனது தாய்மொழி யான தமிழை இந்நாட்டின் தேசிய மொழியாக ஏற்றுக் கொள்ளும்படி உறுப்பினர்கள் அனைவரையும் வேண்டிக்கொள்கிறேன்' எனக் கூறி தமிழுக்குப் பெருமை சேர்த்த சிறப் பைத் தமிழ் கூறும் நல்லுலகம் என்றும் மறவாது. அடுத்து மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் தராவிட்டால் அவை 'பளபளப்பான நகராட்சி களாகவே காட்சியளிக்கும்' என வாதிட்டதையும் நாம் மறக்கவிய லாது. அடுத்து சிறுபான்மையினருக் கெனக் கல்லூரிகள் அமைத்தல் கூடாது என அப்போதைய அரசு கருதியபோது திரு. காயிதே மில்லத் அவர்கள் சிறுபான்மையினரான முஸ்லிம் மக்களுக்கென திருச்சியில் 'ஜமால் முகமது கல்லூரி' மற்றும் ஏறத்தாழ பதினான்கு கல்வி அமைப் புகளை ஏற்படுத்தி கல்வித்துறையில் காட்டிய அளப்பரிய பணியையும் மறக்கவியலாது. எனவே, இத்தகைய சுதந்திரப் போராட்ட வீரர், அரசி யலமைப்பு உறுப்பினர்-கல்விக் காவலர், எல்லாவற்றிற்கும் மேலாக இந்து- முஸ்லிம் மக்களின் ஒற்று மைக்கும் சமுதாய வளர்ச்சிக்கும் தம்மை அர்ப்பணித்துக் கொண்ட ஒரு பெரியவர் பெயரால் இந்த மாவட்டம் அமைவது ஏற்றமுடைய தாகும். புதிதாகத் தோற்றுவிக்கப் படும் நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டத்தின் தலைநகரான நாகப் பட்டினத்திற்கு அருகாமையில் நாகூர் எனும் இஸ்லாமிய புனிதத் தலம் அமைந்திருப்பது குறிப்பிடத் தக்கது. இந்தத் தர்காவிற்குத் தஞ்சாவூர் மராட்டிய மன்னர்கள் தானங்களை வாரி வழங்கியுள்ளார்கள் என்றால் இந்த நாடு சமுதாயப் பொறை யுடைமையுள்ள ஒரு நாடு என்ப தற்குச் சான்றாகும்.

நாகப்பட்டினம் மிகப் புகழ் பெற்ற பண்டைய துறைமுகமாகும். கல்யாணிக் கல்வெட்டுக்கள் (கி.பி. 1476) பர்மாவிற்கும் இலங்கைக்கும் இடையில் சென்ற கப்பல்கள் நாகப் பட்டினம் வந்து சென்றன என்று குறிப்பிடுவதிலிருந்து இதன் துறை முகச் சிறப்பினை அறியலாம். இந்த நகரில் பல ஐரோப்பியர்கள் வாணிபத் தலங்கள் அமைத்திருந்தனர். கி.பி.1612 முதல் 1660 வரை இங்கு போர்ச்சுகீசியர்கள் வாணிபச் செல்வாக்குப் பெற்றிருந்தனர். தஞ்சை நாயக்க மன்னர் விஜயராக நாயக்கரிடம் வாணிப உரிமை பெற்ற டச்சுக்காரர்கள் கி.பி.-1660 முதல் 1781 வரை வாணிப ஆதிக்கம் செலுத்தினர். தஞ்சை மராத்திய மன்னர் எகோஜி டச்சுக்காரர்கள் நாயக்கர் மன்னரிடம் பெற்ற உரி மையை உறுதிப்படுத்தினார். டச்சுக் காரர்களின் வீழ்ச்சியையடுத்து 1791-இல் ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆதிக்கத்தில் வந்து கி.பி. 1799 முதல் 1845 வரை

## தமிழகத்தின் 22-வது மாவட்டம்

நாகப்பட்டினம் காயிதேமில்லத் மாவட்டம் தமிழகத்தின் 22-வது மாவட்டம் ஆகும்.

தமிழ்நாட்டின் பிற மாவட்டங் களாவன:

1. சென்னை 2. செங்கல்பட்டு எம்.ஜி.ஆர். 3. வட ஆர்க்காடு அம்பேத்கர் 4. திருவண்ணாமலை சம்புவராயர் 5. தென் ஆர்க்காடு 6. தஞ்சாவூர் 7. திருச்சிராப்பள்ளி 8. புதுக்கோட்டை 9. இராமநாதபுரம் 10. மதுரை 11. திருநெல்வேலி கட்டபொம்மன் 12. கன்னியாகுமரி 13. சேலம் 14. தருமபுரி 15. பெரியார் 16. கோயம்புத்தூர் 17. நீலகிரி 18. காமராஜர் 19. பசும்பொன்தேவர் திருமகன் 20. திண்டுக்கல் அண்ணா 21. சிதம்பரனார்.

தஞ்சை மாவட்டத்தின் தலைமையிட மாக விளங்கிப் புகழ் பெற்றது நாகப்பட்டினம் நகர். கி.பி. 1845 வரை இது சிறந்த துறைமுகமாகவும் செயல்பட்டது.

இரு மாவட்டங்கள் ஏற்படுத்தும் இந்தப் பணியில் கோட்டங்கள் மற்றும் வளர்ச்சிக் கோட்டங்கள் தற்போது இயங்கி வரும் அடிப்படை யில் அதிக மாற்றம் செய்யக்கூடாது என்ற கருத்திலும், தொடர்ச்சியாக வும் நடைமுறையில் இயங்கக் கூடிய தாகவும் அமைய வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையிலும் பிரிக்கப்பட்டுள்ளன. இதே போன்று கீழ்க்காணும் துறைகள் முன்பே கிழக்கு-மேற்கு என்ற பிரிவின் அடிப்படையில் இயங்கி வருகின்றன:

1. நெடுஞ்சாலை மற்றும் ஊரகப்பணித்துறை
2. பதிவுத்துறை
3. வேளாண்மைத்துறை
4. கால்நடைப் பராமரிப்புத்துறை
5. கூட்டுறவுத்துறை
6. தொழிற்சாலைகள் ஆய்வாளர்

மேலும் கீழ்க்கண்ட 10 துறைகள் நாகப்பட்டினத்தைத் தலைமையிட மாகக் கொண்டு இயங்கி வருகின்றன.

1. தஞ்சாவூர் மாவட்டக் காவல்துறை (கிழக்கு)
2. மாவட்டக் கருவூலத்துறை
3. மண்டலப் போக்குவரத்துத்துறை
4. மாவட்டப் பதிவாளர்
5. மீன் வளர்ச்சித்துறை துணை இயக்குநர் (பிரியாத தஞ்சை மாவட்டம்)
6. நிர்வாக அலுவலர் (துறைமுகம்)
7. மாவட்ட மருத்துவ அலுவலர் (பிரியாத மாவட்டத்தில் இயங்கியது)
8. மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர்
9. கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை மற்றும் ஊரகப் பணிகள்)
10. திட்ட அலுவலர் (முதியோர் கல்வி)

இந்தப் பிரிவினைக்குப் பின், தஞ்சாவூர் மாவட்டத்தில் பெரிய கோயில் அரண்மனை, தஞ்சைக் கோட்டை, சரசுவதி மகால், கலைக் கூடம், போன்ற வரலாற்று அமைப் புகளும், கும்பகோணம் மகாமகக் குளம், தமிழ்ப் பல்கலைக்கழகம் மற்றும் அநேகக் கல்வி நிறுவனங் களும், தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி, இரு பொறியியற் கல்லூரிகள், தென் மண்டலப் பண்பாட்டு மையம், திருவையாறு தியாகராசர் சமாதி, மனோரா, கல்லணை ஆகியவையும் அடங்கும்.

நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டத்தில் திருவாரூர் தியாராச சுவாமி ஆலயம், பூம்புகார், தருமபுர மடம், வேளாங்கண்ணி மாதா கோயில், நாகூர் தர்கா, தரங்கம் பாடி கோட்டை, திருக்கடையூர் கோயில், கோடியக்கரை வன விலங்கு சரணாலயம் மற்றும் உதய மார்த்தாண்டபுரம் பறவைகள் சர ணாலயம் ஆகியவையும் இடம் பெறுகின்றன. எண்ணெய் எரி வாயுக் கண்டுபிடிப்பின் மூலம் இம்மாவட்டம் தொழில் துறையில் நல்ல முன்னேற்றம் காணப் பல திட்டங்கள் உள்ளன. ●

## தஞ்சாவூர் 66/11 கி.வோ. துணை மின் நிலையம்

தஞ்சாவூர் நகரில், மின்சாரம் தஞ்சாவூர் நகராட்சியால் விநியோகிக்கப்படுகிறது. இந்நகரில் தற்பொழுது 28,600 மின்நுகர்வோர் உள்ளனர். அவர்களின் மின் தேவை 9000 கே.வி.ஏ. ஆகும். 1994-95ம் ஆண்டில், தேவை 13,500 கே.வி.ஏ. அளவிற்கு அதிகரிக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது. தஞ்சாவூர் நகருக்கு மின்சாரம், நகருக்கு சுமார் 6 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள 110/11 கி.வோ. துணை மின் நிலையத்திலிருந்து இரண்டு 11 கி.வோ. கம்பித் தொடர்களின் மூலம் வழங்கப்படுகிறது. இவ்வாறு வழங்குவதில் 28.8 விழுக்காடுகள் இழப்பு ஏற்படுவதுடன், மின் அழுத்தமும் சீராக இல்லை. மேற்கூறிய குறைகளை நீக்கும் பொருட்டு, தமிழ்நாடு மின்சார வாரியம், தஞ்சாவூர் நகர எல்லைக்குள் ரூபாய் 133.17 இலட்சம் செலவில் ஒரு 66/11 கி.வோ. துணை மின் நிலையம் நிறுவ முடிவெடுத்துள்ளது. இந்த நிலையத்தில் இரண்டு 10,000 கே.வி.ஏ. 66/11 கி.வோ. மின் மாற்றிகள் நிறுவப்படும். இந்த மின் நிலையம் 1992ம் ஆண்டு இயக்கத்திற்கு வரும். இந்த நிலையத்தை அமைப்பதின் மூலம் தஞ்சாவூர் நகர மக்கள் மின் சக்தி பெறுவதில் பெரும் பயனடைவார்கள் என்பதும் தஞ்சாவூர் நகராட்சிக்கு ரூபாய் 43 இலட்சம் சேமிப்பு ஏற்படும் என்பதும் எல்லோருக்கும் மனநிறைவை அளிக்க கூடியதாக இருக்கும்.

தமிழ்நாடு மின்சார வாரியம்

# பெரியார் மாவட்ட வளர்ச்சிப் பணிகள்

பெரியார் மாவட்டத்தில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்திற்கு 1991-92-ஆம் ஆண்டிற்கு 7,870 நபர்கள் பயன்பெறும் வகையில் ரூ.245.945 இலட்சம் ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது. இம்மாவட்டத்திலுள்ள 20 ஊராட்சி ஒன்றியங்களிலும் தகுதியுள்ள நபர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

1990-91-ஆம் ஆண்டில் 700 கிராமப்புற இளைஞர்களுக்குச் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ், பல்வேறு தொழில்களில் பயிற்சியளிக்கத் திட்டமிடப்பட்டது. இதுவரை 735 நபர்கள் தேர்வு செய்யப்பட்டு, பயிற்சி முடித்துள்ளனர். 1991-92-ஆம் ஆண்டுக்கு 1,400 நபர்கள் தேர்வு செய்யப்பட்டு, பயிற்சியளிக்கப்பட்டு வருகிறது. பயிற்சி முடிவுற்ற பிறகு தொடர்புடைய தொழில் நடத்த மானியத்துடன் கூடிய கடனுதவி வழங்கப்படும்.

ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ், 1991-92-ஆம் ஆண்டிற்கு 1959 தொகுப்பு வீடுகள் அமைக்கவும், 63 கி.மீ. தார்ச் சாலைகள், 90 கி.மீ. கப்பிச் சாலைகள் அமைக்கவும், 79 ஊராட்சி மன்றக் கட்டடங்கள் அமைக்கவும், 22 பள்ளிக் கட்டடங்கள் அமைக்கவும், 22 சத்துணவு மையக் கட்டடங்கள் அமைக்கவும், பாலங்கள் குடிநீர்த் திட்டப் பணிகள், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைப் பணிகள், சமூகக் காடுகள், மற்றும் ஜீவன்தாரா கிணறுகள் அமைக்கவும், ரூ.846.65 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தினை மேற்கொள்வதற்கான பணிகள் தேர்வு செய்யப்பட்டு வருகின்றன.

### போலி குடும்ப அட்டைகள்

போலி குடும்ப அட்டைகள் புழக்கத்தில் இருப்பதைத் தடுக்கும் பொருட்டு, தணிக்கை மேற்கொண்டதில், இதுவரை 13,724 போலி குடும்ப அட்டைகள் கண்டுபிடிக்கப்பட்டு, ரத்து செய்யப்பட்டன.

**பெரியார் மாவட்டத்தில் வேளாண்மை, சுயவேலை வாய்ப்பு, பட்டு வளர்ச்சி, கதர் உற்பத்தி, மாவட்டத் தொழில் மையம் ஆகியவற்றில் பெருமளவு வளர்ச்சிப் பணிகள் நடைபெற்று வருகின்றன. அவற்றை விளக்கிக் கூறுகிறது இக் கட்டுரை**

வட்டத்திற்கு 65 விவசாயிகள் வீதம் இம்மாவட்டத்திலுள்ள 7 வட்டங்களிலும், சுமார் 455 விவசாயிகளுக்கு ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு பற்றிய பயிற்சி இரண்டு நாட்கள் வழங்கப்படவுள்ளது. ஈரோடு வட்டத்தில் கதிரம்பட்டி, காரணாம்பாளையம், குமிளன் பரப்பு, குருக்கபாளையம், கந்தசாமி பாளையம் ஆகிய கிராமங்களிலும், பெருந்துறையில் நல்லாம்பட்டி, பசுவபட்டி, வெட்டயங்கிணறு, காஞ்சி கோயிலிலும், கோபியில் பொலவக் காளிப் பாளையம், செய்யாம் பாளையம், நஞ்சைத்துறையம் பாளையம், கோசனம் ஆகிய கிராமங்களிலும், சத்தியில் செண்பகப் புதூர், பெரியூர், அய்யன்சாலை, சிக்கரசம்பாளையம், தாராபுரத்தில் மூல்னூர் தளவாய்ப்பட்டினம், கொளத்துப்பாளையம், கோவிந்தாபுரம், காங்கேயத்தில் பரம்சேர்வழி, மரவபாளையம், நத்தக்காட்டுவலசு, வள்ளியரச்சல், பவானியில் பருவாச்சி, கவுந்தபாடி, வைரமங்கலம் ஆகிய கிராமங்களிலும் சுமார் 20 முதல் 40 எக்டேர் வரையிலான ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்புச் செயல் விளக்கத் திடல்கள் அமைக்கப்படவுள்ளன. இத்திடலில் பங்கேற்கும் விவசாயிகளுக்கு ரூ.100 மதிப்புள்ள பயிர்ப் பாதுகாப்பு உபகரணங்கள் பாதி விலையில் வழங்கப்படுகின்றன. பயிற்சிக்கும் இக் கிராம விவசாயிகள் தேர்ந்தெடுக்கப் படவுள்ளார்கள். பயிற்சிக்கான உதவித் தொகை ரூ.60, பயிர்ப் பாதுகாப்புப் பற்றிய புத்தகங்களுக்காக ரூ.40 விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. இப்பணிகளுக்கென ரூ.1.2 இலட்சம் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது.

பெரியார் மாவட்டத்தில் பல்வேறு ஆயக்கட்டுப் பகுதிகளில் தண்ணீர் திறந்துவிடப்பட்டதையடுத்து, அரசு வேளாண் விரிவாக்க மையங்களில் நெல் விதை விற்பனையில் என்றுமில்லாத வேகம் காணப்பட்டுள்ளது. 400 மெ.டன் நெல் விதைகள் விநியோகம் செய்யப்பட்டுள்ளது. விதை விநியோகம் இன்னும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. நடப்பாண்டில் இதுவரை 610 மெ.டன் நெல் விதைகள் விநியோகம் செய்யப்பட்டுள்ளது. இதேபோல, மானாவாரி விதைப்பில் தீவிரம் காரணமாக 150 மெ.டன் நிலக்கடலை விதைகளும், 100 டன் ஜிப்சம் உரமும் விநியோகம் செய்யப்பட்டுள்ளன.

பெரியார் மாவட்டத்தில் 19 கிராமங்களில் தலா 100 எக்டேர் பரப்பில் அமைக்கப்பட்டுள்ள மானாவாரி தொழில் நுட்பச் செயல் விளக்கத் திடல், விவசாயிகள் டிராக்டர் மூலம் கோடை உழவு செய்வதற்காக எக்டேருக்கு ரூ.200

வீதம், 1,416 எக்டேருக்குச் சுமார் ரூ.2.5 இலட்சம் மானிய உதவி வழங்கப்பட்டுள்ளது.

**ஒருங்கிணைந்த அரிசி உற்பத்தி மேம்பாட்டுத் திட்டத்தில் சாதனைகள்**

நெல் விதை வாங்கும் விவசாயிகளுக்கு, கிலோ ஒன்றுக்கு ஒரு ரூபாய் மானிய உதவி வழங்கும் திட்டத்தின் கீழ் 456 மெ.டன் நெல் விதைகள் 9,173 விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளது. இதற்கென ரூ.4.56 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. விதை நேர்த்தி மருந்து ஜிப்சம் உரம், பயிர்ப் பாதுகாப்புக் கருவி மற்றும் மருந்துகள் ஆகிய இனங்களுக்காக ரூபாய் ஒரு இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. மேலும், ரூ.14 இலட்சம் மானிய உதவியுடன் பயிர்ப் பாதுகாப்புக் கருவி, வேளாண் கருவிகள், களைக் கொல்லி மருந்துகள், பயிர்ப் பாதுகாப்பு மருந்துகள், பயிற்சி ஆகியன இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும். இத்திட்டத்தின் கீழ் இதுவரை 13,300 விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

எண்ணெய் வித்துப் பெருக்கத் திட்டத்தின் கீழ், இம்மாவட்டத்தில் இதுவரை 376 டன் தரமான நிலக்கடலை விதைகள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. ரூ.2 இலட்சம் மானிய உதவியுடன் தலா 50 எக்டேர் பரப்பில் பவானி, பெருந்துறை, கோபி, நம்பியூர், பவானி சாகர் ஆகிய வட்டாரங்களில் பெருவிளக்கத் திடல்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இம்மாவட்டத்தில் 120 விவசாயிகள் அமைத்துள்ள மர நாற்றுப் பண்ணைகளிலிருந்து உற்பத்தி செய்யப்பட்ட 3.5 இலட்சம் மரக் கன்றுகளும், அரசு விதைப் பண்ணைகளில் உற்பத்தி செய்யப்பட்ட 10,000 மரக் கன்றுகளுமாக மொத்தம் 3.6 இலட்சம் மரக் கன்றுகள் இப்போது இலவச விநியோகத்திற்காகத் தயார் நிலையில் உள்ளன.

ஏறத்தாழ 2 இலட்சம் நெட்டை ரகத் தென்னங்கன்றுகள் தற்போது பவானிசாகரில் உள்ள 'மாநில மாபெரும் தென்னை நாற்றுப் பண்ணையில்' விற்பனைக்காகத் தயார் நிலையில் உள்ளன.

# அவர்கள் சொன்னார்கள்

★ உலகத்திலே மிகவும் மலிவான பொருள் அன்புதான். வாங்குகின்றவனுக்கும், கொடுக்கின்றவனுக்கும் அது பன்மடங்கு மிகுதியான இலாபத்தைத் தரும்.

—இங்கர்சால்

★ ஆரோக்கியத்தைக் காத்துக் கொள்வது ஒழுக்கமுறையிலும், சமய முறையிலும் கடமையாகும். ஏனெனில், உடல்நலமே சமூக ஒழுக்க முறைகளுக்கும் அடிப்படையாவது. உடல் நலமில்லாதபோது, நாம் யாருக்கும் பயன்பட முடியாது.

—ஜான்ஸன்

★ ஒழுக்கத்தில் சிந்தனையில்லாத இளைஞன், வாழ்க்கையில் எது உண்மை, எது போலி என்று கண்டு கொள்ளாமல், எல்லாக் காரியங்களிலும் ஏமாற்றம் அடைவான்.

—டால்ஸ்டாய்

★ மகிழ்ச்சி, மிதமான உணவு, போதிய ஓய்வு - ஆகியவை மருத்துவரை வீட்டுக்குள் விடமாட்டா.

—லாங்ஃபெல்லோ

**மாவட்டத் தொழில் மையம்**

படித்து வேலையற்ற இளைஞர்களுக்கு இந்தியப் பிரதமரின் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ், 1990-91-ஆம் ஆண்டிற்கு 400 நபர்களுக்குப் பதிலாக இதுவரை 285 நபர்களுக்கு ரூ.59.49 இலட்சம் பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது. 1991-92-ஆம் ஆண்டிற்குக் குறியீடு 400 பேர் என நிர்ணயிக்கப்பட்டதில், இதுவரை 156 நபர்களுக்குக் கடன் வழங்க வங்கிகளுக்குப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. புதிய சிறுதொழில் கூடங்கள் நிறுவும் திட்டத்தின்கீழ், 71 நிறுவனங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஆதிதிராவிடர் குடும்பங்களுக்கு உதவும் திட்டத்தின்கீழ், 19 சிறுதொழில் பதிவு, குடிசைத் தொழில் பதிவுச் சான்று வழங்கப்பட்டுள்ளன.

உலக வங்கி நிதியுதவியுடன் கூடிய தேசிய பட்டு வளர்ச்சித் திட்டம் 1989-90 முதல் பெரியார் மாவட்டம் உட்பட 10 மாவட்டங்களில் செயற்படுத்தப்பட்டு வருகிறது. தேசிய பட்டு வளர்ச்சித் திட்டத்திற்கென உலக வங்கி ரூ.41.77 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. நடப்பாண்டு (1991-92-ஆம் ஆண்டு) மூன்றாம் ஆண்டாக இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பெரியார் மாவட்டத்தில் சமவெளிப் பகுதியில் 2118.10 ஏக்கரில் இறைவைச் சாகுபடியில் கீழ் மல்பரி பயிர் செய்து, 2,545 விவசாயிகள் பட்டு வளர்ப்புப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்த ஆண்டில் (1990-91) 3.50 மெட்ரிக் டன் பட்டுக் கூடுகள் உற்பத்தி செய்யப்பட்டது. நடப்பாண்டில் 4 மெட்ரிக் டன் பட்டுக் கூடுகள் உற்பத்தி செய்யத்திட்டமிடப்பட்டுள்ளது.

தனி நபர்களுக்கான சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ், இவ்வாண்டு ஜூன், ஜூலைத் திங்களில் 209 நபர்களுக்கு ரூ.11.35 இலட்சம் நிதியுதவி அனுமதிக்கப்பட்டுள்ளது. ரூ.11.34 இலட்சம் மதிப்புள்ள 0.61 ஆயிரம் மீட்டர் கதர் உற்பத்தியும், ரூ.2.33 இலட்சம் மதிப்புள்ள நூல் உற்பத்தியும், கதர் விற்பனை மூலம் ரூ.1.63 இலட்சம் மதிப்புள்ள கதர் விற்பனையும் செய்யப்பட்டது. இதன்மூலம் 1,259 நபர்கள் பயன் பெற்றுள்ளனர்.

வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கும் திட்டத்தின்கீழ், பிற்பட்ட வகுப்பினர் மற்றும் மிகவும் பிற்பட்ட வகுப்பினர்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க ரூ.2,05,000 ஒதுக்கீடு செய்யப்பட்டதில், ரூ.44 ஆயிரம் செலவு செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் 71 நபர்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. ●

# நாகப்பட்டினம் ஒரு வரலாற்றுப் பின்னணி

**நடன. காசிநாதன்**
இயக்குநர்
தொல்பொருள் ஆய்வுத்துறை

தமிழகக் கடலோரப் பட்டினங்களில் ஒன்றாகத் திகழும் நாகப்பட்டினம் 'கடல் சூழ் நாகை' என்று பழங்காலம் தொட்டு வழங்கி வந்திருக்கிறது. இவ்வூர் 'நாகப்பட்டினம்' என்றும், 'நாகைக் காரோணம்' என்றும், 'நாகநகரம்' என்றும் அழைக்கப்பட்டிருக்கிறது. இவ்வூர் இறைவனை நாகர்கள் வழிபட்டதால் 'நாகை' என்று பெயர் பெற்றதென்று ஒரு கருத்து உண்டு. நாகராசனாகிய ஆதிசேடனால் இவ்வூர் இறைவன் வணங்கப் பெற்றமையால் 'நாகை' எனப் பெயர் பெற்றது என்று மற்றொரு கருத்தும் நிலவுகிறது.

கி.பி. முதலாம் நூற்றாண்டில் இந்தியாவுக்கு வருகை புரிந்த தாலமி என்பார் நாகப்பட்டினத்தை 'நிக்கௌவா' என்று குறிப்பிட்டுள்ளார். கி.பி. 9-ஆம் நூற்றாண்டில் தமிழகம் வருகை புரிந்த இட்சிங் என்பார் 'னகவதனா' என்று நாகையைக் குறிப்பிட்டுள்ளார். போர்ச்சுகீசிய நாட்டைச் சார்ந்த மார்க்கோபோலோ என்பவர் நாகப்பட்டினத்தை 'பட்டன்' என்றும், ரசீதுத்தீன் என்பவர் 'மலிபட்டண்' என்றும் அழைத்துள்ளனர். தம்மசேத்தீ என்னும் இடத்தில் கிடைத்த கல்வெட்டில் இவ்வூர் 'நௌடப்பட்டணா' என்று குறிக்கப்பிட்டிருக்கிறது. பெரும்பாணாற்றுப்படையில் காணப்பெறும்

''பல்வேற்றிரையர் படர்இவர் ஆவர்''

என்ற வரிக்குப் பொருள் எழுதிய நச்சினார்க்கினியர் தம் உரையில் கீழ் வருமாறு குறிப்பிட்டுள்ளார்:

'நாகப்பட்டினத்துச் சோழன் பிலத்துவாரத்தால் நாகலோகத்தே சென்று நாககன்னியைப் புணர்ந்த காலத்து அவள் யான் பெற்ற புதல்வனை என் செய்வேனென்ற பொழுது, தொண்டையை அடையாளமாகக் கட்டிக் கடலிலேவிட அவன் வந்து கரையேறின் அவற்கு யான் அரசவுரிமையை எய்துவித்து நாடாட்சி கொடுப்பேனென்று அவன் கூற, அவளும் புதல்வனை அங்ஙனம் விரவிடத் திரைதருதலின், திரையனென்று பெயர் பெற்ற கதை கூறினார்' ஆதலால் நாகப்பட்டினத்தில் சோழர்கள் ஆட்சி செய்து இருக்கின்றனர் என்பது இவ்வுரையின் மூலம் தெரிய வருகிறது.

நாகப்பட்டினம் சங்க காலத்தில் காவிரிபூம்பட்டினத்திற்கு அடுத்த நிலையில் சிறந்த துறைமுகப்பட்டினமாக விளங்கி இருத்தல் வேண்டும் என்பது நாகப்பட்டினத்தில் கீழ்த்திசை நாடுகளைச் சார்ந்த மாமன்னர்கள் புத்த விகாரம் அமைத்து வழிபட்டு வந்ததன் மூலம் தெரிகிறது. நாகப்பட்டினம் சமயப்பொறை மிகுந்த ஒரு திருத்தலமாக விளங்கியிருந்தது என்பது இங்கு அமைந்திருந்த பௌத்த விகாரங்கள் மூலமாகவும் இந்து சமயக் கோயில்கள் மூலமாகவும் தெரிய வருகிறது. இத்தலம் தொன்று தொட்டு பௌத்தர்களின் மிக முக்கிய நகரங்களில் ஒன்றாக இருந்து வந்திருக்கிறது.

''உற்றவர்க் குறுப்பறுத் தெரியின்கணுயத்தலையன்ன
தீமை செய்வோர்க்கு மொத்த மனத்ததாய்
நற்றவர்க்கு இடைமாகின்றது நாகையே''

என்று பௌத்தர்கள் இந்நகரைப் புகழ்ந்து பாடியுள்ளனர்.

இங்கு மௌரியப் பேரரசன் அசோகன் எடுப்பித்த 'பதாதிட்ட விகாரை' இருந்ததாகக் குறிப்பிடப் படுகிறது. இந்த விகாரையில் கி.பி. 5-ஆம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் ஆச்சாரிய தர்மபாலர் தங்கி இருந்து 'நெட்டிபகரண்ட்டகதா' என்னும் உரை நூலை பாலி மொழியில் எழுதினார் என்றும், இங்கிருந்த 'நாகாநன' விகாரையில் 'மகாகாசபதோர்' தங்கி இருந்தார் என்றும் சொல்லப்படுகிறது.

சைவ சமயக் குரவருள் முதல் மூவரான அப்பரும், சம்பந்தரும், சுந்தரரும் இத்தலத்து ஈசனை வாயாரப் புகழ்ந்து பாடியிருப்பது தேவாரத் திருப்பதிகங்கள் மூலமாகத் தெரிய வருகிறது.

''மனைவி தாய் தந்தை மக்கள்
மற்றுள சுற்றம் என்னும்
வினையுளே விழுந்தழுந்தி
வேதனைக்கு இடமாகாதே
கனையுமா கடல் சூழ் நாகை மன்னு
காரோணத்தானை
நினையுமா வல்லீராகில் உய்யலா
நெஞ்சினீரே''

என்று அப்பர் பெருமான் இவ்வூர் இறைவனைப் பாடியுள்ளார். இந்நாகப்பட்டினம் கி.பி. 6-ஆம் நூற்றாண்டிலும் கடலை ஒட்டியே அமைந்திருந்தது என்பது 'கடல் சூழ் நாகை' என்ற தொடரால் தெளிவாகிறது. மேலும் மற்றொரு பாடலில் 'கற்றவர் பயிலும் நாகை' என்று அப்பர் பாடியிருப்பதால் இந்நாகப்பட்டினத்தில் கற்றறிந்த பெருமக்கள் பலரும் வாழ்ந்து இருந்தனர் என்பதும் தெரிய வருகிறது.

மற்றொரு பாடலில் ''கடிகமழ் சோலை சுலவு கடல் நாகை' என்றும் 'வங்க மலி கடல் நாகை' என்றும் கூறியிருப்பதால் மணம் வீசும் சோலைகள் சூழ்ந்த கடல் அருகேயுள்ள நாகப்பட்டினம் என்றும்; கப்பல்கள் நிறைந்த கடலை உடைய நாகப்பட்டினம் என்றும் இந்நாகப் பட்டினத்தின் சிறப்பை வியந்து பாராட்டியுள்ளார். கப்பல்கள் மலிந்திருந்தன என்று கூறப்பெற்றிருப்பது இவ்வூர் ஒரு சிறந்த வணிகத் தலமாகவும் விளங்கியிருந்தது என்பதைப்

புலப்படுத்துவதாக உள்ளது. இந்நகரில் அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவரான அதிபத்தநாயனார் அவதரித்தார் என்றும் கூறப்படுகிறது.

கி.பி.720-இல் பல்லவ மன்னன் இராசசிம்மன் காலத்தில் இந்நாகப்பட்டினத்தில் சீன அரசனின் வேண்டுகோளின்படி பௌத்த விகாரம் ஒன்று எழுப்பப்பட்டது. பிற்காலத்தில் அவ்விகாரைச் 'சீனா கோயில்' என்று வழங்கி வந்ததாகத் தெரிய வருகிறது.

மார்க்கோபோலோ தம்முடைய பயண நூலில் நாகப்பட்டினத்தில் 'சீனா கோயில்' என்னும் பெயருள்ள ஒரு கோயில் இருந்ததாகக் குறிப்பிட்டுள்ளார்.

கி.பி. 8 அல்லது 9-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த வைணவப் பெரியாருள் ஒருவராகிய திருமங்கையாழ்வார் நாகப்பட்டினத்தில் உள்ள பௌத்த விகாரையில் இருந்த முழுவதும் பொன்னால் செய்யப்பட்டிருந்த புத்தர் உருவச் சிலையைக் கவர்ந்து கொண்டு போய், அதனை உருக்கி அப்பொன்னைக் கொண்டு திருவரங்கத் திருப்பதியில் திருமதில் எழுப்புதல் போன்ற திருத்தொண்டுகளைச் செய்தார் என்பது குருபரம்பரை சுபாவம் முதலிய வைணவ நூல்களினால் தெரிய வருகிறது.

கி.பி. 985 முதல் 1014 வரை சோழ நாட்டை ஒப்பாரும் மிக்காருமின்றி உயர்ந்த நிலையில் அரசாட்சி செய்த மாமன்னன் இராசராசன் காலத்தில் நாகப்பட்டினத்தில் 'ஸ்ரீசைலேந்திர சூடாமணி விகாரை' என்னும் பௌத்த பள்ளி ஒன்று கட்டப்பட்டது. இப்பள்ளி சுபத்திரா தீவில் ஸ்ரீ விஜய என்னும் ராஜ்யத்தையும் பர்மாவில் கடாரம் என்னும் ராஜ்யத்தையும் ஆண்ட ஸ்ரீமாற விஜயோதுங்கன் என்னும் அரசனின் வேண்டுகோளினை ஏற்று இராசராசன் ஆணை பிறப்பித்ததையொட்டி கட்டப்பட்டது. இவ்விகாரை ஸ்ரீமாறவிஜயோதுங்கர்மனின் தந்தையான சூடாமணி என்பவன் பெயரால் கட்டப்பட்டதால் சூடாமணி விகாரை என்று பெயர் சூட்டப்பெற்றது. இவ்விகாரைக்கு 'இராசராசன் பெரும்பள்ளி' என்ற பெயரும் வழங்கப் பெற்றதாகத் தெரிய வருகிறது. இவ்விடத்திலேயே மற்றொரு விகாரை எழுப்பி அதற்கு 'இராஜேந்திர பெரும்பள்ளி' என்ற பெயரைக் கடாரத்தரசன் சூட்டினான் என்பதும் செப்புப் பட்டயத்தின் மூலம் அறிய முடிகிறது. இப்பள்ளிக்கு இராசராசன் சத்திரிய சிம்ம வளநாட்டுப் பட்டணக் கூற்றத்து ஆனைமங்கலம் என்ற ஊரைக் கொடையாக அளித்தான் என்று பெரிய லெய்டன் செப்பேட்டின் மூலமாகத் தெரிய வருகிறது. இராசராசன் அளித்த கொடையை மேலும் உறுதிப்படுத்தும் வகையில் குலோத்துங்க சோழன் மற்றொரு செப்புப் பட்டயத்தையும் வெளியிட்டான். அச்செப்புப் பட்டயம் தற்போது சிறிய லெய்டன் செப்புப்பட்டயம் என்று வழங்கப்படுகிறது.

## இந்த மாவட்டத்தில்...

**புதிதாக மலர்ந்துள்ள நாகப்பட்டினம் காயிதேமில்லத் மாவட்டம்-நாகப்பட்டினம், திருவாரூர், நன்னிலம், குடவாசல், மயிலாடுதுறை, தரங்கம்பாடி, சீர்காழி, மன்னார்குடி, நீடாமங்கலம், திருத்துறைப்பூண்டி, வேதாரண்யம் ஆகிய 11 வட்டங்களைக் கொண்டதாக இருக்கும்.**

**இந்த மாவட்டத்தின் மக்கள் தொகை 23,95,000 ஆகும். இம்மாவட்டத்தில் 19 ஊராட்சி ஒன்றியங்கள் உள்ளன. நாகை, திருவாரூர், மயிலாடுதுறை, சீர்காழி, மன்னார்குடி ஆகிய 5 நகராட்சிகள் உள்ளன. மொத்தம் 1,185 கிராமங்கள் இந்த மாவட்டத்தில் இருக்கும்.**

**தஞ்சை மாவட்டத்திலிருந்து பிரிக்கப்பட்ட இந்த மாவட்டத்தின் முதலாவது மாவட்ட ஆட்சித் தலைவராக திரு கே. ஸ்கந்தன் இ.ஆ.ப. அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்.**

இவ்வூரில் கிடைக்கும் கல்வெட்டுக்களில் மிகவும் பழமையானது சோழ அரசன் முதலாம் இராசராசன் காலத்தவையே. இவன் காலக் கல்வெட்டுக்களில் இவ்வூர் பட்டினக் கூற்றத்து நாகப்பட்டினம் என்று குறிக்கப்படுகின்றது. இவனது மகனான முதலாம் இராசேந்திரனின் தொடக்கக் காலக் கல்வெட்டுகளிலும் நாகப்பட்டினம் என்றே குறிப்பிடப்பட்டுள்ளது. ஆட்சியின் இறுதிக் காலத்தில் 'சோழகுல வல்லிப் பட்டினம்' என்று மட்டுமே வழங்கிப் பின் இரண்டாம் இராசராசன் காலத்தில் நாகப்பட்டினமாகிய சோழகுல வல்லிப்பட்டினம் என்று வழங்கிவந்துள்ளது.

முதலாம் இராசேந்திரன் காலத்தில் ஸ்ரீ விஜய அரசனின் நிகரான் (பிரதிநிதி) ஏறன் சடையனாயன தேவரகண்ட ஆச்சார்யன் என்பான் பாவை விளக்கு, குறுக்கு விளக்கு, மட்ட விளக்கு போன்ற பல விளக்குகளால் ஒப்பனை செய்தான் என்றும், (161/1956-57) வெள்ளியால் செய்து எழுந்தருளச் செய்யப்பட்ட 'நாகை அழகர்க்கு' விலையிலா பச்சைக் கற்களாலும், மணி கற்களாலும் ஆன அணிகலன்களைக் கொடையளித்தான் என்றும் தெரிவிக்கின்றன.

மேலும் கிடாரத்தரையனின் (கடாரத் தரசன்) நிகராளி ஸ்ரீ குறுத்தன் கேசவனாகிய அகரலோகை என்பான் அர்த்தநாரி படிமத்தை எழுந்தருளச் செய்து, திருக்காரோணமுடையார்க்கு ஒவ்வொன்றும் 87.50 கழஞ்சுச் சீனப் பொன்னாலான அணிகலன்களையும், 60.75 கழஞ்சு உண்டிகைப் பொன்னாலான அணிகலன்னையும் கொடையளித்துள்ளான்.

கி.பி. 14-ஆம் நூற்றாண்டில் இவ்வூரில் சீனர்கள் வியாபாரத்தின் பொருட்டு வந்து தங்கி இருந்தார்கள் என்றும், இவ்வூர் புத்தப் பள்ளியில் சீனர்கள் ஒரு கல்வெட்டு எழுதி வைத்தார்கள் என்றும் தெரிய வருகிறது. கி.பி.14-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் எழுதப்பெற்ற தாலோ-இ- சிலியோ என்ற சீன நூலும், சீன மொழியில் எழுதப்பெற்ற கல்வெட்டு, நாகப்பட்டினம் பௌத்தப் பள்ளியில் இருந்ததாகக் கூறுகிறது. கி.பி. 15-ஆம் நூற்றாண்டில் பர்மா தேசத்தில் ஹம்சபதி நாட்டை ஆண்ட ராமாபதிராசன் அனுப்பிய 11 பௌத்த பிட்சுகளும் சித்திரதூதன் என்ற தூதனும் இலங்கை சென்று தங்கள் பணியினை முடித்துக் கொண்டு மீண்டும் தங்கள் நாட்டிற்குக் கப்பலில் செல்கையில் கப்பல் புயலில் அகப்பட்டு சிதைந்து போக, நற்காலமாக நாகப்பட்டினத்துக் கடற்கரையை அடைந்து உயிர் பிழைத்தார்கள் என்றும்; நாகப்பட்டினத்தில் 'பதரீகாராமம்' என்னும் பௌத்தப் பள்ளியில்

தங்கி இருந்தார்கள் என்றும், அப்பள்ளிக்கு அருகில் இருந்த சீன தேசக்குகை வடிவமாகக் கட்டப்பட்டிருந்த பள்ளியில் புத்த தேவரை வணங்கினார்கள் என்றும் பர்மா தேசத்துக் கல்யாணி நகரத்துக் கல்வெட்டு கூறுகிறது. இந்நிகழ்ச்சி 1474-ஆம் ஆண்டு நிகழ்வுற்றது.




கி.பி. 1725-ஆம் ஆண்டில் சீனா கோயில் என்னும் பெயருள்ள ஒரு கோயில் நாகப்பட்டினத்தில் இருந்ததாக வேலண்டின் எழுதி இருக்கிறார், அதேபோன்று நாகப்பட்டினத்திற்கு வடக்கே ஒன்று அல்லது இரண்டு கல் தொலைவில் 'புதுவெளிக்கோபுரம்' என்றும் 'சீனா கோயில்' என்றும் 'கருப்புச் கோயில்' என்றும் பெயருள்ள கோபுரம் இருந்தது என்றும், இக்கோபுரம் நாகப்பட்டினத்தில் ஓர் அடையாளமாகக் கடலில், தோன்றியது என்றும் இதனைத்தாம் நேரில் 1849-இல் ஆண்டில் கண்டதாகவும் சர் வால்டர் எலியட் எழுதியுள்ளார். இந்தக் கோபுரம் இருந்த இடத்தில் யேசுவின் பாதிரிமார் சர்ச் அமைத்து இருக்கிறார்கள். இக்கோபுரத்தை இடிப்பதற்கு 1867-இல் அரசாணை பெற்றிருக்கிறார்கள். அவ்வாறு அங்கிருந்த பழைய கோயிலை இடித்துவிட்டு புதிய சர்ச் அமைப்பதற்குத் தோண்டிய பொழுது ஐந்து சிறிய பௌத்த விக்கிரகங்கள் கண்டெடுக்கப்பட்டன. அவற்றுள் நான்கு விக்கிரகங்கள் உலோகத்தினாலும் ஒன்று பளிங்கினாலும் செய்யப்பட்டுள்ளன. அவ்விக்கிரகங்களில் ஒன்று புத்தர் நின்று கொண்டு உபதேசம் செய்வது போல் அமைந்திருப்பது ஆகும். அந்நாள் ஆளுநர் நேபியர் பிரபு நாகைக்குச் சென்ற பொழுது அங்கிருந்த பாதிரிமார்கள் மேற்காணும் அச்சிலையை அவருக்குப் பரிசாக அளித்தது தெரிய வருகிறது அந்த விக்கிரகத்தில் கி.பி.11-12-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த தமிழ் எழுத்தில் 'சுவஸ்த ஸ்ரீ கமபண்டிதர் உய்ய கொண்ட நாயனார்' என்று எழுதியிருந்தது அறிய முடிகிறது. நாகப்பட்டினத்தில் தற்போதுள்ள 'புத்த கோட்டம்' என்னும் பெயருள்ள அக்கிரகாரம் பண்டைய பௌத்தக் கோயில் இருந்த இடமாக இருந்திருக்கும் என்றும், கோயில் அழிந்த பிறகு இந்த அக்கிரகாரம் தோன்றி இருக்க வேண்டும் என்றும் டாக்டர் கிருஷ்ணசாமி ஐயங்கார் அவர்கள் தம் நூலில் எழுதியிருக்கிறார்.

நாகப்பட்டினத்தில் இருந்து கண்டெடுக்கப்பட்ட வேறு சில பௌத்த உருவச்சிலைகள் தற்போது சென்னை அரும்பொருட்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளன.

**கவி காளமேகமும்-நாகையும்**

கவி ரத்தினம் என்று புலவர்களால் போற்றப்பட்டவர் கவி காளமேகம் ஆவார். இவர் தென்னார்க்காடு மாவட்டம் எண்ணாயிரம் என்ற ஊரில் பிறந்தவர் என்பது கல்வெட்டு வழி தெரிய வருகிறது. இவர் தமிழகத்தின் பல ஊர்களுக்கும் சென்று அங்கு தங்கி, பாடல்கள் இயற்றும் தன்மை பெற்றவர். அவ்வூரினர் நன்கு உபசரித்தால் வாழ்த்துக் கவிதையும், சரியாக உபசரிக்கவில்லை என்றால் வசையும் பாடுவது இவரது வழக்கம்.

அவ்வாறு செல்லுகையில் தஞ்சை மாவட்டம் நாகைப் பட்டினத்துக்கும் சென்று அங்குள்ள 'நாகைக்காத்தான் சத்திரம்' என்ற உணவு வழங்கும் சத்திரத்தில் தங்கினார். இரவு நெடு நேரம் ஆகியும் சத்திரத்தார் அவருக்கு உணவு வழங்கவில்லை. கவி காளமேகத்திற்குப் பசி அதிகம் மேலிடவே, சிலேடையாக ஒரு பாடல் பாடினார்.

கத்துங்கடல் சூழ்நாகைக் காத்தான்தன்
சத்திரத்தில்
அத்தமிக்கும் போதில்
அரிசிவரும்-குத்தி
உலையிலிட ஊரடங்கும்;
ஓரகப்பை அன்னம்
இலையிலிட வெள்ளி
எழும்.

இப்பாடலை உணர்ந்த சத்திரத்தார், கவிஞர் தம் சத்திரம் மீது வசை பாடியதாக உணர்ந்து, பிறகு நிலைமையைக் கூறி விரைவில் உணவு படைத்தனர். அதன் பிறகு புலவர் அதே பாடலுக்கு, சிறந்த பொருள் படும்படி, உலைக்கொதிக்கும் நேரத்தில் எங்கிருப்பினும் அரிசி வந்து விடும். உணவை ஊரில் உள்ள அனைவரும் உண்டு பசி அடங்குவர். அன்னம் இலையிட்டுப் பார்த்தால் வெள்ளிக் கிண்ணம் போல் தூய வெளுப்புடன் காணப்படும் எனக் கூறியதும் பாடலின் சிலேடை நயத்தை அறிந்து அனைவரும் அக மகிழ்ந்தனர்.

நாகையில் டச்சு நாட்டுப் போர் வீரர்களின் கல்லறைகள் காணப்படுகின்றன. இவற்றின் அருகில் ஒரு சர்ச் இருந்திருக்கிறது. கி.பி.1758-இல் கோல்கோப் மற்றும் ஸ்க்வார்ட்ஸ் ஆகிய வெளிநாட்டார் இங்கு வருகை புரிந்து இங்கு வாழ்ந்து வந்த 200 ஜெர்மானியர்களுக்கு உபதேசம் செய்ததாகத் தெரிய வருகிறது.

மேற்காணும் வரலாற்றுச் செய்திகளைக் கொண்டு பார்க்கையில் இந்நகரம் மிகப் பழங்காலந் தொட்டே சீரும் சிறப்பும் பெற்ற வணிகத் தலமாகவும், வழிபாட்டுத் தலமாகவும் கடற்கரையையொட்டி மிளிர்ந்திருக்கிறது என்பதையும் அறியலாம். அத்தகைய பெருமையையுடைய இந்நகர், 18.10.'91 அன்று காயிதே மில்லத் மாவட்டத்தின் தலைநகரமாக மாண்புமிகு முதல்வரால் ஆக்கப்படுவது, தங்கத்தால் அமைக்கப்பட்ட விக்கிரத்துக்கு வைரக் கீரீடம் சூட்டுவது போன்றதாகும்.

ஆசிரியரும் வெளியிடுபவரும் தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை. அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண் : 568926, 568927

# எளிமையானவை! நேர்த்தியானவை!
# மேன்மை மிகுந்தவை!
# தோற்றம் அளிப்பவை!



## கோ-ஆப்டெக்ஸ்

தமிழ்நாடு கைத்தறி

- ★ பருத்தி, பாலியஸ்டர், பட்டுச் சேலைகள்.
- ★ பருத்தி, பாலியஸ்டர் சர்ட்டிங்ஸ், பட்டுத் துணிகள்.
- ★ பருத்தி, பாலியஸ்டர் சூட்டிங்ஸ்.
- ★ லுங்கிகள், துவாலைகள். வேட்டிகள்.
- ★ படுக்கை விரிப்புகள், அலங்காரத் துணி வகைகள்.

அருகாமையில் உள்ள கோ-ஆப்டெக்ஸ்
விற்பனை நிலையத்தை அணுகவும்.


தமிழரசு
பதிவு எண். M. 8676
Licence No. TN/MS(C)/PP-23